REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஜூலை 11 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 தினகரன்

1932-2024 ANNIVERSARY

வரு. 92 இல. 164 | Thursday 11, July, 2024 | 20 பக்கங்கள் | 50/-




## அரசாங்கம் பெறும் வரி வருமானத்தால்

# தொடர்ந்தும் சம்பள உயர்வை பெற்றுக் கொடுக்க முடியாது

## அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

அரசாங்கம் அறவிடும் வரியின் மூலம் பெறப்படும் மொத்த வருமானத்தில் 50% தொடக்கம் 86% வரை அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியத்துக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளதுடன், 2020 ஆம் ஆண்டு வருமானம் குறைவாக இருக்கும் போது மொத்த வருமானத்தில் 86.7% சம்பளம் மற்றும் ஓய்வூதியத்துக்காகப் பயன்படுத்தப்பட்டதாக அரசாங்கத்தின் அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான கலாநிதி பந்துல குணவர்த்தன நேற்று (10) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன கூறியதாவது:

யார் ஆட்சி செய்தாலும், எந்த அரசாங்கமும் அன்றாடச் செலவுகளுக்குப்

சம்பளம் மற்றும் ஓய்வூதிய கொடுப்பனவு செலவு அரச வரி வருமான விகிதாசரப் படி

| வருடம் | சம்பளம் மற்றும் வேதனம் (ரூ. மில்) | ஓய்வூதிய கொடுப்பனவு (ரூ. மில்) | சம்பளம் மற்றும் வேதனம் ஓய்வூதிய கொடுப்பனவு (ரூ. மில்) | வருமான வரி (ரூ. மில்) | சம்பளம் மற்றும் ஓய்வூதிய கொடுப்பனவு செலவு அரச வரி வருமான விகிதாசரப் படி |
|---|---|---|---|---|---|
| 2014 | 440,982 | 126,136 | 567,118 | 1,050,362 | 53.99 |
| 2015 | 561,730 | 155,320 | 717,050 | 1,355,779 | 52.89 |
| 2016 | 576,471 | 171,903 | 748,374 | 1,463,689 | 51.13 |
| 2017 | 588,518 | 181,059 | 769,577 | 1,670,178 | 46.08 |
| 2018 | 626,045 | 194,495 | 820,540 | 1,712,318 | 47.92 |
| 2019 | 686,452 | 227,670 | 914,122 | 1,734,925 | 52.69 |
| 2020 | 794,158 | 257,833 | 1,051,991 | 1,216,542 | 86.47 |
| 2021 | 845,680 | 269,827 | 1,115,507 | 1,298,019 | 85.94 |
| 2022 | 956,210 | 309,067 | 1,265,277 | 1,751,132 | 72.25 |
| 2023 | 1,002,000 | | | 3,130,000 | |

06

# குறைந்த வருமானம் பெறும் 50,000 குடும்பங்களுக்கு 'ரன்தொர' உருமய

## எனது வீடு எரிக்கப்பட்ட பின்னரே வீட்டின் பெறுமதியை உணர்ந்தேன்

### கொழும்பில் 31 அடுக்குமாடிகளின் 130 வீடுகளுக்கு ஜனாதிபதி தலைமையில் உரிமை வழங்கும் நிகழ்வு



இரண்டு வருடங்களுக்கு முன்னர் தமது வீடு தீவைத்து அழிக்கப்பட்ட போது, ஒரு வீட்டின் பெறுமதியை கடுமையாக உணர்ந்ததாகவும் அதன் பெறுமதியை உணர்ந்ததாலேயே, கொழும்பிலுள்ள அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் 2,50,000 பேருக்கு வீடுகளின் முழுமையான உரிமையையும் வழங்கும் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அடுக்குமாடி குடியிருப்புகளில் வாழ்கின்ற, குறைந்த வருமானம் பெறும் இரண்டரை இலட்சம் குடும்பங்களுக்கு வீடுகளின் பூரண உரிமையை வழங்கும் வேலைத்திட்டத்தின் முதற்கட்டமாக 50,000 வீடுகளை வழங்கும் "ரன்தொர உருமய" ஆரம்ப நிகழ்வு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றுகையிலே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். 06

# வாகனங்கள் இறக்குமதி தீர்மானம் ஆகஸ்ட் 02 ஆவது வாரத்தில் முடிவு

## சுற்றுலாத்துறைக்கு முன்னுரிமையளிக்க தீர்மானம்



லோரன்ஸ் செல்வநாயகம்

வாகன இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குவது தொடர்பான இறுதித் தீர்மானம் ஆகஸ்ட் இரண்டாம் வாரத்தில் எடுக்கப்படுமென, நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு கடந்த (04) கூடி இறுதி அறிக்கையை ஆகஸ்ட் மாதம் இரண்டாவது வாரத்துக்குள் அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கு இணக்கம் தெரிவித்ததாக 06

## அதிபர், ஆசிரியர்கள் சம்பள முரண்பாடு

# திறைசேரியுடன் கலந்துரையாடி பிரச்சினைக்கு விரைவில் தீர்வு



லோரன்ஸ் செல்வநாயகம்

அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் சம்பள முரண்பாடு தொடர்பில் அமைச்சரவைக்கு பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால், கல்வியமைச்சின் செயலாளரும் திறைசேரி அதிகாரிகளும் கலந்துரையாடி இதற்கு தீர்வு காண்பர் என, கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்வியொன்றுக்குப் 06

# அரசாங்க ஊழியரின் சம்பளத்தை அதிகரிக்க ரூ.300 பில்லியன் தேவை

## பொருளாதார நெருக்கடிக்கு ஒப்பீட்டளவில் தீர்வு காணப்பட்டுள்ளது



லோரன்ஸ் செல்வநாயகம்

அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை மீண்டும் அதிகரிப்பதாயின் வருடாந்தம் 300 பில்லியன் ரூபாவை மேலதிகமாக ஒதுக்க நேருமென, நிதி இராஜங்க அமைச்சர் செஹான் சேமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார். பணம் அச்சிடாமல் சம்பளத்தை அதிகரிப்பதானால் வற் வரியை 22 சதவீதத்தாலும் நிறுவன வரியை 42 சதவீதத்தாலும் அதிகரிக்க நேரும் என சபையில் தெரிவித்த அவர், இதற்கு நாட்டு மக்கள் இணக்கம் தெரிவிப்பார்களா? எனவும் கேள்வி எழுப்பினார். 06

# சட்டத்துக்கு மாறாக செயற்பட்ட ரயில் அதிபர்கள் பணி நீக்கம் செய்யப்படுவர்

சுபாஷினி சேனாநாயக்க

சட்டத்தை மீறி பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்ட ரயில் நிலைய அதிபர்கள் பணிக்கு சமூகமளிக்காவிட்டால், சேவையிலிருந்து விலகியது போன்று கடிதம் அனுப்பப்படுமென ரயில்வே பொது முகாமையாளர் எஸ்.எஸ்.முதலிகே தெரிவித்துள்ளார். எனவே, சகல ரயில் நிலைய அதிபர்கள் மற்றும் ரயில் கட்டுப்பாட்டாளர்கள் உடனடியாக தாங்கள் பணிபுரியும் ரயில் நிலையம் அல்லது அருகிலுள்ள ரயில் நிலையத்துக்கு தகவல் தெரிவிக்க வேண்டுமெனவும் ரயில்வே பொது முகாமையாளர் எஸ்.எஸ்.முதலிகே தெரிவித்துள்ளார்.சகல நிலையப் பொறுப்பதிகாரிகள், ரயில் கட்டுப்பாட்டாளர்கள் ஆகியோருக்கு இறுதி அறிவிப்பை விடுத்துள்ள அவர், இந்த உத்தரவுக்கு இணங்காத ரயில் 06

# தமிழர்களின் பிரச்சினைகளை தீர்க்கும் சட்டமூலங்களை சமர்ப்பிக்க வேண்டும்

## ஜனாதிபதி மீதான நம்பிக்கையை அதிகரிக்க இதுவே வழி



லோரன்ஸ் செல்வநாயகம்

பொதுவாக ஜனாதிபதி வேட்பாளர்கள் தாம், ஜனாதிபதியானால் செய்யவுள்ள வாக்குறுதிகளை மட்டும் தான் வழங்க முடியும் என்றும், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தமிழ் மக்களுக்கு செயல் மூலம் இப்போதே சில விடயங்களை செய்துவிட முடியுமெனவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்பி 06

## கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான்

# இலங்கை மாணவரின் வீசா காலத்தை 04 வருடங்களாக நீடிக்க வேண்டுகோள்



இலங்கை மாணவர்களுக்கான விசாவை 04 வருடங்களுக்கு நீடிக்குமாறு மலேசியா உயர் கல்வி அமைச்சரிடம், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில்தொண்டமான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மலேசியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், மலேசியா உயர் கல்வி அமைச்சர் ஷாம்ப்ரி அப்துல் காதிரை சந்தித்து இலங்கைக்கும் மலேசியாவுக்குமான கூட்டுத்திட்டம் குறித்து கலந்துரையாடினார். 06

## ஜனாதிபதித் தேர்தலை நடத்துதல்; சபை ஒத்திவைப்பு விவாதம் இன்று

லோரன்ஸ் செல்வநாயகம்

சட்டரீதியான ஏற்பாடுகளுக்கிணங்க உரிய காலத்தில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துதல் தொடர்பான ஒத்திவைப்பு வேளை விவாதத்தை, இன்று நடத்துவதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பாஅபேவர்தன தலைமையில் நேற்று இடம்பெற்ற பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்ற 06

## லங்கா சதொசவில்

# பயறு, கிழங்கு, சீனி விலைகள் குறைப்பு

பயறு, கிழங்கு, சீனி உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் சில வற்றின் விலைகளைக்குறைத்துள்ளதாக லங்கா சதொச அறிவித்துள்ளது.

இவை அனைத்தும் உடன் அமுலாகும் வகையில், விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாகவும் லங்கா சதொச நிறுவனம் அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் நள்ளிரவு (09) முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வர்த்தகம் மற்றும் 06

# பணிப்புறக்கணிப்பில் ஈடுபடாத அதிபர், ஆசிரியருக்கு சம்பள உயர்வு

**தரம் 03 ஆசிரியர், ரூபா 525**

**தரம் 02 ஆசிரியர், ரூபா 1335**

**தரம் 01 ஆசிரியர் ரூபா 1630**

அதிபர், ஆசிரியர்கள் ஆரம்பித்துள்ள பணிப்புறக்கணிப்பில் கலந்து கொள்ளாமல் கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட்ட ஆசிரியர்களுக்கு, சம்பள அதிகரிப்பு வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதன்படி, குறித்த இரண்டு நாட்களில் பணிக்கு வந்த தரம் 03 ஆசிரியருக்கு 525 ரூபா சம்பள அதிகரிப்பும், தரம் 02 ஆசிரியருக்கு 1,335 ரூபா சம்பள அதிகரிப்பும், தரம் 01 06



# 03 போலிக்கடவுச்சீட்டில் வியன்னா செல்ல முயன்றவர் கைது

## 95 இலட்சம் ரூபா செலவில் தயாரிப்பு

# TNA: பாராளுமன்ற குழு தலைமை டெலோவுக்கு வழங்க கோரிக்கை

## அடைக்கலநாதன் MPயின் பெயரை குறிப்பிட்டு கடிதம்

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவராக செல்வம் அடைக்கலநாதனை நியமிக்குமாறு கோரி, ஏனைய பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கு தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (டெலோ) கடிதம் அனுப்பியுள்ளது.

இதன் பொதுச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் இந்த கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார்.

பாராளுமன்றக் குழுத் தலைவராக மறைந்த இரா. சம்பந்தன் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டு கடந்த 06

# பேச்சுவார்த்தைகளூடாக சம்பள அதிகரிப்புக்கு முன்வர வேண்டும்

## தோட்ட கம்பனிகளிடம் வடிவேல் சுரேஷ் எம்பி



லோரன்ஸ் செல்வநாயகம்

மலையக பெருந் தோட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல வேண்டுமாயின், சமரச பேச்சுவார்த்தை நடத்தி சம்பள அதிகரிப்பை வழங்குவதற்கு தோட்டக் கம்பெனிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் சபையில் தெரிவித்தார்.

அந்த வகையில் இந்த கம்பனிகள் மே மாதம் 06

# 1990 'சுவ செரிய' சேவைக்கு புதிதாக 95 அம்பியூலன்ஸ்கள்

## அமைச்சரவையில் அங்கீகாரம்



1990 சுவசெரிய அறக்கட்டளைக்கு 95 புதிய அம்பியூலன்ஸ் வண்டிகளை மானியமாகப் பெறுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2016 ஆம் ஆண்டு இந்திய அரசாங்கத்தின் மானியத்தின் கீழ் TATA Sons (Pvt) Ltd நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட 297 அம்பியூலன்ஸ் வண்டிகளைப் பயன்படுத்தி "1990 சுவசெரிய 06

# G.C.E A/L பரீட்சை: விண்ணப்ப காலம் திங்கள் வரையும் நீடிப்பு

2024 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை இணையத்தளத்தில் சமர்ப்பிக்கும் கால அவகாசம் (12) வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகள் மற்றும் தனியார் விண்ணப்பதாரர்கள் இணையத்தின் மூலம் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான கால அவகாசம் நேற்றுடன் (10) நிறைவடைவதாக குறிப்பிடப் பட்டிருந்தது.

எனினும், தவிர்க்க முடியாத காரணங்களால் இதனை எதிர்வரும் 12 வரை நீடிக்க 06

# அமைச்சரவை முடிவுகள்

**01. வரலாற்றுப் புகழ்வாய்ந்த கல்யாணி நதீ பௌத்த துறவு பீடத்தை நிர்மாணித்தல்**

மஹாவிகாரவம்ச சியோமோபாலி மஹா பிரிவின் கல்யாணி சாமக்கிரி தர்மமஹா பிக்கு சபையால் 150 வருடங்களுக்கும் மேலாக களனி நதியில் தற்காலிகமாக நிர்மாணிக்கப்பட்டுள்ள பௌத்த துறவு பீடத்தில் துறவறக் கருமங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வருடாந்தம் இத்தற்காலிக பௌத்த பீடத்தை நிர்மாணிப்பதற்காக அதிக செலவும், உழைப்பும் தேவைப்படுகின்றமையைக் கருத்தில் கொண்டு, களனி ஆற்றுக்கு அருகில் அமைந்துள்ள குறித்த பிக்கு சபைக்குச் சொந்தமான வென்னவத்த ஸ்ரீ கல்யாணவம்ச ஆராமை விகாரைக்குச் சொந்தமான காணியில் நிரந்தரமான துறவு பீடத்தை நிர்மாணிப்பதற்கு பிக்கு சபை தீர்மானித்துள்ளது. பிரதமரின் குறித்த விடயம் தொடர்பாக சமர்பித்துள்ள யோசனையைக் கருத்தில் கொண்டு, நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பரிந்துரைகள் மற்றும் ஆலோசனைகளின் பிரகாரம், முன்மொழியப்பட்டுள்ள கல்யாணி நதீ பௌத்த துறவு பீடத்திற்கான கட்டிடத்தை அமைப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. இலங்கையில் பால் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளை ஒழிப்பதற்காக பல்துறைசார் தேசிய செயற்பாட்டுத் திட்டம் ஐஐ (2024/20/28)**

வன்முறையற்றதும் நீதியானதுமான சமூகச் சூழலில் பெண்கள், ஆண்கள், சிறுவர்கள் மற்றும் பால்நிலையில் பன்மைத்துவம் கொண்ட குழுக்கள் வாழ்வதற்கான உரிமையை உறுதிப்படுத்துவதற்காக கொள்கை ரீதியான இடையீடுகள் தேவையென, இலங்கையில் பால் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளை ஒழிப்பதற்கான முதலாவது செயற்பாட்டுத்திட்டம் 2012 – 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஒருங்கிணைந்த அணுகுமுறையுடன் கூடியதாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த செயற்பாட்டுத் திட்டத்தின் விளைவுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தொடராய்வு மற்றும் மதிப்பீட்டுச் செயன்முறையில் புதிய தேசிய செயற்பாட்டுத் திட்டத்தை வகுத்துக் கொள்ள வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, ஏற்புடைய அனைத்து பங்குதார நிறுவனங்களின் கருத்துக்களைக் கேட்டறிந்து தயாரிக்கப்பட்டுள்ள இலங்கையில் பால் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளை ஒழிப்பதற்காக பல்துறைசார் தேசிய செயற்பாட்டுத் திட்டம் ஐஐ (2024/20/28) இனை நடைமுறைப்படுத்துவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03. அபிவிருத்திக்காக பசுமை ஐதரசன் தொழிநுட்பத்தைப் பயன்படுத்தல்**

அதிக தூர முடிவிடங்களுக்கான ஆழ்கடல்வழி வலுசக்திப் போக்குவரத்திற்காகப் பயன்படுத்தப்படும் சம்பிரதாயபூர்வமான சுவட்டு எரிபொருளுக்குப் பதிலாகப் பயன்படுத்தக் கூடிய சுற்றாடல் நேயம்மிக்க மாற்றுவழிமுறையாக பசுமை ஐதரசனின் பெறுமதி சேர் உற்பத்தியான பசுமை அமோனியா அடையாளங் காணப்பட்டுள்ளது. வலுசக்திப் போக்குவரத்திற்காகப் பயன்படுத்தக் கூடிய வணிக ரீதியான பசுமை அமோனியாவுக்கு உலகளாவிய சந்தையில் குறிப்பிடத்தக்களவு கேள்வி அதிகரிக்குமென எதிர்வுகூறப்பட்டுள்ளது. இலங்கையில் மீள் புதிப்பிக்கத்தக்க வலுசக்தி வளங்கள் அதிகமாகக் காணப்படல் மற்றும் கிழைத்தேய – மேலைத்தேய கப்பல் போக்குவரத்துப் பாதைக்கு அண்மித்ததாக இலங்கை அமைந்திருத்தல், போன்ற விசேடமான பூகோள ரீதியான நன்மைகளால் பசுமை வலுசக்தி உற்பத்தி, ஏற்றுமதி மற்றும் பிராந்திய வலுசக்தி மையமாக உருவாவதற்கு அதிக வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.




**04. இராஜகிரிய, புத்கமுவ வீதிக்கு அண்டியதாக அமைந்துள்ள நீர்ப் பாதுகாப்பு ஒதுக்கிடத்தின் காணித்துண்டை நகரப் பூங்காவாக அபிவிருத்தி செய்தல்**

கொழும்பு மற்றும் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டையை அண்டிய பிரதேசத்தில் வெள்ளத்தைக் கட்டுப்படுத்துவதற்காக இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தால் கொழும்பு வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் சுற்றாடல் மேம்பாட்டுக் கருத்திட்டத்தின் கீழ் கொழும்பு, ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை, கொலொன்னாவ மற்றும் கடுவெல பிரதேச செயலகப் பிரிவுகளில் அமைந்துள்ள சதுப்பு நிலங்களை நீரேந்துப் பிரதேசங்களாக பேணிச் செல்வதற்காக அரசு கையகப்படுத்தியுள்ளது. அதன்கீழ் கையகப்படுத்தியுள்ள இராஜகிரிய, புத்கமுவ வீதிக்கு அண்டியதாக அமைந்துள்ள நீர்ப் பாதுகாப்பு ஒதுக்கிடத்தின் காணிகளை சட்டவிரோதக் கட்டிங்களை அமைப்பதற்கும், வேறு விடயங்களுக்கு பயன்படுத்துவதற்கும் ஒருசிலர் முயற்சிக்கின்றதுடன், குறித்த காணிகளைப் பாதுகாத்து அவற்றை கையகப்படுத்தும் நோக்கங்களுக்குப் பாதிப்புக்கள் ஏற்படாத வகையில் இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் வழிகாட்டலின் கீழ் பொருத்தமான அபிவிருத்திப் பணிகளுக்குப் பயன்படுத்துவது உகந்ததெனக் கண்டறியப்பட்டுள்ளது.

**05. கொள்ளுப்பிட்டிப் பிரதேசத்தில் அமைந்துள்ள காணித்துண்டொன்றை எக்ஸ்போ புறொப்பர்டி டிவலொப்பேர்ஸ் (பிரைவெட்) கம்பனிக்கு வீடமைப்புத் திட்டத்திற்காக வழங்கல்**

நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான கொள்ளுப்பிட்டி, கடற்கரை வீதிப் பகுதியில் அமைந்துள்ள 40 பேர்ச்சர்ஸ் காணித் துண்டொன்றை 50 வருடங்கள் நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் எக்ஸ்போ புறொப்பர்டி டிவலொப்பேர்ஸ் (பிரைவெட்) கம்பனிக்கு வழங்குவதற்காக 2007 ஆம் ஆண்டில் நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய அங்கீகாரம் வழங்கப்பட்டதுடன், அதன் பெறுமதியின் 25 வீதமான தொகை அறவிடப்பட்டுள்ளது. ஆனாலும், குறித்த காணியில் சட்டவிரோதமாக குடியிருப்பாளர் ஒருவர் இருந்தமையால், காணித்துண்டைக் கையளிப்பதற்கு இயலுமை கிட்டவில்லை. குறித்த காணியுடன் சேர்ந்துள்ள 12 பேர்ச்சர்ஸ் உள்ளிட்ட 52 பேர்ச்சர்ஸ் காணித்துண்டை வீடமைப்புக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 99 வருட குத்தகை அடிப்படையில் வழங்குமாறு எக்ஸ்போ புறொப்பர்டி டிவலொப்பேர்ஸ் (பிரைவெட்) கம்பனியால் விண்ணப்பமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்காக, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் முகாமைத்துவ சபை அனுமதி வழங்கியுள்ளது.

**06. நுவரெலியா, கண்டி மற்றும் பதுளை போன்ற மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட தோட்டப் பாடசாலைகளில் 60 "ஸ்மார்ட்" வகுப்பறைகளை நிர்மாணித்தல்**

இந்திய அரசின் நிதியுதவியுடனும், இலங்கை அரசின் ஒத்துழைப்புடனும் நுவரெலியா, கண்டி மற்றும் பதுளை போன்ற மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட தோட்டப் பாடசாலைகளில் உயர்தர வகுப்புக்களுக்கான 60 "ஸ்மார்ட்" வகுப்பறைகளை நிர்மாணிக்கும் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இந்திய அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காக 2023.12.18 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கியுள்ளது. குறித்த கருத்திட்டத்தை உயர்தர மாணவர்களை மாத்திரம் இலக்காகக் கொண்டு அமுல்படுத்துவதில் நடைமுறைச் சிக்கல்களைக் கருத்தில் கொண்டு, குறித்த மட்டுப்பாட்டை நீக்குவதற்கு இந்திய உயர்ஸ்தானிகராலயம், கல்வி அமைச்சு, வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் மற்றும் தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**09. புற்றுநோயாளர்களுக்கான உயர்வலு கதிரியக்க சக்திவாய்ந்த உயர்தரத்துடன் கூடிய கதிரியக்கச் சிகிச்சை உபகரணங்களை வழங்கல்**

புற்றுநோய் சிகிச்சைக்காக பயன்படுத்தப்படும் 14 நேர்கோட்டு கதிரியக்க உபகரணங்களை 02 படிமுறைகளின் கீழ் வழங்குவதற்காக ஐக்கிய இராச்சியத்தின் இலக்ரா கம்பனி மற்றும் சுகாதார அமைச்சுக்கும் இடையில் 2013 ஆம் ஆண்டில் ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த கருத்திட்டத்தின் முதலாவது கட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன், இரண்டாம் கட்டம் இதுவரை அமுல்படுத்தப்படவில்லை. தற்போது பயன்படுத்தப்படும் நவீன புற்றுநோய் சிகிச்சைகளுக்கான தர நியமங்களின் முக்கிய கூறுகளை 2013 இல் கையொப்பமிடப்பட்ட ஆரம்ப ஒப்பந்தத்தின் விபரங்களில் உள்ளடக்கப்படாமையால், மேம்படுத்தப்பட்ட உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்காக, இலங்கையின் புற்றுநோய் மருத்துவ நிபுணர்கள் முன்மொழிவுகளைச் சமர்ப்பித்துள்ளனர்.



அதற்கமைய, சுகாதார அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள முன்மொழிவுகளைக் கருத்தில் கொண்டு, புற்றுநோய் மருத்துவ நிபுணர்கள் சமர்ப்பித்துள்ள விதந்துரைகள் மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவின் விதந்துரைகளுக்கமைய கண்டி தேசிய மருத்துவமனை, கராப்பிட்டி தேசிய மருத்துவமனை, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மற்றும் மட்டக்களப்பு போதனா மருத்துவமனைகளுக்கு முதலாவது கட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள நேர்கோட்டு கதிரியக்க உபகரணங்களை மேம்படுத்தவும், இரண்டாம் கட்டத்தின் கீழ் இரத்தினபுரி, பதுளை, அம்பாந்தோட்டை, அநுராதபுரம் மற்றும் குருநாகல் ஆகிய 05 மருத்துவமனைகளுக்கு கதிரியக்க சிகிச்சை உபகரணங்களை முன்னுரிமை அடிப்படையில் 2024 – 2026 நடுத்தரக்கால வரவு செலவுத்திட்டச் சட்டகத்தில் பெற்றுக் கொள்வதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# காணி உறுதிகளின்றி வாழும் மக்களுக்கு நிரந்தர காணிகள் வழங்கும் திட்டம்

## ஹம்பாந்தோட்டையில் நடமாடும் சேவை

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் திட்டத்திற்கமைவாக நாட்டில் காணி உறுதிகளின்றி இருக்கும் மக்களது காணிகளுக்கு நிரந்தர காணி உறுதிகள் வழங்குவதற்கான மக்கள் நடமாடும் சேவை ஹம்பாந்தோட்டை நிம்பாராம விகாரையில் நேற்று (10) நடைபெற்றது.

இதில் ஹம்பாந்தோட்டை வடக்கு, கிழக்கு மற்றும் சிரிபோபுர ஆகிய கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களது காணிப் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றிற்கு தீர்வினை பெற்றுக் கொடுப்பதற்காக தென் மாகாண காணி ஆணையாளர் திணைக்களம் இந்த நடமாடும் சேவையினை ஏற்பாடு செய்திருந்தது.



இதில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர். மக்களது காணி தொடர்பான பிரச்சினைகளுக்கு அதிகாரிகள் தீர்வினைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்ததோடு காணி உறுதிகள் இல்லாதோருக்கு உருமய மற்றும் திட்டங்களினூடாக காணி உறுதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்பட்டன.

நீண்டகாலமாக தீர்க்கப்படாமல் இருந்த காணிப் பிரச்சினைகள் தொடர்பாக தீர்வினைபெற்றுக் கொடுத்து காணி உறுதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துவரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு பொதுமக்கள் நன்றி தெரிவித்துள்ளனர். தாங்கள் நீண்டகாலமாக வசித்து வரும் காணிக்கு உறுதியினை பெற்றுக் கொள்வது நீணடகால கனவாக இருந்து வந்தினால் அதற்கு தீர்வினை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்து வரும் ஜனாதிபதியை பாராட்டுவதாகவும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

## நகர்வலம்

கொழும்பு தமிழ்ச் சங்கத்தில்...

### கந்தசாமி கருணாகரனுக்கு ஜூலை 20 அஞ்சலி நிகழ்வு



அண்மையில் பஸ் விபத்து ஒன்றில் அகால மரணம் அடைந்த அமரர் கந்தசாமி கருணாகரனுக்கு கொழும்பில் வசிக்கும் நண்பர்கள் இணைந்து நடத்தும் கண்ணீர்அஞ்சலி நிகழ்வு எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு கொழும்பு வெள்ளத்தை தமிழ் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் அன்னாரது உருவப்படம் திரை நீக்கம் செய்யப்பட்டு மலர் அஞ்சலி செலுத்தப்படும். அத்துடன் அவர் குறித்த நினைவு அஞ்சலி உரைகளும் அவருடன் நெருங்கிப் பழகிய அரசியல், ஆன்மீக, ஊடகத் துறை மற்றும் கலைத் துறை சார்ந்த பிரமுகர்களால் நிகழ்த்தப்படும்.

இந்நிகழ்வில் அவருடன் நெருங்கி பழகிய சகலரையும் கலந்து அன்னாருக்கு அஞ்சலி செலுத்துமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

ரைஸ் குக்கரில் சோறு சமைக்க முற்பட்ட

## குடும்பப்பெண் மின்சாரம் தாக்கி உயிரிழப்பு

புத்தளம் தினகரன் நிருபர்

புத்தளம், மன்னார் வீதி, வேப்பமடு, விழுக்கை எனும் பகுதியில் வசித்து வந்த இரு பிள்ளைகளின் இளம் தாய் ஒருவர் மின்சார தாக்குதலுக்குள்ளாகி பலியானார்.

பாபு துஷ்யந்தி (வயது 28) என்பவரே மின்சார தாக்குதலுக்குள்ளாகி நேற்று புதன்கிழமை (10) அதிகாலை பலியாகியுள்ளார்.

இப்பெண்மனி (09) செவ்வாய்க்கிழமை இரவு புதிதாக வாங்கிய ரைஸ் குக்கரில் சோறு சமைக்க எத்தனிக்கும் தருவாயில் மின்சாரம் தாக்கியுள்ளது.

புத்தளம் தள வைத்தியசாலையில் புதன்கிழமை (10) காலை புத்தளம் மற்றும் கல்பிட்டி பிரதேசத்துக்கான திடீர் மரண விசாரணை அதிகாரி பீ.எம். ஹிசாம் முன்னிலையில் பிரேத பரிசோதனை மற்றும் விசாரணைகள் இடம்பெற்றதன் பின்னர் மரண விசாரணை அதிகாரி பீ.எம். ஹிசாம் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைத்தார்.

எதிர்வரும் 13 மற்றும் 14 ஆம் திகதிகளில்

## ஹொரவப்பொத்தானை பிள்ளையார் கோயில் வருடாந்த உற்சவம்

ஹொரவ்பதான மொரகெவ 77 ஆவது மைல்கல்லில் அமைந்துள்ள புராதன பிள்ளையார் கோவிலில் எதிர்வரும் சனிக்கிழமை 13 மற்றும் ஞாயிற்றுக்கிழமை 14 ஆம் திகதிகளில் முதலாவது வருடாந்த உற்சவம் மற்றும் திருவிளக்கு பூஜை நடைபெறும்.

அதாவது, சனிக்கிழமை 13ஆம் திகதி மதியம் 01 மணிக்கு பூஜையும், மாலை 6.00 மணிக்கு போதி பூஜை, தர்ம சொற்பொழிவு, திருவிளக்கு பூஜையும், 14 ஆம் திகதி காலை மகா சங்க பிக்குகளுக்கு தானம் வழங்கும் நிகழ்வும் நடைபெறுமென ஜோதிடர் எஸ். எஸ். யோதின் தெரிவித்துள்ளார்.

## கற்பிட்டி தீவுப் பகுதியில் 262 கிலோ மஞ்சள் மீட்பு

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

கற்பிட்டி , பெரிய அரச்சால் தீவுப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் ஒருதொகை மஞ்சள் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளது.

வடமேற்கு கடற்படை கட்டளையின் கற்பிட்டி கடற்படையினர் பெரிய அரிச்சல் தீவின் களப்பு பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விஷேட தேடுதல் நடவடிக்கையின் போது அங்கு 5 உர மூடைகளில் அடைக்கப்பட்ட 262 கிலோ 300 கிராம் மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளது.



எனினும், சந்தேகத்தின் பெயரில் எவரும் கைது செய்யப்படவில்லை என கடற்படையினர் குறிப்பிட்டனர். இவ்வாறு கைப்பற்றப்பட்ட 262 கிலோ 300 கிராம் மஞ்சள் மேலதிக நடவடிக்கைகளுக்காக தமது பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதாகவும் கடற்படையினர் மேலும் தெரிவித்தனர்.

## அநுராதபுரத்தில் பொலிஸாரின் 'யுக்திய' விசேட சுற்றிவளைப்பு

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

நாடளாவிய ரீதியில் மீண்டும் புதிய திட்டத்துடன் "யுக்திய" விசேட சுற்றி வளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்துவதற்கான " யுக்திய " என்னும் பொலிசாரின் சுற்றிவளைப்புக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதனடிப்படையில், அநுராதபுரம் வலயத்திற்கு பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் நிலின ஹேவா பத்திரனவின் வழிகாட்டலுக்கிணங்க அநுராதபுரம் ரம்பாவ பகுதியில் " யுக்திய "விசேட சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அநுராதபுரம் மற்றும் மிஹிந்தலை போக்குவரத்து பொலிசார் இந்த சுற்றிவளைப்பில் ஈடுபட்டிருந்ததுடன் பஸ் , மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி உள்ளிட்ட பல வாகனங்களும் பயணிகளின் பயணப்பொதிகளும் சோதனைக்குட்படுத்தப்பட்டன. போதைப்பொருள் தொடர்பிலான விசேட பயிற்சி பெற்ற பொலிஸ் மோப்ப நாயானா (Police dog diuk) சுற்றிவளைப்பில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.



இதன்போது வலயத்திற்கு பொறுப்பான போக்குவரத்து பிரிவின் பொறுப்பதிகாரி முஹமட் நியாஸ், மிஹிந்தலை பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவின் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் ரணசிங்க ஆகியோரின் தலைமையிலான பொலிஸ் குழுவினர் சுற்றிவளைப்பை மேற்கொண்டிருந்தனர்.

## கிரிந்தை முஸ்லிம் ம.வி பெயர் மாற்றம்

(வெலிகம தினகரன் நிருபர்)

மாத்தறை மாவட்டத்திலுள்ள கிரிந்தை கிராமத்தில் அமைந்துள்ள மாறை /கிரிந்தை முஸ்லிம் மகா வித்தியாலயம், மாறை / அல் மனார் மகா வித்தியாலயமென பெயர் மாற்றப்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் எம்.ஜே. ரியாஸ் (SLPS) தெரிவித்தார்.

தென்னகத்திலே சுமார் நூறு ஆண்டுகள் வரலாற்றைக்கொண்ட இப்பாடசாலை, 1927ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு கிரிந்தை முஸ்லிம் கனிஷ்ட வித்தியாலயம் என்ற பெயரில் இயங்கி வந்தது.

இப் பாடசாலையில் உயர்தர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டதன் பயனாக 2023ம் ஆண்டு கிரிந்தை முஸ்லிம் மகா வித்தியாலயமாக தரம் உயர்த்தப்பட்டது. தென் மாகாணத்தில் மிக வேகமாக வளர்சியடைந்து வரும் பாடசாலைகளில் இதுவும் ஒன்று. மாணவர்களின் கற்றல் அடைவுகளோடு இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் தேசிய மட்ட சாதனைகளை இப்பாடசாலை புரிந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உலகின் மூடிய கதவுகளைத் திறக்கும் இயலுமையை நாம் பெற்றுள்ளோம்

உலகம் எம்மை அங்கீகரிக்க மறுத்த ஒரு காலம் மாறி, மீண்டும் எம்மை அங்கீகரிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளதாக,பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

மஹரகம வித்யாகர கல்லூரியின் மூன்று மாடிக் கட்டடத்தின் நிர்மாணப் பணிகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் (08) கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இதனைக் குறிப்பிட்டார். இக்கட்டடத்தை நிர்மாணிப்பதற்கு பிரதமரின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி மற்றும் மேல்மாகாண சபையின் நிதி என்பன ஒதுக்கப்பட்டிருந்தன. இங்கு கருத்து தெரிவித்த பிரதமர்:

கல்வியின் பெறுமதியை வேறு எதனாலும் குறைத்துவிட முடிவதில்லை. கற்றுக்கொள்வது மட்டுமே எஞ்சும்.பிள்ளைகளின் வாழ்க்கை பெறுமதிக்கு அறிவுச் செல்வமே வழிகாட்டும்.மஹரகம பிரதேசத்துடன் 1983 முதல் பாராளுமன்ற உறுப்பினராக மிகவும் நெருங்கிச் செயற்பட்டுள்ளேன். மஹரகம மக்களின் நம்பிக்கைகள் மற்றும் அபிலாஷைகளை உயர்த்துவதுடன் இப்பிரதேச பிள்ளைகள் மீதான அன்பையும் மரியாதையையும் உயர்த்துவதற்கு எம்மால் பங்களிக்க முடிந்தது.



நான் மஹரகம பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தை விட முற்றிலும் வித்தியாசமான முறையில் வித்தியாகர கல்லூரி முன்னேற்றமடைந்துள்ளது.

கல்லூரிகளுக்கு மிகுந்த அன்புடனும் மரியாதையுடனும் உதவி செய்துள்ளோம். வித்யாகர கல்லூரி மஹரகம நகரின் மையப்பகுதியாகும்.

இக்கட்டான காலகட்டத்தில் நாம் எடுத்த நடவடிக்கைகளால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இம்முறை மாகாண சபைக்கு அதிக பணத்தை வழங்கியுள்ளார்.

சவாலான காலகட்டத்தை நாங்கள் கடந்துவிட்டோம். நட்பும் சகோதரத்துவமும் காக்கப்பட வேண்டும். உலகம் நம்மை ஏற்றுக் கொள்வதை நிறுத்தியிருந்த ஒரு காலம் இருந்தது.

இன்று உலகம் மீண்டும் எம்மை ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலை வந்துள்ளது என்றார்.

# NTC யின் சட்டத்தில் திருத்தம் விரைவில் வர்த்தமானி வெளியீடு

**முச்சக்கர வண்டிச் சேவைகளை ஒழுங்குபடுத்தவும் நடவடிக்கை**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவுக்கு போதிய அதிகாரங்களை பெற்றுக் கொள்ளும் வகையில் சம்பந்தப்பட்ட சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, அமைச்சர் பந்துல குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

விரைவில் இது வர்த்தமானியில் வெளியிடப்பட்டு அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும் என்றும் அதன் பின்னர் அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய் மூல விடைக்கான வினாக்கள் வேளையில், வசந்த யாப்பா பண்டார எம்.பி எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் பந்துல குணவர்தன இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

முச்சக்கர வண்டிகள் மக்களுக்கு பெரும் சேவையை வழங்குகின்றன. எனினும் அந்த சேவையை ஒழுங்குபடுத்தல் அவசியமாகிறது. அது தொடர்பில் போதிய அதிகாரம் இல்லாமையினால் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன். தற்போதுள்ள நிலையை மாற்றுவதற்காக சட்ட மா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து அது, மீள கிடைக்கப்பெற்றுள்ளது.

06

## அரசியலமைப்பு திருத்தம்: அமைச்சரவையில் அனுமதி

அரசியலமைப்பின் 83 (பி) பிரிவை திருத்துவதற்கு “அரசியலமைப்பு திருத்த சட்டமூலத்தை” தயாரிப்பதற்கான முன்மொழிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அரசியலமைப்பின் 30(02), 62(2) மற்றும் 83(பி) ஆகிய பிரிவுகளில் ஜனாதிபதியின் பதவிக்காலம் மற்றும் பாராளுமன்றத்தின் காலம் தொடர்பில் முரண்பாடு இருப்பதாக அரசாங்கம் கருதுவதாக பொருத்தமான தீர்மானம் கூறுகிறது.

சந்தேகத்தைத் தவிர்க்கவும், அதிலுள்ள முரண்பாடுகளை நீக்கவும், “ஆறு வருடங்களுக்கு மேல்” என்ற வார்த்தைகளுக்குப் பதிலாக “ ஐந்து வருடங்களுக்கு மேல் “ என்ற வார்த்தைகளை மாற்றுவதன் மூலம் அரசியலமைப்பின் 83 (பி) சரத்தை திருத்துவதற்கான அரசியலமைப்பு திருத்த சட்ட மூலத்தை தயாரிப்பதற்காக ஜனாதிபதியின் முன்மொழிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## கட்டுநாயக்கா விமான நிலையத்தின் 02 வது முனையத்தை விரிவாக்க திட்டம்

**ஜப்பானின் JICA இணக்கம்**

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் விரிவாக்கத் திட்டத்தின் 02ஆவது முனையத்தை மீண்டும் ஆரம்பிக்க, ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (JICA) இணங்கியுள்ளதாக விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

சலுகைக் கடன் திட்டத்தின் கீழ், இத்திட்டம் எளிதாக்கப்படுமென அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

முன்னதாக JICA வின் அறிக்கையின்படி, விமானப் போக்குவரத்தை சமாளிக்கும் வகையில், கட்டுநாயக்க விமான நிலையத்தின் வசதிகளை மேம்படுத்துவதே திட்டத்தின் நோக்கமாகும்.

இரண்டாவது பயணிகள் முனையத்தின் கட்டுமானம் மற்றும் தேவையான பயன்பாடு ஆகியவற்றில் இந்த திட்டம் கவனம் செலுத்துகிறது. ஜப்பானிய மேம்பட்ட தொழில்நுட்பம் மற்றும் அறிவாற்றல் கொண்ட சுற்றுச்சூழல் விமான நிலையத்தின் கருத்தின் அடிப்படையில் முனையக் கட்டடம் உருவாக்கப்பட இருந்தது. இயற்கையை இரசித்தல் பயணிகளுக்காக மழைநீர் சேகரிப்பு மற்றும் கழிப்பறைகளை சுத்தப்படுத்த கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து மறுசுழற்சி செய்யப்பட்ட நீர், ஒளிமின்னழுத்த மின் உற்பத்தி, சூரிய ஒளிச் சக்தி, எல்.இ.டி விளக்குகள், ஆற்றல்திறனுள்ள மெருகூட்டல் போன்றவற்றை உள்ளடக்கியதாக இது அமைக்கப்படவுள்ளது.

# தேர்தலில் வெற்றி பெற முடியாத சிலர் நாட்டின் ஸ்திரத்தை குலைக்க முயற்சி

**பொறுப்புக்கூறும் பொருளாதார மாற்றச் சட்டம் சபையில்**

தேர்தலில் வெற்றிபெற முடியாத சில தரப்பினர் நாட்டின் ஸ்திர நிலையை சீர்குலைக்கும் வேலை நிறுத்தங்களை ஆரம்பித்து வருவதாக, பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

எந்தெந்தக் குழுக்கள் பொய்யான வாக்குறுதிகளை வழங்குகின்றன என்பதை மக்கள் அடையாளம் காண வேண்டும் எனவும், மக்கள் மீண்டும் தவறு செய்தால், அதனை மாற்றியமைக்க முடியாது எனவும் அவர் வலியுறுத்தினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் (09) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன,

சுதந்திரத்திற்குப் பிறகு ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு அரசாங்கமும் நாட்டுக்காக அதிகபட்ச பணிகளைச் செய்தன. எவ்வாறாயினும், சுதந்திரத்தின் பின்னர் தொடர்ச்சியாக இருந்த ஆட்சியின் பலவீனங்களைத் தீர்க்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.



உதாரணமாக, அரசியலமைப்பின் 27 மற்றும் 28 ஆவது பிரிவுகளில் அரச கொள்கையை வழிநடத்தும் கோட்பாடுகள் மற்றும் அடிப்படைக் கடமைகள் என்பன குறிப்பிடப்படுள்ளன. இது பொதுமக்களுக்கு எப்படி உரிமைகளை வழங்குவது என்பது பற்றியதாகும் .

எவ்வாறாயினும், 27 மற்றும் 28 இல் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தாலும், 29 ஆவது பிரிவில் எந்தப் பொறுப்புக் கூறலும் ஏற்படாமலும் ஜனநாயக அரசியலைப் பாதுகாக்க சட்டத்தால் எந்த உரிமைகளும் ஒதுக்கப்படவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அது மாத்திரமன்றி, எந்த நீதிமன்றமோ அல்லது நீதிபதியோ, அரசியல்வாதிகளால் கூறப்படும் வாக்குறுதிகளை நிறைவேற்ற வாய்ப்பில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது,

06

## கொழும்பு தெற்கு ஆஸ்பத்திரியின் பிரேத அறையில் குவியும் சடலங்கள்

**அடையாளம் கண்டு அப்புறப்படுத்துமாறு பணிப்பு**

**கொழும்பு மத்திய குறூப் நிருபர்**

கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில், இவ்வாண்டின் ஆறு மாதங்களில் அடையாளம் தெரியாத சடலங்கள் நீண்ட காலமாக வைக்கப்பட்டுள்ளதாக, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் மரண விசாரணை அதிகாரி, சமாதான நீதவான் பாரிந்த கொட்டுகொட தெரிவித்துள்ளார்.

கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில் குவிந்துள்ள சடலங்களில் பெரும்பாலானவை, விபத்துக்களில் காயமடைந்தவை. இவர்களது சடலங்களை அடையாளம் கண்டு உறவினர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டு சடலங்களை விரைவாக அகற்ற வேண்டுமென கடந்த காலங்களில் பல தடவைகள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

தற்போது, இங்கிரிய, வடதுவ, மொரட்டுமுல்ல, மொரட்டுவ, பிலியந்தலை, மஹரகம, எகொடஉயன, கிருலப்பனை மருதானை ஆகிய பொலிஸ் நிலையங்களிலிருந்து ஒப்படைக்கப்பட்ட சடலங்கள் கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் குவிந்துள்ளன.

உரிமையாளர்களை விரைவாக அடையாளம் காண விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

சிறிது காலத்திற்கு முன்னர் காணாமல் போனவர்கள் தொடர்பாக, மேற்படி பொலிஸ் பிரிவுகளில் வசிப்பவர்களை கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் பிரேத அறைக்கு சென்று விசாரணை நடத்துமாறு, கொழும்பு தெற்கு மரண விசாரணை அதிகாரி பாரிந்த கொட்டு கொட கேட்டுக்கொண்டார்.

## அரசாங்கத்தை எதிர்க்கட்சி அமைத்தால் சகல பட்டதாரிகளுக்கும் தொழில் வழங்குமா?

**பாராளுமன்றத்தில் அமைச்சர் மனுஷ கேள்வி**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

எதிர்க்கட்சியினர் அரசாங்கத்தை அமைத்தால் நாட்டிலுள்ள சகல பட்டதாரிகளுக்கும் தொழில்கள் வழங்குமா? இதை எதிர்க்கட்சித் தலைவர் உறுதியாக சபையில் குறிப்பிட வேண்டும் என அமைச்சர் மனுஷ நாணயக்கார சபையில் கேட்டுக்கொண்டார்.



பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்பு தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சபையில் வேண்டுகோள் விடுப்பதை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். எதிர்க்கட்சி ஆட்சிக்கு வந்தால் அனைத்து பட்டதாரிகளுக்கும் அரசாங்க தொழில் வாய்ப்புகளை வழங்குமா என்பதை சபையில் அவர் உறுதியாக தெரிவிக்க வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

06

## 2025; பட்ஜட் தயாரிப்புக்காக அரச நிறுவனங்களிடம் அறிக்கை கோரல்

அரச நிறுவனங்களின் வரவு – செலவு அறிக்கைகளை கோர நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.2025 வரவு செலவுத்திட்ட யோசனையை தயாரிக்கும் நடவடிக்கை விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதன்காரணமாகவே அனைத்து அரச நிறுவனங்களின் வரவு – செலவு அறிக்கைகளை கோர நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதற்கமைய மதிப்பீட்டு அறிக்கைகளை கோரும் நடவடிக்கைகளும் அதே சந்தர்ப்பத்தில் முன்னெடுக்கப்படுமென, அமைச்சின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

06

## போலிக்கடவுச்சீட்டில் வியன்னா செல்ல முயன்றவர் கைது

போலி கடவுச்சீட்டை பயன்படுத்தி ஒஸ்ரியாவின் வியன்னா செல்ல முயன்ற இலங்கையர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் (09) குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் பாதுகாப்பு பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

06



**அதுருகிரிய சூட்டுச் சம்பவம்**

## சந்தேகநபர்களை 48 மணிநேரம் தடுத்துவைக்க நீதிமன்றம் உத்தரவு

அதுருகிரிய துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட அழகுக்கலை நிலையத்தின் உரிமையாளர் உட்பட 07 சந்தேகநபர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இவர்கள் 48 மணிநேரம் விளக்கமறியலில் வைக்கப்படவுள்ளதாக உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். கடுவெல நீதவான் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். கைது செய்யப்பட்ட அனைவரும் தென் மாகாணத்தை

06

# களுத்துறை மாவட்டத்திலிருந்து சிறந்த வேட்பாளரை களமிறக்குவோம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

திருடர்களை சிறையிலடைக்கக் கூடிய ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை களுத்துறை மாவட்டத்திலிருந்து களமிறக்கவுள்ளதாக, பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற மதுவரி கட்டளைச் சட்டம் மற்றும் ஏற்றுமதி, இறக்குமதி கட்டுப்பாட்டுச் சட்டங்கள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

சில மாதங்களில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவுள்ளது. இதன் போது எந்தவொரு திருட்டுடனும் சம்பந்தப்படாத ஒருவரை நியமிக்க வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர். இதனால்தான் போராட்டமும் நடந்தது. இந்நிலையில் எனது கட்சி தடுத்தபோதும் நான், ரணில் விக்கிரமசிங்கவுக்காக வாக்களித்தேன். அவர் தகுதியானவர் என்பதனாலேயே அவருக்கு வாக்களித்தேன்.அவர், நாட்டை வரிசை யுகமின்றி சுமுகமாக முன்னெடுத்துச் செல்கிறார்.

தவறானவர்களை அருகில் வைத்திருந்தால், மக்கள் வாக்களிக்க மாட்டார்கள் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.எல்லோரும் தூய்மையானவர்களென்று கூற முடியாது. நாம் எல்லோரும் திருடர்களே. நானும் அதை செய்துள்ளேன். இந்நிலையில் மகிந்த ராஜபக்ஷ எப்போதும் என் மனதில் நிற்கும் ஒருவர். அவர் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து நாட்டுக்கு பெரும் சேவையை செய்துள்ளார்.

ராஜபக்ஷக்கள் மூவரே நாட்டின் பொருளதாரத்தை சீர்குலைத்ததாக நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. கோட்டாபய ராஜபக்ஷவை நியமிக்கும் போது அவரை நியமிக்க வேண்டாம் என்று நான் வலியுறுத்தினேன். இறுதியில் அவர் நாட்டை விட்டே ஓடும் நிலை உருவானது.அதேவேளை,அண்மையில் களுத்துறையில் நடந்த கூட்டத்தில் மேடையில் வரிசையில் இருந்தவர்கள் தொடர்பில் விமர்சனங்கள் உள்ளன.

இந்த நாட்டை ஆட்சி செய்ய வேண்டுமென்றால் திருடர்களை தங்களிடம் வைத்துக்கொள்ள வேண்டாம். அப்போதுதான் சிறப்பாக நாட்டை ஆட்சி செய்ய முடியும். எவ்வாறாயினும் அடுத்த தேர்தலில் நவலங்கா சுதந்திரக் கட்சியி களுத்துறை மாவட்டத்தில் பாராளுமன்றத்துடன் தொடர்புள்ள சிறந்த ஒருவரை முன்னிறுத்தும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பொருளாதாரத்தை நிமிர்த்துவதற்கு ஆர்ப்பாட்டங்கள் செய்து பலனில்லை

வீதிகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ், கொட்டாவ மஹல்வராவ பேக்கரி வீதியின் அபிவிருத்திகள், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. பழுதடைந்திருந்த இந்த வீதியால், பிரதேசவாசிகள் நீண்ட நாட்களாக பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கினர். இந்நிலை குறித்து அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவிடம் பாராளுமன்ற உறுப்பினர் காமினி வலேகொட தெரிவித்தார்.இதையடுத்தே இவ்வீதியை காபட் இட்டு புனரமைப்பதற்கு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.இங்கு பேசிய அமைச்சர்,



கொவிட்19 தொற்று நோயை உலகம் எதிர்கொண்டபோது, சர்வதேச நாணய நிதியம் நாடுகளுக்கு பணம் வழங்கியது.இந்த அடிப்படையில் 700 மில்லியன் நமக்கும் வழங்கப்பட வேண்டும் . ஆனால் ஒரு சதம் கூட கொடுக்கப்படவில்லை.

நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிக்கு அரசியல் தீர்வு இல்லை. இதற்கு சரியான பொருளாதார தீர்வு காணப்பட வேண்டும். இதற்கான தீர்வைக் காண நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். வேலைநிறுத்தப் பிரசாரங்களை மேற்கொண்டு எந்தத் தீர்வையும் காண முடியாது. ஏராளமானோர் வெளிநாடுகளில் வேலைக்குச் செல்கின்றனர்.

06

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆனி மாதம் 27ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 முஹர்ரம் பிறை 04

## குறள் தரும் சிந்தனை



தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும்

ஒருவர் நேர்மையானவரா அல்லது நெறி தவறி, நீதி தவறி நடந்தவரா என்பது அவருக்குப் பின் எஞ்சி நிற்கப்போகும் புகழ்ச் சொல்லைக் கொண்டோ அல்லது பழிச் சொல்லைக் கொண்டோதான் நிர்ணயிக்கப்படும்.

# விலைக்குறைப்பின் பலன்கள் மக்களுக்கு கிடைக்க வேண்டும்!

நாட்டின் பொருளாதாரம் நம்பிக்கைதரும் வகையில் முன்னேற்றப் பாதையில் முன்னோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கின்றது. அதன் பிரதிபலன்களை மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கான வேலைத்திட்டங்களும் திட்டமிட்ட அடிப்படையில் முன்னெடுக்கப்படுகின்றன.

அந்த வகையில் கடந்த சில மாதங்களாகப் பெற்றோல், டீசல் மற்றும் சமையல் எரிவாயு என்பவற்றுக்கு தொடர்ந்தும் விலைக்குறைப்பு செய்யப்பட்டு வருகின்றது.

இதனை அடிப்படையாகக் கொண்டு பயணிகள் போக்குவரத்து பஸ் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது. மேல்மாகாணத்தில் முச்சக்கர வண்டிகளில் பயணிப்பதற்கான கட்டணத்தை பத்து ரூபாவினால் குறைப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அத்தோடு தேநீர், உணவுப்பொதி, கொத்து ரொட்டி, பேக்கரி உணவு வகைகள் உள்ளிட்டவற்றின் விலைகளும் ஏற்கனவே குறைக்கப்பட்டுள்ளன.

மேலும் இவ்வருடத்திற்கான வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக அரசாங்க ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபா சம்பள உயர்வும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த அடிப்படையில் மின்கட்டணத்தை மேலும் குறைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. இதன் பிரகாரம் அடுத்த வாரம் முதல் மின்கட்டணம் 30 சதவீதத்தினால் குறைக்கப்படும் என்று குறிப்பிட்டுள்ள மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, இக்கட்டண குறைப்பின் ஊடாக முதல் 30 அலகுகளுக்கு ரூ. 2.00 இனாலும், 30 முதல் 60 வரையான அலகுகளுக்கு ரூ. 11.00 இனாலும், 60 முதல் 90 வரையான அலகுகளுக்கு ரூ. 12.00 வினாலும், 90 முதல் 180 வரையான அலகுகளுக்கு ரூ 20.00 இனாலும் கட்டணக் குறைப்பு செய்ய பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமைச்சரின் இந்த அறிவிப்பை சாதாரண மின் பாவனையாளர்கள் தொடக்கம் அனைத்து மட்டத்தினரும் பெரிதும் வரவேற்றுள்ளனர்.

நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்காக தற்போது முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் நாட்டுக்கு பெரிதும் நன்மைகள் பயனப்பனவாக அமைந்துள்ளன. அதனால் அவ்வேலைத்திட்டங்களால் நாடு அடைந்து கொள்ளும் பிரதிபலன்களை மக்களுக்கு பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அந்நடவடிக்கைகள் மக்கள் மீதான பொருளாதார சுமைக்கு நிவாரணத்தையும் ஆறுதலையும் பெற்றுக் கொடுப்பதை இலக்காகக் கொண்டுள்ளன.

கடந்த 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாகி நாடு வங்குரோத்து நிலையை அடைந்த போது எரிபொருள், எரிவாயு உட்பட அத்தியாவசியப் பொருட்கள் அடங்கலாக அனைத்துப் பொருட்களது விலைகளும் பெரிதும் அதிகரித்தன. அதன் விளைவாக மக்கள் கடும் அசௌகரியங்களுக்கும் நெருக்கடிக்களுக்கும் முகம்கொடுத்தார்கள்.

அந்த சூழலில் மக்களுக்கு வாழ்வாதாரமே பாரிய பொருளாதார சுமையாக அமைந்திருந்தது. அப்படியிருந்தும் நாட்டு மக்களில் பெரும்பாலானவர்கள் பொறுமை காத்தார்கள். பொருளாதார வீழ்ச்சியின் தாக்கங்களையும் பாதிப்புக்களையும் சகித்துக் கொண்டார்கள்.

இவ்வாறான சூழலில், பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளான நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் குறுகிய காலப் பகுதி முதல் பயனளிக்கலாயின. பொருளாதாரம் வீழ்ச்சி நிலையில் இருந்து முன்னேற்றகரமான முறையில் மீட்சி பெற்றுவருவதன் வெளிப்பாடே அதுவாகும். அதனால் நாடு அடைந்து கொள்ளும் பொருளாதாரப் பிரதிபலன்களை மக்களுக்கு பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

பொருளாதார வீழ்ச்சிக் காலப்பகுதியில் கடுமையான நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்தும் கூட பொறுமை காத்த மக்களுக்கு இந்தப் பிரதிபலன்கள் கிடைக்கப் பெறுவதானது அவர்கள் மத்தியில் புதிய நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியுள்ளன. இந்தப் பின்புலத்தில்தான் தற்போது பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டு வருகின்றன. இதன் ஊடாக மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்படும் அரசாங்கம் என்பது மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தப்படுகிறது.

அந்த வகையில் மின்கட்டணக் குறைப்பும் அடுத்த வாரம் முதல் நடைமுறைக்கு வரவிருக்கிறது. என்றாலும் மின் கட்டணக் குறைப்பு உட்பட அனைத்து விலைக் குறைப்பின் பிரதிபலன்களும் நாட்டின் சாதாரண மக்கள் உள்ளிட்ட எல்லா மட்ட மக்களையும் சென்றடைய வேண்டும். அதனை உறுதிப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுவே இன்றைய தேவையாகும்.

editor.tkn@lakehouse.lk

# கதிர்காமம் பாதயாத்திரைக்காக திறக்கப்பட்ட காட்டுவழிப்பாதை இன்று மூடப்படுகின்றது

## 22 ஆம் திகதி தீர்த்தோற்சவம்; வரலாற்றில் முதல் தடவையாக இம்முறை பெருமளவு பக்தர்கள்



வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காமம் கந்தன் ஆலய ஆடிவேல் விழா உற்சவத்திற்காக வரலாற்றில் முதல் தடவையாக மிக அதிகளவான யாத்திரிகர்கள் காட்டுவழிப் பாதயாத்திரையை மேற்கொண்டு வருகின்றனர்.

கானகப் பாதை திறந்த( 30) முதல்நாளன்று சுமார் 7000 பாதயாத்திரிகர்கள் பயணத்தை ஆரம்பித்திருந்தனர். இது வரலாற்றில் முதல் தடவையாகும்.

அதேபோல உகந்தை முருகன் ஆலய கொடியேற்றம் இடம்பெற்ற கடந்த 6 ஆம் திகதி கானகத்தில் பிரவேசித்த பக்தர்களின் எண்ணிக்கை சுமார் 10,000 ஆகும். இதுவும் ஒரு வரலாற்றுப் பதிவாகும்.

யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து ஆரம்பித்த சி.ஜெயராசா தலைமையிலான 56 நாள் மிகநீண்ட பாதயாத்திரையில் பங்கேற்ற அடியார்கள் மற்றும் மாமாங்கேஸ்வரர் யாத்திரைக் குழுவினர் உள்ளிட்ட சுமார் 7 ஆயிரம் பக்தர்கள் காட்டுப்பாதை யாத்திரையில் கலந்து கொண்டார்கள்.

இம்முறை வழமைக்கு மாறாக சிங்கள பக்தர்களின் எண்ணிக்கை கூடுதலாக இருந்தது. மற்றும் படையினர், ஆராய்ச்சியாளர்கள் என பலரும் பாதயாத்திரையில் கலந்து கொண்டார்கள். வெளிநாட்டவர்கள் சிலரும் பாதயாத்திரையில் பங்கேற்றார்கள். காட்டுவழிப் பாதையில் பல இடங்களில் அன்னதானம், நீராகாரம் வழங்கப்பட்டது. பக்தர்கள் அருந்துவதற்காக பல இடங்களில் தண்ணீர் நிரப்பப்பட்ட பவுசர்கள் வைக்கப்பட்டிருந்தன.

சிவதொண்டன் அமைப்பு, சேவற்கொடியோன் அமைப்பு, ஸ்பான்ட் அமைப்பு என பல அமைப்புகளும் தண்ணீர் வழங்கின. சந்நதி மோகன் சுவாமி மற்றும் ஞானம் லைக்கா அமைப்பினர் முதல்நாளன்று பக்தர்களுக்கான உலருணவுடன் அழகான பையையும் வழங்கினார்கள்.

மேலும் குளிர்பானங்கள், தேநீர், பால் தேநீர், பிஸ்கட், தாம்பூலம் போன்றவற்றை ஜேர்மன் கலா, சுவிஸ் விஜி மற்றும் அசோகன் போன்றோரின் அனுசரணையுடன் சமூக சேவையாளர் ஜெயசிறில் வழங்கி வைத்தார். இவ்வாறு பல பரோபகாரிகள் உதவி செய்தார்கள்.

வியாழை நதிக்கரையோரம் இம்முறை கூடுதலான பக்தர்கள் குழுமியிருந்தனர். ஆனால் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கூடும் அந்த இடத்தில் போதுமான தண்ணீர் வசதி, பாதுகாப்பு வசதி மேற்கொள்ளப்படவில்லை என்று பக்தர்கள் கூறினர். கதிர்காமம் காட்டுப் பாதை மொத்தம் 56 மைல் (சுமார் 90 கி.மீ) தூரம் கொண்டது. சுமார் 6 நாட்கள் இந்த காட்டுவழிப் பயணத்தை பக்தர்கள் மேற்கொள்வது வழமை.

கடந்த 30 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்ட காட்டுப் பாதை இன்று 11 ஆம் திகதி மூடப்படுகிறது.

கதிர்காமம் கொடியேற்றம் 06ஆம் திகதி நடைபெற்றது. இம்மாதம் 22 ஆம் திகதி தீர்த்தம் நடைபெறும் .

"கதிர்காமம் பாதயாத்திரை அகத்திய முனிவர் தொடக்கம் அருணகிரியார் ஈறாகவும், யோகர் சுவாமி முதற்கொண்டு சித்தானைக்குட்டி வரையும் எண்ணிறைந்த சித்தர் பெருமக்கள் தம் பாதக்கமலங்களை பதித்து பவனி சென்ற பாதையில் வருடாவருடம் நாமும் பயணிக்கின்றோம்" என்று 'ஷேத்திராடனம்' எனும் நூலில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை 1,000 வேல்களுடன் 1000 முருக பக்தர்கள் கதிர்காமம் நோக்கி பயணிக்கும் மாபெரும் வேல்யாத்திரை வரலாற்றில் இரண்டாவது தடவையாக கடந்த 01 ஆம் திகதி உகந்தைமலை முருகன் ஆலயத்தில் இருந்து சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தானகுரு சிவசங்கர் ஜி தலைமையில் ஆரம்பமாகி கொடியேற்ற தினத்தன்று (6)கதிர்காமத்தை சென்றடைந்தமை குறிப்பிடத்தக்கது.

அனைத்து வேல் அடியார்களும் காவி வஸ்திரங்கள் தரித்து அணிவகுத்துச் சென்றனர். கதிர்காமம் ஆடிவேல் உற்சவத்தில் கலந்து கொள்வதற்காக நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பாதயாத்திரையை ஆரம்பித்த பக்தர்கள் கதிர்காமத் திருத்தலத்தை தற்போது அடைந்து வருகின்றனர்.

இதேவேளை கதிர்காமம் திருத்தலத்தில் அமைந்துள்ள பள்ளிவாசலில் கடந்த 06 ஆம் திகதி மாலை 5.30 மணியளவில் கொடியேற்றம் நடைபெற்றது. சர்வமத தலைவர்கள், கதிர்காமம் பஸ்நாயக்க நிலமே டிஷான் குணசேகர உள்ளிட்ட அதிகளவிலானோர் இதில் கலந்துகொண்டிருந்தனர்.

கதிர்காமக் கந்தனின் ஆடிவேல் உற்சவம் எதிர்வரும் 22 ஆம் திகதி மாணிக்க கங்கையில் நடைபெறவுள்ள நீர்வெட்டும் நிகழ்வுடன் நிறைவுபெறவுள்ளது.





வி.ரி. சகாதேவராஜா
(காரைதீவு குறூப் நிருபர்)

# பதினொரு வருட காலத்துக்குப் பின்னர் மத்திய மாகாண இஸ்லாமிய தின விழா

மத்திய மாகாண கல்வித் திணைக்களம் ஏற்பாடு செய்திருந்த மாகாண இஸ்லாமியதின விழா அக்குறணை பாளிகா மகளிர் கல்லூரி மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடந்தேறியது.

மத்திய மாகாண முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்திப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் உனைஸ் ஆரிப் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் எம். ஜீ. அமரசிரி பியதாச பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். மத்திய மாகாணத்தில் கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் ஏ.எல். சாருடீன் மற்றும் மத்திய மாகாண கல்வி நிர்வாகத்துக்குப் பொறுப்பான முன்னாள் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி சீ.ரி.ஜி. மாயாதுன்ன ஆகியோர் கௌரவ அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

பிரிகேடியர் திலக் மாயாதுன்ன விசேட அதிதியாகக் கலந்து கொண்டதுடன் வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், வலய இணைப்பாளர்கள், மத்திய மாகாண பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள் உட்பட சகல இனங்களையும் சார்ந்த பலரும் கலந்து சிறப்பித்தனர்.

கண்டி மாவட்ட ஜம்மியத்துல் உலமா உறுப்பினரும் கண்டி ஜாமியுல் ஹைராத் ஜும்மா பள்ளிவாயிலின் இமாமுமான அஷ்ஷெய்க் எம். எச். ரிஸ்வான் (மக்காமி) விசேட சொற்பொழிவு நிகழ்த்தினார்.

2023 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட மீலாத் தின போட்டிகளில் பங்கேற்ற மாகாண மட்ட வெற்றியாளர்களுக்கான சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களும் வழங்கப்பட்டன. மாகாண மட்ட மீலாத் போட்டிகளில் வெற்றி பெற்ற இந்து சமயத்தைச் சார்ந்த இரண்டு மாணவர்கள் விசேட பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டமை விசேட நிகழ்வாகும்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்த அதிதிகள் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு புனித அல்குர்ஆன் சிங்கள மொழிபெயர்ப்பு பிரதிகள் வழங்கப்பட்டதுடன், கலந்து கொண்ட ஏனைய இன பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர்களுக்கு இஸ்லாம் தொடர்பான அடிப்படை விளக்கம் அடங்கிய நூல்களும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. சுமார் பதினொரு வருடங்களின் பின்னர் இவ்வாறான நிகழ்வு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

எம்.ஐ.எம்.அஸ்ஹர்
(மாளிகைக்காடு குறூப் நிருபர்)









# பிரிஸ்பேர்ன் மாநகரில் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்கள் வெளியீடும், இலக்கிய அரங்கும்




அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ் மற்றும் குயின்ஸ்லாந்து கிளையின் அனுசரணையில் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்கள் வெளியீடும் இலக்கிய அரங்கும் பிரிஸ்பேர்ன் (Brisbane) மாநகரில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெற உள்ளன. பாலஸ்தீனம் எரியும் தேசம், ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல், இலங்கை இதழியலில் சிவகுருநாதன் ஆகிய ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்கள் வெளியீடு பிரிஸ்பேர்னில் உள்ள மவுண்ட் ஒமாணி நூலக மண்டபத்தில் நடைபெற உள்ளன. (Mt Ommaney Library, Mt Ommaney Shopping Centre, 171 Dandenong Road, Mt Ommaney, Brisbane, Queensland)










எதிர்வரும் 4 ஆம் திகதி ஓகஸ்ட் 15.30 முதல் 17.30 மணி வரை இவ்வெளியீட்டு நிகழ்வு நடைபெற உள்ளது. இந்நூல் வெளியீட்டு நிகழ்வில் வாழ்த்துரையை ஈழத்தின் மூத்த பெண் எழுத்தாளர் 'தாமரைச் செல்வி' திருமதி ரதிதேவி கந்தசாமி வழங்குவார். தமிழ் வாழ்த்துப் பாடலை பிரிஸ்பேர்ன் தமிழ்ப் பாடசாலை மாணவர்கள் பாடவுள்ளனர்.

இந்நிகழ்வின் தலைமையுரையை அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ், குயின்ஸ்லாந்து கிளையின் மூத்த செயற்பாட்டாளர் செந்தில்குமரன் ஆற்றுவார். 'பாலஸ்தீனம் எரியும் தேசம்' நூல் அறிமுகவுரையை சிவா கைலாசம் நிகழ்த்துவார். அதன்பின் 'ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல்' நூலின் அறிமுகவுரையை டொக்டர் துஷ்யந்தன் திசைநாயகம் ஆற்றுவார்.

'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' நூலின் அறிமுகவுரையை ரஜினிகாந் த் ஜெயராமன் ஆற்றுவார். நூல் வெளியீடு மற்றும் இலக்கிய அரங்கின் ஏற்புரையை ஐங்கரன் விக்கினேஸ்வரா நிகழ்த்துவார்.

# உத்தரப் பிரதேசத்தில் 19 பேரை பலிகொண்ட கோர விபத்து!




இந்தியாவின் உத்தரப் பிரதேசத்தில் உன்னாவ் பகுதியில் ஏற்பட்ட வீதிவிபத்தில் 18 பேர் பலியாகியுள்ளனர்.

உத்தரப் பிரதேச மாநிலம் ஆக்ரா லக்னோ எஸ்க்பிரஸ் வீதியில் பால் லொறியொன்று நின்றிருந்தது. இந்நிலையில் நேற்று அதிகாலை சுமார் 5 மணியளவில் அந்த வழியாக வந்த தனியார் சொகுசு பஸ் ஒன்று லொறி மீது அதிவேகத்துடன் மோதியுள்ளது. இந்த கோர விபத்தில் சம்பவ இடத்திலேயே 19 பேர் உயிரிழந்தனர். விபத்தை நேரில் பார்த்தவர்கள், படுகாயமடைந்தவர்களை மீட்டு மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர்.

பேருந்தில் பயணத்தவர்கள் பீகார் மாநிலம் மோதிஹாரி மாவட்டத்தை சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்திருக்கிறது. இதனையடுத்து இது குறித்து பிரதமர் நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்திருக்கிறார். மேலும் உயிரிழந்தவர்கள் குடும்பத்திற்கு ரூ.2 இலட்சம் நிவாரணம் வழங்கப்படும் என்றும், படுகாயமடைந்தவர்களுக்கு ரூ.50 ஆயிரம் நிவாரணம் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# நாட்டில் புதிய அரசியல், பொருளாதார கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும்



## வங்கியாளர்களின் ஒன்றியத்தின் நிகழ்வில் ஜனாதிபதி தெரிவிப்பு

நாட்டில் புதிய அரசியல் மற்றும் பொருளாதார முறைமையொன்று உருவாக வேண்டும் என்றும், அதற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டு அச்சமின்றி உண்மையைப் பேசக்கூடிய தலைவர்கள் அரசியல் கட்டமைப்பில் உருவாக வேண்டும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தேசிய வங்கியாளர்கள் ஒன்றியத்தினால் அண்மையில் காலிமுகத்திடல் ஹோட்டலில் ஏற்பாடு செய்யப்பட்ட வங்கியாளர் மாநாட்டில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

நாடு எதிர்நோக்கும் பொருளாதாரச் சவாலை அச்சமின்றி மக்களுக்கு எடுத்துக்கூறியதாக தெரிவித்த ஜனாதிபதி, நாட்டை நெருக்கடியிலிருந்து மீட்பதற்குத் தகுந்த வேலைத்திட்டத்தை முன்வைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

அதற்கு மாறான வேலைத்திட்டங்கள் எவையும் நாட்டுக்கு கிடையாதெனவும், கனவுலகில் இருப்பதை விடுத்து நாட்டுக்குத் தேவையான வேலைத்திட்டத்தை அடையாளம் கண்டு செயற்படுத்துவதன் மூலம் பொருளாதாரத்தை முன்னேற்றிச் செல்ல வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளதெனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

சிலர் அர்ஜென்டினாவின் மார்ட்டின் குஸ்மானை முன்மாதிரியாகக் கூறினாலும், அவர் தோல்வியடைந்தவர் என்பதை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, சிலர் உலகத் தலைவர்களிடம் பணம் கேட்கச் சொல்கிறார்கள். ஆனால் சிங்கள தேசம் ஒருபோதும் யாசகம் கேட்டுச் செல்லாதெனவும், தன்னம்பிக்கையால் முன்னேறக்கூடிய தேசமாகவே திகழ்வதாகவும் சுட்டிக்காட்டினார்.



# பொறுப்பை ஏற்று அச்சமின்றி உண்மையை பேசக்கூடிய அரசியல் தலைவர்கள் நாட்டுக்குத் தேவை

ஏற்றுமதிப் பொருளாதாரத்தை அடிப்படையாக கொண்டு நாட்டில் துரித அபிவிருத்தியை ஏற்படுத்துவதே தமது நோக்கமாகும் என தெரிவித்த ஜனாதிபதி, ஏற்றுமதிப் பொருளாதாரத்தை உருவாக்குவதற்கான சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், அந்த வேலைத்திட்டத்தை முன்னோக்கிக் கொண்டுச் செல்வதில் வங்கிக் கட்டமைப்புக்கு முக்கிய வகிபாகம் உள்ளதெனவும் தெரிவித்தார்.




இதன்போது தேசிய வங்கியாளர்கள் ஒன்றியத்தினால் ஜனாதிபதிக்கு விசேட நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.

அதனையடுத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க மற்றும் ஜனாதிபதியின் பொருளாதார விவகாரங்களுக்கான சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க ஆகியோர் இடையேயான கலந்துரையாடல் அமர்வொன்றும் இடம்பெற்றது.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்ததாவது:

"இன்று நாம் பொருளாதாரத்தில் வெகுதூரம் வந்துவிட்டோம். அன்று ஜெட்விங் ஹோட்டலில் இருந்து இந்த காலிமுகத்திடல் ஹோட்டல்வரை என்ன நடந்தது என்பதை நான் சொல்ல வேண்டியதில்லை. அந்தப் பயணத்தில் எனது வீடும் எரிந்து நாசமானது. இன்று ஓரளவு முன்னேற்றத்தை எட்டியுள்ளோம். ஆனால் இன்னும் வெகுதூரம் செல்ல வேண்டியுள்ளது. நாட்டின் வங்கிக் கட்டமைப்பைப் பாதுகாக்காவிட்டால், பொருளாதாரத்தைப் பாதுகாக்க முடியாது என்பதை நான் அப்போதே தெளிவாகக் கூறியிருந்தேன். வங்கிக் கட்டமைப்பு சீர்குலைந்தால், பொருளாதாரமும் நிலைகுலைந்துவிடும்.

அன்று நான் இந்த நாட்டைப் பொறுப்பேற்க வேண்டியிருந்தது. அனைவரும் ஒன்றுபட்டு நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்தும் பணியை ஆரம்பித்தோம். இன்று அதன் பெறுபேறுகள் கிடைக்கின்றன. அனைத்துப் பலன்களும் ஒரே தடவையில் கிட்டிவிடாது.

வெளிநாட்டுக் கடன்களை செலுத்த 4 வருடகால அவகாசம் கிடைத்துள்ளதோடு, மீள்செலுத்துகை தொகையிலிருந்து 8 பில்லியன் டொலர் கடன் தொகையை தள்ளுபடி செய்யவும் முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அதன்படி நாட்டின் பொருளாதாரம் மீண்டும் வளர்ச்சியடைந்து வருகிறது. இப்போது நாம் ஒரு நாடாக ஒரு மைல்கல் இலக்கை அடைந்துள்ளோம். எமக்கு 8 பில்லியன் டொலர் கடன் நிவாரணம் கிடைத்துள்ளதால், புதிய பொருளாதாரத்திற்கு செல்வதற்கான சுதந்திரமான சூழல் உருவாகியுள்ளது. ஏற்றுமதிப் பொருளாதாரத்தை உருவாக்குவதற்குத் தேவையான சட்டமூலத்தையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறோம்.

நாம் இங்கிருந்து முன்னேறிச் செல்ல வேண்டும். அதற்குள் வங்கிக் கட்டமைப்பின் வகிபாகம் முக்கியமானது. இதற்கான பணத்தை எவ்வாறு தேடப் போகிறோம்? வெளிநாட்டு முதலீடுகளைக் கொண்டுவர வேண்டும். அப்போதுதான் வங்கிகள் செழிப்படையும். இந்த இலக்கை நாம் இன்னும் அடையவில்லை.

சரிவடைந்த பொருளாதாரத்தை நாம் சரிசெய்து முன்னோக்கிச் சென்றாலும், சீர்குலைந்த அரசியல் கட்டமைப்பு இன்னும் சரி செய்யப்படவில்லை. அன்று சில தலைவர்கள பயந்தோடினர். அதனால் இந்த நாட்டில் அரசியல் தலைமைத்துவம் எவ்வாறானது என்ற கேள்வி எழுகிறது. அத்தகைய தலைவர்களால் நாட்டை முன்னேற்ற முடியுமா? நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வு இல்லாததன் காரணமாகவே அன்று அவர்கள் பயந்தோடினர்.



முன்னாள் ஜனாதிபதி பதவி விலகிய பின்னர் நாட்டின் அமைதியும் ஸ்திரத்தன்மையும் ஆட்டம் கண்டன. சிலர் என்னை பிரதமர் பதவியிலிருந்து விலகச் சொன்னார்கள். அவ்வாறான அரசியல் முறையுடன் முன்னோக்கிச் செல்ல முடியாது. நாட்டின் பொருளாதார மாற்ற சட்டமூலத்தை நாம் சமர்ப்பித்த வேளையில் அதற்கு எதிராக பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி வழக்குத் தாக்கல் செய்தார்.



'இறக்குமதி அடிப்படையிலான பொருளாதாரம் தேவை' என்று அவரின் மனுவில் கூறப்பட்டுள்ளது. இன்றும் இறக்குமதிப் பொருளாதாரத்தை மையமாகக் கொண்டு செயற்படுவதாலேயே பொருளாதாரச் சிக்கலை எதிர்கொண்டிருக்கிறோம்.

'சர்வதேச நாணய நிதியம் வேண்டாம் என்று கூறியபோதும், பொருளாதார நெருக்கடி இருப்பதை கருத்தில் கொள்ளாமல் எதற்காக வரிகளைக் குறைத்தீர்கள்?' என ஒருநாள் நான் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கேட்டேன், தொழில் உரிமையாளர்கள் விடுத்த கோரிக்கையின் காரணமாகவே அதனைச் செய்ததாகக் கூறினார். அவர் சொன்னது தான் உண்மை. அதனை நானும் அறிவேன். நீங்கள் ஏன் வரியைக் குறைக்கவில்லை என்றும் அவர்கள் என்னிடம் கேட்டார்கள். அப்படிக் கேட்டவர்களை இன்று தேடிக் கொள்ள முடியவில்லை. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் தனிமையில் இருக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

நாட்டுக்குத் தேவையான வேலைத்திட்டத்தை நாம் சரியாகத் தேர்ந்தெடுத்து முன்னேற வேண்டும். கனவுலகில் இருப்பது நல்லதல்ல. உண்மையை அறிந்து செயல்பட வேண்டும். இன்றைய நடவடிக்கைகளே நமது எதிர்காலத்தைத் தீர்மானிக்கும். நாம் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புகிறோம்.

புதிய அரசியல் முறைமையை நாம் உருவாக்க வேண்டும். அதற்கான பொறுப்புகளையும் ஏற்றுக் கொண்டு உண்மை நி லைவரத்தை அச்சமின்றி பே சக்கூடியவர்களையும் உருவாக்க வேண்டும். இல்லாவிட்டால் நாட்டுக்கு எதிர்காலம் இருக்காது.

நாம் எப்போதும் உண்மையைச் சொல்வோம். அரசியலில் உண்மையைச் சொல்ல அச்சப்பட வேண்டாம். அனைத்துக் கட்சியினரையும் ஒன்றிணைத்துத்தான் இந்த அரசாங்கத்தை நடத்தினேன். சில கட்சிகளில் ஒழுக்கம் இல்லாவிட்டாலும், அரசாங்கத்துக்குள் ஒழுக்கம் உள்ளது.

அதனால் அச்சமின்றி எம்மோடு இணைந்து கொள்ளுங்கள். பொதுஜன பெரமுனவின் இளம் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது அரசியல் எதிர்காலம் பற்றிச் சிந்திக்காமல் எம்முடன் இணைந்துள்ளனர். இன்று நாம் பொருளாதாரத்தைத் தயார் செய்துள்ள நிலைக்கு அரசியல் முறைமை வரவில்லை. அது பற்றிய சிந்தனையுடன் பணியாற்ற வேண்டும்."

இவ்வாறு ஜனாதிபதி தனது உரையில் தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க உரையாற்றுகையில், "அசேல பெர்னாண்டோ 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி இச்சங்கத்தின் கூட்டத்தை நடத்தியபோது, நாடு பெரும் நெருக்கடியில் இருந்தது.

நெருக்கடியின் உச்சத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. எங்கள் கட்சியில் தனியொரு உறுப்பினராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அப்போது பாராளுமன்றத்தில் இருந்தார். அன்று நீங்கள் அனைவரும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்குமாறு அவருக்கு அழைப்பு விடுத்தீர்கள். அன்று நீங்கள் கேட்ட கேள்விகளும் எனக்கு நினைவிருக்கின்றன. அன்றைய தினம் அவர் உங்களுக்குக் கூறிய அறிவுரை எனக்கு நினைவிருக்கிறது.

குறிப்பாக சர்வதேச நாணய நிதியத்துடன் நாம் பணியாற்ற வேண்டும் எனக் கூறினார். இந்த விடயத்தை அவர் பாராளுமன்றத்திலும் அன்றைய அரசாங்கத்தின் அனைத்துத் தலைவர்களுக்கும் அறிவித்திருந்தார். இறுதியாக, அவர் சொன்ன அறிவுரையை செயல்படுத்தும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. ஜனாதிபதியாக பதவியேற்று மிகக்குறுகிய காலத்தில் அந்தப் பிரச்சினைகளை ஒவ்வொன்றாகத் தீர்க்க ஆரம்பித்தார்.

முதலாவதாக, நாட்டில் சட்டம் ஒழுங்கு உறுதி செய்யப்பட்டது. வரிக் கொள்கை மற்றும் பொதுச் செலவினங்களை மட்டுப்படுத்தி நாட்டை தற்போதைய நிலைக்குக் கொண்டுவர பல சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

சர்வதேச நாணய நிதியத்துடனான நிர்வாகம் தொடர்பான அறிக்கையைப் ஏற்றுக்கொண்ட பிராந்தியத்தில் முதலாவது நாடாக இலங்கை மாறியது. அந்த அறிக்கையின்படி மோசடி, ஊழலைத் தடுப்பது உள்ளிட்ட 15 விடயங்களை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளோம்.

எனவே, இன்று நாம் ஒரு குறிப்பிட்ட ஸ்திரத்தன்மையை அடைந்துள்ளோம். நாம் தற்போது கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டிருக்கிறோம். நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த வங்கித் துறையில் உங்கள் அனைவரின் ஆதரவும் எமக்குத் தேவை. உங்களின் ஆதரவு கிடைத்தால் நாட்டை வேகமாக கட்டியெழுப்ப முடியும்" என்று தெரிவித்தார்.

இந்நிகழ்வில், முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க, பாராளுமன்ற விவகாரங்களுக்கான ஜனாதிபதி ஆலோசகர் ஆஷு மாரசிங்க, ஜனாதிபதி தொழிற்சங்க பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய, கொழும்புத் துறைமுக நகரத்தின் பிரதான செயற்பாட்டு அதிகாரி ரேவன் விக்கிரமசூரிய, அரச மற்றும் தனியார் வங்கிகளின் தலைவர்கள், தேசிய வங்கியாளர்கள் சங்கத்தின் செயலாளர் அசேல பெர்னாண்டோ மற்றும் வங்கிகளின் நிறைவேற்று அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

(ஜனாதிபதி ஊடகப் பிரிவு)

## குறைந்த வருமானம் பெறும் 50,000...

கொழும்பு மாவட்டத்தில் 31 அடுக்கு மாடி குடியிருப்புகளில் அமைந்துள்ள 130 வீடுகளுக்கான உரிமைகள் இதில் வழங்கப்பட்டன.

இதன்போது அடையாளமாக ஜனாதிபதி சிலருக்கு வீட்டு உரிமைகளை கையளித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவின்படி, 2024 வரவு செலவுத் திட்டத்தில் 20 இலட்சம் மக்களுக்கு இலவச காணி உரிமை வழங்கும் உருமய வேலைத்திட்டம் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகளில் வசிக்கும் குறைந்த வருமானம் பெறும் இரண்டரை இலட்சம் குடும்பங்களுக்கு அந்த வீடுகளின் முழு உரிமையை வழங்கும் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் குறைந்த வருமானம் பெறுவோருக்கு மாதாந்தம் 3000 ரூபா அல்லது அதற்கும் குறைவான வாடகை அடிப்படையில் வழங்கப்பட்ட அடுக்குமாடி குடியிருப்புகள் உட்பட அனைத்து வீடுகளுக்காகவும் 150,000 ரூபாவினை செலுத்தி முடித்திருப்போர் மற்றும் இதுவரையில் அந்த தொகையினை செலுத்தாமல் இருந்து ஒரு மாதத்திற்குள் அந்தத் தொகையை செலுத்தி முடிப்போர் உள்ளடங்கலாக 50,000 பயனாளி குடும்பங்களுக்கு முதல் கட்டத்தின் கீழ், முழுமையான வீட்டு உரிமை வழங்கப்படும்.

இந்த ஆண்டு இறுதிக்குள் 1070 பயனாளிகளுக்கு உரிமைப் பத்திரங்களை வழங்க தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை திட்டமிட்டுள்ளது.

## தொடர்ந்தும் சம்பள உயர்வை...

போதுமான வருமானத்தைக் கொண்டிருக்க வேண்டும். அரச ஊழியர்களுக்கு ஊதியம் வழங்க வேண்டும். அஸ்வெசும போன்ற நலத்திட்ட உதவிகளை வழங்க வேண்டும். இவற்றைச் செய்ய உங்களிடம் பணம் இல்லையென்றால், நீங்கள் கடனில் மூழ்க வேண்டும். தொடர் செலவுகளை சமாளிக்க அரசுக்கு வருமானம் இல்லை. கடந்த ஆண்டு, அரசு ஊழியர்களின் சம்பளம் மற்றும் செலவுகளுக்காக 4.7 டிரில்லியன் செலவிடப்பட்டுள்ளது. அனைத்து வழிகளிலிருந்தும் மூன்று டிரில்லியன் பெறப்பட்டுள்ளது, அதாவது வரி மற்றும் வரி அல்லாத வருவாய்கள். நீங்கள் சொன்ன முறைகளைத் தவிர்த்து இவற்றைச் செய்ய முடியுமா? என்று விமர்சிப்பவர்களிடம் கேட்கிறேன். யாருடைய அரசாங்கம் இருந்தாலும், அரசியல் மேடைகளில் பொய்யான வாக்குறுதிகளை அளிக்கிறார்கள். ஆட்சிக்கு வந்ததும் சூரியனை கொடுப்போம் சந்திரனை கொடுப்போம் என்கிறார்கள். எங்கே கொடுப்பது பத்து இலட்சம் மதிப்பிலான ஸ்மார்ட் கிளாஸ் ரூம் கொடுப்பது போல் இந்த கூறும் விடயங்களைத் கொடுக்க முடியுமா? இந்த நாட்டு மக்களுக்கு இந்த பொய் சொல்லப்படுகிறது. சம்பளம் கொடுக்க நாம் செய்யும் செலவு நம்மால் தாங்கக்கூடிய செலவு அல்ல. வரி வருவாயில் பாதிக்கு மேல் அரசு ஊழியர் சம்பளம் மற்றும் ஓய்வூதியம் வழங்குவதற்காக செலவிடப்படுகிறது.

## சட்டத்துக்கு மாறாக செயற்பட்ட ரயில்...

நிலைய அதிபர்கள் மற்றும் ரயில் கட்டுப்பாட்டாளர்கள் சேவையை விட்டு வெளியேறியதாகக் கருதப்படுவார்கள் என்றும் தெரிவித்தார்.

நேற்று (10) மதியம் 12 மணிக்கு அருகிலுள்ள ரயில் நிலையத்துக்கு வர வேண்டுமென்றும் ரயில்வேயின் பொது முகமையாளர் எஸ். எஸ். முதலிகே குறிப்பிட்டார்.

இலங்கை ரயில் திணைக்களம் அத்தியாவசிய சேவைகளை வழங்கும் நிலையிலேயே இந்த பணிப்புறக்கணிப்பு நடந்துள்ளதாகவும் அவர் அந்த அறிவிப்பில் சுட்டிக்காட்டியுள்ளார்.

## தமிழர்களின் பிரச்சினைகளை தீர்க்கும்...

இராசமாணிக்கம் சாணக்கியன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அந்த வகையில், தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு தொடர்பான சட்ட மூலங்களை மிக, விரைவாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க அவர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சாணக்கியன் எம். பி சபையில் கேட்டுக்கொண்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற மதுவரி கட்டளைச் சட்டம் மற்றும் ஏற்றுமதி, இறக்குமதி கட்டுப்பாட்டுச் சட்டங்கள் குறித்த வர்த்தமானி அறிவித்தல்கள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நான், சந்தித்தபோது மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு தம்மால் எத்தகைய தடையும் விதிக்கப்படாது என்று தெரிவித்தார்.

அவ்வாறானால் நாம் அவரிடம் ஒரு கோரிக்கையை முன்வைக்க விரும்புகின்றோம்.

மாகாணசபை முறைமையில் எல்லை நிர்ணயங்கள் என்ற விடயம் குழப்பகரமானதாக நீடித்துக் கொண்டிருக்கின்றது. இதனை நிவர்த்தி செய்வதற்கு சுமந்திரன் எம்.பி.யினால் ஒரு தனிநபர் பிரேரணை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு ஒரு வருடத்திற்கும் மேலாகி விட்டது .

சுமந்திரன் எம்.பி.யின் இந்த தனிநபர் பிரேரணையை அரசாங்கம் ஒரு சட்டமாக இயற்றுமாகவிருந்தால், நாட்டிலுள்ள தமிழ் மக்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாகாண சபைத்தேர்தலை நடத்துவதற்கு இணக்கம் தெரிவிக்கின்றார் என்றதொரு செய்தியை கொடுக்க முடியும்.

அதேபோன்று மாகாண சபைகளிடமிருந்து பறிக்கப்பட்ட அதிகாரங்களைப்பற்றி ஆராய்வதற்காக பிரதமர் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டது. அத்துடன் தென் மாகாணத்திலுள்ள முன்னாள் மாகாணசபைகளின் முதலமைச்சர்கள் தயாரித்த அறிக்கை ஒன்றும் உள்ளது.இந்த அறிக்கையூடாக தென் மாகாணத்தில் உள்ளவர்களும் இணங்கிய விடயங்கள் தொடர்பில் அறிய முடியும்.

ஜனாதிபதி 75 க்கும் மேற்பட்ட சட்டமூலங்களை சபையில் சமர்ப்பித்து நிறைவேற்றியுள்ளார். அதேபோல் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பான சட்ட மூலங்களையும் மிக விரைவாக பாராளுமன்றத்திற்கு கொண்டு வந்தால், அதிகாரத்தில் இருக்கும்போது தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தயாராக இருக்கின்றார் என்ற செய்தியை வெளிப்படுத்தும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஜனாதிபதித் தேர்தலை நடத்துதல்...

செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

அரசியலமைப்பு மற்றும் ஏனைய பொருத்தப்பாடுடைய சட்டங்களின் தேவைப்பாட்டிற்கிணங்க 2024 செப்டெம்பர் 17 முதல் ஒக்டோபர் 16 வரையான காலப் பகுதியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது தொடர்பாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க மற்றும் எதிர்க்கட்சியின் பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியெல்ல ஆகியோரினால் கூட்டாக முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு அமைய இந்த ஒத்திவைப்பு விவாதம் நடத்தப்படவுள்ளது. இதற்கமைய, இன்று வாய்மூல விடைக்கான வினாக்களையடுத்து, மு.ப. 10.30 முதல் மாலை . 5.30 வரை விவாதத்தை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இன்று விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவிருந்த விலங்கின நலம்பேணல்சட்டமூலத்தை எதிர்வரும் தினமொன்றில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள இதன்போது தீர்மானிக்கப்பட்டதாகவும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர மேலும் தெரிவித்தார்.

## பேச்சுவார்த்தைகளூடாக சம்பள...

முதலாம் திகதியிலிருந்து நிலுவை சம்பளத்துடன் தோட்டத் தொழிலாளர்களுக்கு அதிகரிக்கப்பட்ட சம்பளத்தை வழங்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விடயத்தில் பெருந்தோட்டக் கம்பனிகள் தம்மை மாற்றிக் கொள்ள வேண்டும். தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தில் மாற்றங்கள் ஏற்படாவிட்டால், மாற்றத்தை ஏற்படுத்த நாம் நடவடிக்கை எடுப்போம் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று மதுவரி கட்டளைச் சட்டம் மற்றும் ஏற்றுமதி, இறக்குமதி கட்டுப்பாட்டுச் சட்டங்கள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

மலையக மக்கள் பல்வேறு துன்பங்களுக்கு உள்ளாகி, பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளனர். உழைப்புக்கேற்ற ஊதியமின்றி பெரும் கஷ்டங்களை அனுபவிக்கின்றனர்.அந்த மக்களின் சம்பள உயர்வு சட்டப்பூர்வமாக வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட போதும். அதனை எதிர்க்கும் சக்தி தனியார் துறை தோட்டக் கம்பனிகளுக்கு இருப்பது ஆச்சரியம்.

பொருளாதாரத்தின் முதுகெலும்பாகத் திகழும் மலையக மக்களின் சம்பள உயர்வுக்கு எதிராக அவர்கள் நீதிமன்றம் செல்கிறார்கள் என்றால் தோட்டக் கம்பனிகள், நிருவாகங்கள் எவ்வாறு மோசமாக செயல்படுகின்றன என்பதை புரிந்து கொள்ள முடிகின்றது.

மலையக மக்களின் சின்னங்கள், வண்ணங்கள் எதுவாக இருந்தாலும் அவர்களின் எண்ணங்கள் ஒன்றாகவே இருக்கின்றன. மலையக பெருந்தோட்ட சமூகத்திற்கு விடிவுகாலம் வர வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை நாம் மேற்கொள்ள வேண்டும்.

இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை அதிகரிக்கப்பட வேண்டிய சம்பளம் இப்போது நான்கு வருடங்களாகியும் எந்தவித மாற்றங்களும் இல்லாது காணப்படுகிறது. இதற்கு தீர்வு வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## 1990 'சுவ செரிய' சேவைக்கு

அறக்கட்டளை ஆரம்பிக்கப்பட்டது. இதற்காக வழங்கப்பட்ட 25 ஆம்பியூலன்ஸ் வண்டிகள் உட்பட 322 ஆம்புலன்ஸ் வண்டிகள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

தற்போது இச்சேவைக்கு 450 ஆம்பியூலன்ஸ் வண்டிகள் மற்றும் 25 பெக் அப் ஆம்பியூலன்ஸ் வண்டிகள் தேவையென அடையாளம் காணப்பட்டுள்ளது. தற்போது 150 ஆம்புலன்ஸ் வண்டிகள் பற்றாக்குறையாக உள்ளது.

இதன்படி, இந்தியாவின் TATA Sons (Pvt) Ltd நிறுவனம் 50 ஆம்பியூலன்ஸ் வண்டிகளை இலவசமாகவும், Asia Development Bank 45 ஆம்பியூலன்ஸ் வண்டிகளை மானியமாகவும் வழங்க ஒப்புக்கொண்டுள்ளன.

மேற்படி ஆம்பியூலன்ஸ் வண்டிகளை '1990 சுவசெரிய அறக்கட்டளைக்கு' பெற்றுக் கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, சுகாதார அமைச்சர் முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## வாகனங்கள் இறக்குமதி தீர்மானம்...

அமைச்சர் சுட்டிக்காட்டினார். நாட்டின் பரிவர்த்தனை நிலை மற்றும் மக்களின் தேவைகளின் முன்னுரிமைக்கு ஏற்ப, வாகனங்களை இறக்குமதி செய்ய முடியுமென தாம், நம்புவதாக அமைச்சர் தெரிவித்தார்.

## திறைசேரியுடன் கலந்துரையாடி...

பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அதிபர்கள், ஆசிரியர்கள் சம்பள முரண்பாடு நீண்ட காலமாக நிலவி வரும் பிரச்சினை. இதனை ஓரிரு தினங்களில் நிவர்த்தி செய்ய முடியாது. அனைத்து தரப்பினரும் ஒன்றாக அமர்ந்து, சகல துறையினருக்கும் தீர்வு கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கவேண்டும். அவ்வாறில்லாமல் இந்த பிரச்சினைக்கு ஒருபோதும் தீர்வுகாண முடியாது.

அதிபர்களின் ஒட்டுமொத்த பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண்பதற்காக ஓய்வு பெற்ற பேராசிரியர் குணபால நாணயக்கார தலைமையிலான குழு நியமிக்கப்பட்டுள்ளது.இதில் அனைவருக்கும் கருத்து தெரிவிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

## அரசாங்க ஊழியரின் சம்பளத்தை...

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ள நிலையில், சம்பள அதிகரிப்புக் கோரி அரசாங்க ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த போராட்டங்களின் பின்னணியில் மக்கள் விடுதலை முன்னணியினரும் ஐக்கிய மக்கள் சக்தியினருமே உள்ளார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று மது வரி கட்டளைச் சட்டம் மற்றும் ஏற்றுமதி, இறக்குமதி கட்டுப்பாட்டுச் சட்டங்கள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல்கள் விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய இராஜாங்க அமைச்சர்;

பொருளாதார நெருக்கடிக்கு ஒப்பீட்டளவில் தீர்வு காணப்பட்டுள்ள நிலையில், பொருளாதாரம் இன்னும் மீட்சி பெறவில்லை என குறிப்பிடுவோரின் உளவியலை ஆராய வேண்டியுள்ளது.

தேசிய கடன் மறு சீரமைப்பின் போது ஊழியர் சேமலாப நிதியத்துக்கும் இதர நிதியங்களுக்கும் பாதிப்பு ஏற்படும் என்பதை ஆரம்பத்தில் தெரிவித்திருந்தோம். அந்த வகையில் பாரிய நெருக்கடிகளுக்கு மத்தியிலேயே தேசிய கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்சி பெற்றதன் பின்னர், ஊழியர் சேமலாப நிதியத்துக்கான வட்டி வழங்கலை 12 அல்லது 13 சதவீதத்தால் அதிகரிக்க அரசாங்கம் கொள்கை ரீதியில் தீர்மானித்தது.எனவே, பொருளாதார விவகாரத்தில் நாட்டு மக்களை தவறாக வழிநடத்துவதை எதிர்க்கட்சியினர் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

நாடு வங்குரோத்து நிலையடைந்ததன் பின்னர் உலக நாடுகள் அனைத்தும் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கின.ஆனால் துரதிஷ்டவசமாக எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு வழங்கவில்லை.குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக அரசாங்கத்துக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை மாத்திரமே அவர்கள் முன்வைத்தனர்.

குறுகிய காலத்தில் இலங்கை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்சி பெற்றுள்ளது என சர்வதேசம் குறிப்பிட்டுள்ளது. நிலைபேறான தன்மையில், நாட்டின் நிதி உறுதிப்படுத்தப்பட்டுள்ளதையே இது காட்டுகிறது.

சர்வதேச கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இணக்கப்பாட்டுடனான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த வகையில் இருதரப்பு மற்றும் வணிகக் கடன் வழங்குநர்களுடன் இறுதி இணக்கப்பாடு எட்டப்பட்டதும் சகல ஆவணங்களும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

## பயறு, கிழங்கு, சீனி...

உணவுப் பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனையின்படி இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பயறு ஒரு கிலோ விலை 998 ரூபாவாகவும், இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்கு ஒரு கிலோ விலை 205 ரூபாவாகவும், சிவப்பு சீனி ஒரு கிலோ விலை 375 ரூபாவாகவும், வெள்ளை சீனி ஒரு கிலோ விலை 263 ரூபாவாகவும் விலை குறைப்பு செய்யப்பட்டுள்ளது.

## TNA: பாராளுமன்ற குழு தலைமை...

23 வருடங்களாக செயற்பட்டு வந்தார். அவரது மறைவுக்குப் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவராக செல்வம் அடைக்கலநாதனை நியமிப்பதற்கு ஒத்துழைப்பை வழங்குமாறு, தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் பொதுச்செயலாளர் கோவிந்தன் கருணாகரம் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடிதத்தின் பிரதிகள் இலங்கைத் தமிழரசுக் கட்சி மற்றும் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி ஆகியவற்றின் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## பணிப்புறக்கணிப்பில் ஈடுபடாத...

ஆசிரியருக்கு 1,630 ரூபா அதிகரிப்பும் வழங்க அனுமதி கிடைத்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (10) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.ஓய்வூதியத்தை பாதிக்காத வகையில் சம்பள உயர்வு வழங்க நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அரச பிரிவின் ஏனைய சிறு பணியாளர்கள் மற்றும் பணிபுரிந்த அனைவருக்கும் சம்பள உயர்வு கிடைக்கும். கல்வி, சுகாதாரம், போக்குவரத்து போன்ற அத்தியாவசிய சேவைகளை சீர்குலைக்கும் முயற்சியை தடுக்கும் வகையில், இந்த நாசகார நடவடிக்கைகளை சட்டரீதியாக நிறுத்துவதற்கு தேவையான விடயங்களை ஆராய அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷவுக்கு ஜனாதிபதி அனுமதி வழங்கினார். மக்களின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான சேவைகளுக்கு இடையூறு ஏற்படுவதைத் தடுப்பதற்காக அரசு தலையிடுவது தொடர்பாக சட்ட மாஅதிபரின் அறிவுறுத்தல் கிடைத்துள்ளது. எதிர்காலத்தில் நாட்டு மக்கள் அச்சமின்றி வாழ்வதற்கும், பிள்ளைகளின் கல்விக்கு இடையூறு ஏற்படுவதைத் தடுப்பதற்கும், கடந்த நான்கு தசாப்தங்களாக நோயுற்றோர் படும் துன்பங்களைத் தடுப்பதற்கும் அரசாங்கம் கவனம் செலுத்துகிறது. கடந்த நான்கு தசாப்தங்களாக அன்றாடம் இயங்குவதற்கு, தேவையான செலவுகளை செய்வதற்கு போதுமான வருமான வரி மற்றும் வரி அல்லாத வழிகளில் சம்பாதிக்க அரசாங்கம் தவறிவிட்டது. அரசு ஊழியர் சம்பளம், ஓய்வு பெற்ற மூத்த குடிமக்களுக்கு ஓய்வூதியம், சமுர்த்தி , அஸ்வெசும உள்ளிட்ட வாழ்வதற்குப் போராடும் மக்களுக்கு வழங்க போதிய வருமானம் கிடைக்கவில்லை. யாருடைய அரசாக இருந்தாலும் பத்தாம் தேதி ஓய்வூதியம் வழங்க வேண்டும். மாதக் கடைசியில் ஊதியம் வழங்க வேண்டும். யாருடைய தனிப்பட்ட பணத்திலும் இவை செலுத்தப்படவில்லை. நிதியமைச்சர் என்றாலும் ஜனாதிபதியின் தனிப்பட்ட வங்கிக் கணக்கிலிருந்து இதை செலுத்த நினைக்க முடியாது. எங்களில் யாரும் தனிப்பட்ட கணக்கில் இருந்து பணம் செலுத்த முடியாது. மக்கள் கொடுக்கும் வரிப் பணத்தில் சம்பளம் வழங்கப்படுகிறது. கடந்த ஆண்டு 4.7 டிரில்லியன் மீண்டும் மீண்டும் செலவழிக்கப்பட்டது. மூன்று டிரில்லியன் வரி மற்றும் வரி அல்லாத வருமானம் பொதுமக்களுக்கு அதிக அழுத்தம் கொடுத்து பெறப்பட்டுள்ளது. திறைசேரி உண்டியல்களை ஏலம் விடுவதன் மூலம் பெறப்பட்ட நிதியிலிருந்து 1.7 கடன் செலுத்தப்பட்டுள்ளது. ஆமையிடம் இறகுகள் கேட்டால், இறகுகளை எப்படிக் கொடுப்பது? திறைசேரியில் பணம் இல்லை என்றால் எத்தனை வேலை நிறுத்தம் செய்தாலும் வழியில்லை.

இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்பவர்கள் இன்னும் சில மாதங்களில் ஆட்சிக்கு வருவோம் என்று கூறினால், ஊதிய உயர்வுக்கு எங்கிருந்து பணம் வரும் என்பதை மக்களிடம் சொல்ல வேண்டும். கண்டிப்பாக மூன்று மாதங்களில் ஆட்சிக்கு வருவதாகக் கூறுகிறார்கள். அப்படியானால், நீங்கள் அமைதியாக உட்கார்ந்து சம்பள வேலையைச் செய்யலாம்.

## G.C.E A/L பரீட்சை: விண்ணப்ப...

தீர்மானித்துள்ளதாக பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது. நீடிக்கப்பட்ட திகதிக்கு பின்னர், எக்காரணம் கொண்டும் காலம் பிற்போடப்படமாட்டாதெனவும் பரீட்சைகள் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. 2024 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை நவம்பர் 25 முதல் டிசம்பர் 20 வரை நடைபெறவுள்ளது.

## இன்றைய பலன்கள்

(11.07.2024)

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:**
திட்டமிட்ட பணம் வரவுகளில் தாமதங்கள் உண்டாகும். சில செயல்களில் கவனமாக இருப்பது அவசியம்.

**ரிஷபம் :**
பணம் வரும் வழிகளில் அதிக கவனம் செலுத்துவீர்கள். நீண்டகால நண்பரை திடீரென்று சந்தித்து மகிழ்வீர்கள்.

**மிதுனம்:**
பணிகளில் கவனமும் நிதானமும் தேவைப்படும் நேரம் இது. வார்த்தைகளை கவனமாக கையாள்வது அவசியம்.

**கடகம்:**
உத்தியோகத்தர்கள் தங்கள் பணிகளில் கவனமும் நிதானமும் கொண்டு செயலாற்றுவது நல்லது.

**சிம்மம்:**
முக்கிய ஆவணங்களில் கையெழுத்திடுவதை தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தர்கள் தங்கள் வேலைகளில் மிகுந்த கவனமாக இருப்பது அவசியம்.

**கன்னி:**
உத்தியோகத்தில் சிலருக்கு அலுவலகத்திலேயே பதவி உயர்வும் சம்பள உயர்வு கிடைக்கக்கூடும். சொந்த தொழிலில் பணிகள் சுறுசுறுப்பாக நடைபெறும்.

**துலாம்:**
முக்கிய முடிவுகளை தக்க நண்பர்களின் ஆலோசனையின் பேரில் எடுப்பது தான் நன்மை தரும். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் ஆதரவுடன் சிலர் சலுகைகளை அனுபவிப்பீர்கள்.

**விருச்சிகம்:**
மனதிற்கு பிடித்தவர்களின் சந்திப்பு மகிழ்ச்சி அளிக்கும். உத்தியோகத்தர்களில் சிலருக்கு பணி நிரந்தரமாக வெளியூர் பயணம் செல்ல நேரிடும் .

**தனுசு:**
உத்தியோகத்தில் உயர் அதிகாரிகளின் ஆதரவோடு சில சலுகைகளை பெறுவீர்கள். சொந்த தொழில் சிறப்பாக நடைபெறும் .

**மகரம்:**
எதிர்பார்த்த பணம் வரவு தாமதமாகலாம். அதே நேரம் செலவுகள் அவசரப்படுத்தும். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகள் அனுசரித்து நடந்து கொள்ளுங்கள்.

**கும்பம்:**
பண வரவுகள் திட்டமிட்டபடி வந்து சேர்ந்தாலும் செலவுகள் அதிகமாகும். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்று செய்ய வேண்டியது இருக்கும்.

**மீனம்:**
பண வரவுகளில் சிறு தடங்கல்கள் ஏற்பட்டு பின்னர் வந்து சேரும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் பொறுப்பில் உள்ள பதிவேடுகளை கவனமாக கையாளுங்கள்.

## பொருளாதாரத்தை நிமிர்த்து... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநாடுகளில் பட்டப்படிப்பு உள்ளிட்ட தொழில் கல்வியில் ஈடுபடும் குழந்தைகளுக்காக சுமார் இரண்டு பில்லியன் பணம் நமது நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு அதிகாரப்பூர்வமற்ற முறையில் செலுத்தப்படுகிறது.

## போலிக்கடவுச்சீட்டில் வியன்னா... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்யப்பட்டவர் யாழ்ப்பாணம், தெல்லிப்பழை பகுதியைச் சேர்ந்த 39 வயதுடையவரென அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் நேற்று முன்தினம் (09) இரவு இந்தியாவுக்குச் சென்று, பின்னர் அங்கிருந்து ஒஸ்ரியாவின் வியன்னா செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வருகை தந்துள்ளார்.

இதன்போது, குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் பாதுகாப்பு பிரிவு அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபரின் கடவுச்சீட்டு போலியானது என்பது உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து, சந்தேக நபர் கைது செய்யப்பட்டு மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், தரகர் ஒருவரிடம் 90 இலட்சம் ரூபா பணத்தை கொடுத்து, இந்த போலி கடவுச்சீட்டை தயாரித்ததாக தெரிவித்தார்.

## அரசாங்கத்தை எதிர்க்கட்சி... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் எதிர்க்கட்சி பாராளுமன்றத்தில் தெரிவிக்க வேண்டும் அல்லது அவர்களது கொள்கை விஞ்ஞாபனத்தில் அதற்கான தீர்மானத்தை அறிவிக்க வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

## சந்தேக நபர்களை... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்தவர்கள் என்றும் தெரிய வந்துள்ளது. சந்தேக நபர்களுள் பச்சை குத்துபவர், முன்னாள் இராணுவ வீரர், பஸ் நடத்துநர், முச்சக்கர வண்டி சாரதி மற்றும் வர்த்தகர் ஒருவர் அடங்குவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.குற்றச்செயலுக்கு பயன்படுத்தப்பட்ட போலி இலக்கத்தகடு பொருத்தப்பட்ட கார் மற்றும் வேன் ஆகியவையும் பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளன.

## 2025; பட்ஜட் தயாரிப்புக்காக... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

இன்னும் சில மாதங்களில், 2025 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் தயாரிக்கப்படவுள்ளது. வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டாலேயே அரச ஊழியரின் சம்பளம், சிரேஷ்ட பிரஜைகளுக்கான ஓய்வூதியம், சமுர்த்தி, அஸ்வெசும என்பன வழங்கப்படுமென போக்குவரத்து மற்றும் வெகுசன ஊடகத் துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்திருந்தார்.

## NTC யின் சட்டத்தில்... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

அந்த வகையில் தற்போது தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு பஸ் கட்டணங்கள் தொடர்பில் மட்டுமே தலையிட முடியும். பாடசாலை வேன்கள், முச்சக்கர வண்டிகள் உள்ளிட்ட வாகனங்களுக்கும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு ஒழுங்குபடுத்தலை மேற்கொள்வதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளது. சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டு சட்ட மூலமாக்கி சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அதனை அனுப்பி, மீள பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள நிலையில் விரைவில் அதனை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## தேர்தலில் வெற்றி பெற... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிலைமையில்தான் நாட்டின் அரசியல் கட்சிகள் தொடர்ச்சியாக பொதுமக்களுக்கு பொய்யான வாக்குறுதிகளை வழங்கி, நாட்டை காலாகாலமாக வீழ்ச்சியடையச் செய்து வருகின்றன. இந்நிலையை மாற்றியமைக்க வேண்டியதன் காரணமாக தற்போதைய ஜனாதிபதி, அரசியலமைப்பின் 27, 28 மற்றும் 29 ஆகிய பிரிவுகளை பொறுப்புக் கூறக்கூடிய வகையில் பொருளாதார மாற்ற சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.

## இலங்கை மாணவரின் வீசா காலத்தை...

மலேசியாவில் உயர்கல்வி கற்கும் 3,800 க்கும் மேற்பட்ட இலங்கை மாணவர்கள் தற்போதைய சட்டத்தின் படி ஒவ்வொரு இரண்டு வருடங்களுக்கும் இலங்கைக்கு திரும்பி விசாவைப் புதுப்பிக்கும் நிலை காணப்படுகிறது.

எனவே, அவர்களின் பட்டப்படிப்பை நிறைவு செய்யும் காலமான 04 வருடங்களுக்கும் விசா காலத்தை அதிகரித்து தருமாறு மலேசியா உயர் கல்வி அமைச்சர் ஷாம்ப்ரி அப்துல் காதிரிடம் ஆளுநர் வேண்டுகோள் விடுத்தார்.




## அரச உரம்

ஒரு நாட்டின் விவசாயத்தைப் பொறுத்தவரை, அது நாட்டு மக்களின் முக்கிய வாழ்வாதாரமாகும். பயிர்செய்கைக்கான உரங்கள் உரிய நேரத்தில் கிடைக்காததால், நாட்டு மக்களின் வாழ்க்கை சீர்குலைந்துள்ளதை நாம் நன்கு அறிவோம். ஆனால் தற்போதைய அரசாங்கத்தின் தொலைநோக்குள்ள தலைமைத்துவத்தாலும், வேலைத்திட்டத்தாலும் சரிந்து போன விவசாயம் புத்துயிர் பெற்று வருகிறது.இந்தப் பயணத்தை மேலும் வெற்றியடையச் செய்யும் வகையில் லக் உர நிறுவனமும் கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனமும் இணைந்து வினைத்திறனான சேவையை வழங்கும் நோக்கில் அரசாங்க உர நிறுவனம் (State Fertilizer Co. Ltd.) என்ற பெயரில் புதிய பயணத்தை ஆரம்பிக்கின்றன.

## தேசத்தினை செழிப்புறச் செய்திட

பரம்பரை பரம்பரையாக விவசாயப் பண்பாட்டைக் கொண்டுள்ள நம் நாட்டை உணவால் மலரச் செய்யும் படிகளாக இது அமையும். எனவே, இந்த ஆரம்பம் முழு தேசத்தினையும் செழிப்புறச் செய்திடும்.



“லக் உரம் நிறுவனமும், கொமர்சல் உர நிறுவனமும் இணைந்து, அரச உர நிறுவனம் என்ற பெயரில் புதிய பயணத்தைத் தொடங்கி, நமது தேசிய விவசாயத் துறையில் புதிய சகாப்தத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும், விவசாயம் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் கீழ் இயங்கும் இந்த நிறுவனம், சம்பந்தப்பட்ட அனைத்து பங்குதாரர்களின் கூட்டு முயற்சிகளையும் அர்ப்பணிப்பையும் அடையாளப்படுத்துகிறது. நமது விவசாயத் துறையை வலுப்படுத்தவும், உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யவும், பொருளாதார வளர்ச்சியை உயர்த்தவும் அரச உர நிறுவனம் முக்கியப் பங்காற்றும்.”

**ரணில் விக்கிரமசிங்க**
**ஜனாதிபதி**
**இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின்**



“உரிய நேரத்தில் உரம் கிடைக்காமல் தடைப்பட்டிருந்த இலங்கை விவசாயம் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழிலுக்கு புத்துயிர் அளிப்பதை நோக்காகக் கொண்டு, அரச உர நிறுவனத்தின் ஊடாக விவசாயத்திற்கு மேலும் வினைத்திறனான ஆதரவை வழங்குவதே எமது நோக்கமாகும். அதிமேதகு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களின் தலைமையில் அரச உர நிறுவனத்தினை ஸ்தாபிப்பதற்கு உறுதுணையாக இருந்த கௌரவ அமைச்சர்கள், அதிகாரிகள் மற்றும் அனைத்து தரப்பினருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.”

**மஹிந்த அமரவீர**
**விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர்**









# அரச உரம்

### தேசத்தின் அறுவடை

**லக் உரம் மற்றும் கொமர்ஷல் உரம்**
**நிறுவனத்தின் சக்திமிகு இணைப்பு**

# கிழக்கின் குரல்



# இனரீதியான சிந்தனையைக் கைவிட்டு நாட்டை முன்னேற்ற ஒன்றிணைவோம்

## எஸ்.எம்.எம். முஷாரப் எம்.பி



(திராய்க்கேணி தினகரன் நிருபர்)

தமிழ், முஸ்லிம், மற்றும் சிங்கள மக்கள் என மூவின மக்களும் ஒற்றுமையாக வாழும் ஒரு பிரதேசம் நாவிதன்வெளி பிரதேசமாகும். இங்கு இனரீதியான செயற்பாடுகளுக்கு நான் ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை.

இன ரீதியான சிந்தனையை கைவிட்டு நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல ஒன்றிணைவோம் என நாவிதன்வெளி பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.எம்.எம். முஷாரப் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தின் நாவிதன்வெளி பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டம் பாராளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்பு குழு தலைவருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் தலைமையில் நாவிதன்வெளி பிரதேச செயலக கலாசார மத்திய நிலையத்தில் கடந்த 8ஆம் திகதி நடைபெற்றது.

நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி ராகுலநாயகி சஜிந்திரனின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இக்கூட்டத்திலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அரச உத்தியோகத்தர்களாக இருந்தாலும் சரி அல்லது சாதாரண பொதுமக்களாக இருந்தாலும் சரி இங்கு முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை இன ரீதியான சிந்தனை கொண்டு பிழையான முன்மாதிரிகளை செய்வதற்கு நான் ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை.

பல்லின மக்களும் ஒற்றுமையாக வாழ்ந்து நமது பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய வேண்டிய பொறுப்பு இங்கு வாழும் சகல மக்களினதும் பொறுப்பாகும். சமாதானம் நல்லிணக்கத்தோடு எதிர்கால சந்ததிகளுக்கு பொருத்தமான பிரதேசமாக ஒவ்வொரு பிரதேசங்களையும் மாற்ற வேண்டிய பொறுப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உண்டு என நான் கருதுகிறேன்.

எனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிகள் பொதுமக்களின் நலன் கருதி அவசரமாக செலவு செய்யப்பட வேண்டும். உரிய வேலைத்திட்டங்களை உரிய காலப்பகுதிக்குள் நிறைவு செய்து கொள்ளுமாறு சகல திணைக்கள தலைவர்களையும் நான் கேட்டுக் கொள்கிறேன் என்று தெரிவித்தார்.

இந்த அபிவிருத்தி குழு கூட்டத்தில் நாவிதன்வெளி பிரதேச பொதுமக்கள் எதிர்கொள்ளும் வீட்டுத் திட்டம், உரிமய காணி வேலைத்திட்டம், குடிநீர், கல்வி அபிவிருத்தி, சுகாதாரம், மின்சாரம், வீட்டுத்திட்டம், வீதி அபிவிருத்தி போன்ற பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன. அதேநேரம் திணைக்களத் தலைவர்களால் முன்வைக்கப்பட்ட சில பிரச்சினைகளுக்கு தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. எதிர்காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டன.

இந்த பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான பைசல் காசிம், ரி.கலையரசன் உட்பட உதவி பிரதேச செயலாளர் பி.பிரணவரூபன், கணக்காளர் றிஸ்வி யஹ்சர், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி திலகராணி கிருபைராசா, பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள், பொறுப்பு உத்தியோகத்தர்கள், சமூக நிறுவனங்களின் தலைவர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# பிரதேச கடற்றொழிலாளர்களுக்கு இலவச அரிசி விநியோகம்

(ஒலுவில் விசேட நிருபர்)

பொருளாதாரரீதியாக பாதிக்கப்பட்டுள்ள ஒலுவில் பிரதேச கடற்றொழிலாளர்களுக்கு ஒலுவில் சக்காத் சபையினால் அரிசி விநியோகிக்கப்பட்டுள்ளது.

ஒலுவில் சக்காத் சபையின் தலைவர் பொறியியலாளர் ஈ.எல். ஹைதர் அலி தலைமையில் கடந்த திங்கட்கிழமை சக்காத் சபை காரியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட 375 மீனவ குடும்பங்களுக்கு 07 இலட்சத்தி 50 ஆயிரம் ரூபா பெறுமதியான அரிசி விநியோகிக்கப்பட்டுள்ளது.

மீனவர்கள் கடந்த சில மாதங்களாக பொருளாதாரரீதியாக பெரும் சிரமங்களை தொடர்ச்சியாக எதிர்கொண்டு வருவதாக மீனவர்கள் தெரிவித்ததையடுத்து அரிசி விநியோகிக்கப்பட்டுள்ளதாக, தலைவர் பொறியியலாளர் ஈ.எல்.ஹைதர் அலி தெரிவித்தார்.

# நீர் வீண்விரயம்; டெங்கு நோய் பரவும் அபாயம்

(கிண்ணியா மத்திய நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பேராறு, மார்கான் என்ற சந்தியில் பிரதான குடிநீர் குழாய் உடைந்து கடந்த இரண்டு மாதகாலமாக தொடர்ச்சியாக குடிநீர் வீணாக வெளியேறிக் கொண்டிருப்பதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த பகுதிக்கு வருகை தந்த சுகாதார அதிகாரிகள் குடிநீர் குழாய் உடைப்பு எடுத்ததால் அப்பகுதியில் 500 மீற்றர் தூரம் வடிகான்களில் நீர்தேங்கி இருப்பதாகவும், இதனால் டெங்கு நோய் ஏற்படும் அபாயம் உள்ளதாகவும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இந்த நீர் வெளியேற்றம் குறித்து, அப்பகுதி மக்கள் திருகோணமலை தேசிய நீர் வழங்கல் அதிகாரசபை அதிகாரிகளுக்கு மூன்றுமுறை முறைப்பாடு செய்திருந்தனர்.

அதற்கமைவாக 4469923, 4437674 மற்றும் 4394376 ஆகிய முறைப்பாட்டு இலக்கங்களை வழங்கியிருந்ததாகவும், இருந்தும் இதுவரைக்கும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையெனவும் அப்பகுதி மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

எனவே, அமைச்சு மட்டத்திலுள்ள அதிகாரிகள் இந்த விவகாரத்தை கவனத்தில் எடுத்து, உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கின்றனர்.



திருகோணமலை ரோட்டரி கழகத்தின் 46 ஆவது தலைவராக சின்னத்துரை ஜெகதீஸ்வரன் பதவியேற்றுள்ளார். டைக் வீதியிலுள்ள ரோட்டரி அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வில், முதன்மை விருந்தினராக லங்கா ஐ.ஓ.சி.நிறுவனத்தின் சிரேஷ்ட துணைத்தலைவர் டெபெஞ்சான் முக்ஹர்ஜி கலந்து கொண்டார். பதவி ஏற்பு நிகழ்வில் ரோட்டரி உதவி ஆளுநர் ஜெயபாலசந்திரன் வத்தளை, யாழ்ப்பாணம், அம்பாறை, கல்முனை ரோட்டரி கழக அங்கத்தவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

(படம்: திருகோணமலை தினகரன் நிருபர்)

# காத்தான்குடி வரலாற்றில் முதன்முறையாக 100 பேருக்கு ஒரே மேடையில் கௌரவம்

வாரவலம் ஊடக வலையமைப்பு இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி காத்தான்குடி பிரதேசத்தில் பல்வேறு துறைகளில் அர்ப்பணிப்புடன் பணியாற்றிக் கொண்டிருக்கும் 100 துறைசார் பணியாளர்களுக்கு ஒரே மேடையில் விருது வழங்கி கௌரவிக்கிறது. தினகரன், தினகரன் வார மஞ்சரி ஊடக அனுசரணையில் வாரவலம் ஊடக வலையமைப்பின் தலைவரும் வாரவலம் பத்திரிகையின் பிரதம ஆசிரியருமான கவி மாமணி ரீ. எல். ஜவ்பர்கான் தலைமையில் எதிர்வரும் 12ஆம் திகதி காத்தான்குடி ஹிஸ்புல்லா மண்டபத்தில் குறித்த நிகழ்வு நடைபெற ஏற்பாடாக இருக்கிறது. அன்றைய நிகழ்வில் கௌரவம் பெறுவோர்கள் பற்றிய விபரங்கள் அடங்கிய 'வேர்கள்' எனும் சிறப்பு மலரும் வாரவலம் பத்திரிகையின் இரண்டாவது ஆண்டு சிறப்பு வெளியிடும் வெளியிடப்படவுள்ளதாக வாரவலம் ஊடக வலையமைப்பு தெரிவித்துள்ளது. குறித்த நிகழ்வில் முதன்மை அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் பிரதம அதிதியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி றவூப் ஹக்கீம் கௌரவ அதிதிகளாக முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் கலாநிதி எம் எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலிசாகிர் மௌலானா, முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எம்.எஸ் எஸ் அமீர்அலி உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர். மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன், கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ். கனகசிங்கம் உட்பட பலர் சிறப்பு அதிதிகளாகவும் இந்நிகழ்வில் கலந்து கொள்கின்றனர். வாரவலம் செய்தி பத்திரிகையின் இரண்டாவது ஆண்டு சிறப்பு மலரின் முதன்மை பிரதியை பிரபல தொழிலதிபரும் முபாறக்ஸ் டெக்ஸ் குறூப் பிரைவேட் லிமிடெட் தலைவருமான கலாநிதி எம் எஸ் எம் முபாரக் பெற்றுக் கொள்வதுடன் சிறப்பு பிரதியை தொழிலதிபரும் சன்சைன் குறூப் பிரைவேட் லிமிடெட் நிறுவன தலைவருமான எஸ். நந்தகுமாரன் பெற்றுக்கொள்கிறார். ஆன்மீக அதிதிகளாக சங்கைக்குரிய பொக வந்தலாக ராகுல தேரர், மட்டக்களப்பு ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீல மதானந்தாஜி மகராஜ், மட்டக்களப்பு மாவட்ட ஜம்இய்யதுல் உலமா தலைவர், சங்கைக்குரிய மௌலானா மௌலவி எஸ்.எம்.அலியார் பலாஹி, மட்டக்களப்பு அம்பாறை மறை மாவட்ட ஆயர் கலாநிதி பொன்னையா ஜோசப் ஆகியோர் மட்டம் கலந்து கொள்கின்றனர் ஊடக அதிதிகளாக ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம். அமீன், தினகரன், தினகரன் வாரமஞ்சரின் பிரதம ஆசிரியர் தே.செந்தில் வேலவர், கெப்பிட்டல் டிவி செய்தி பிரிவு பொறுப்பாளர் எம்.நௌஷாத் முஹைதீன், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன நேத்ரா தமிழ் செய்தி பணிப்பாளர் சி.பி எம். சியாம், வசந்தம் தொலைக்காட்சியின் செய்தி முகாமையாளர் எம் சித்திக் ஹனிபா, மட்டக்களப்பு மாவட்ட தகவல் அதிகாரி எம். ஜீவானந்தம், அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்கள் சம்மேளத்தின் தலைவர் மீரா இஸ்ஸதீன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.





'வாரவலம் செய்திப் பத்திரிகையும் அச்சு ஊடகத்தின் அவசியமும்' என்ற தொனிப் பொருளில் சிரேஷ்ட ஊடகவியலாளர் எம் நௌசாத் முஹிதீன் சிறப்புரையாற்றும் இந்நிகழ்வில் நூறு பல்துறை சார்ந்த சமூக பணியாளர்கள் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளதுடன் குறித்த நிகழ்வை பிரபல ஒலி, ஒளிபரப்பாளர் அஸ்செய்யத் இர்ஃபான் மௌலானா தொகுத்து வழங்குவது குறிப்பிடத்தக்கது.

# நிந்தவூரில் ஆயுர்வேத மருத்துவ நடமாடும் சேவை

(மருதமுனை தினகரன் விஷேட நிருபர்)

நிந்தவூர் ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலையின் தொற்றாநோய் பிரிவின் ஏற்பாட்டில் நிந்தவூர் பிரதேச செயலகத்தில் மருத்துவ நடமாடும் சேவையொன்று பிரதேச செயலாளர் ஏ.எம்.அப்துல் லத்தீப் தலைமையில் நேற்று நடைபெற்றது.

நிந்தவூர் ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் ஐ.எல். தாரிக்கின் பூரண பங்களிப்புடன் நடைபெற்ற நடமாடும் சேவையில் உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில்

# குறைந்த வருமானம் கொண்ட 3746 பேருக்கு ஜனாதிபதி புலமைப்பரிசில்

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)



மட்டக்களப்பு மாவட்டத்தில் குறைந்த வருமானம் கொண்ட சுமார் 3746 பேருக்கு ஜனாதிபதி புலமைப்பரிசில் வழங்கிவைக்கப்படவுள்ளது.

இதனடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 5 வலயக் கல்வி அலுவலகங்களுக்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 1 தொடக்கம் 11 வரை கல்வி பயிலும் சுமார் 3446 வசதி குறைந்த மாணவர்களுக்கு, க.பொ.த உயர்தரத்தில் கல்வி பயிலும் சுமார் 300 மாணவர்களுக்கும் ஜனாதிபதி புலமைப்பரிசில் எதிர்வரும் 16ஆம் திகதி வழங்கிவைக்கப்படவுள்ளது. அதற்கமைவாக மட்டக்களப்பு இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்வு தொடர்பான முன்னாயத்த விடயங்களை ஆராயும் விசேட கூட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ஜெஸ்டினா முரளிதரன் தலைமையில் நேற்று மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர், மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. சுதர்சினி ஸ்ரீகாந், பிரதம கணக்காளர் எஸ்.எம். பசீர், உதவி மாவட்ட செயலாளர் ஜீ. பிரணவன் உள்ளிட்ட மாவட்ட செயலக உயர் அதிகாரிகள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், மாவட்ட செயலக மற்றும் கல்வித் திணைக்கள அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி நிதியத்தினால் வழங்கப்படும் இப்புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் உயர்தரம் கற்கும் மாணவர்களுக்கு மாதாந்தம் தலா 6 ஆயிரம் ரூபா வீதம் 24 மாதங்களுக்கும், 1 தொடக்கம் 11 வரை கல்வி கற்கும் மாணவர்களுக்கு மாதாந்தம் 3000 ரூபா வீதம் 12 மாதங்களுக்குமாக வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மருதமுனை மக்கள் மண்டபத்தை விரைவில் பாவனைக்காக கையளிக்க நடவடிக்கை

(கல்முனை விசேட நிருபர்)



மருதமுனை மக்கள் மண்டபத்தை விரைவில் மக்கள் பாவனைக்காக கையளிப்பதற்கு கல்முனை மாநகர ஆணையாளர் என். எம். நௌபீஸ் நடவடிக்கை எடுத்துள்ளார்.

அண்மையில் கல்முனை மாநகர ஆணையாளராக பொறுப்பேற்று ஒரு சில தினங்களிலேயே இந்த மண்டபத்தினதும் அதன் சுற்றுச்சூழலினதும் அவல நிலையை கவனத்திற் கொண்ட அவர், அதனை உடனடியாக சீர்செய்து, மக்கள் பயன்பாட்டுக்கு விடுவதற்கு தீர்மானித்திருந்தார்.

அதற்கமைவாக குப்பைக்கூளங்களாலும் காடு வளர்ந்தும் காணப்படுகின்ற மருதமுனை மக்கள் மண்டப வளாகம் கடந்த சில தினங்களாக கல்முனை மாநகர சபையினால் துரிதமாக துப்புரவு செய்யப்பட்டு வருகின்றது. இதனை பராமரிப்பதற்கென ஊழியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் விரைவாக இதனை மக்கள் பாவனைக்கு விடுவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# பாதையை விட்டு விலகி பஸ் விபத்து

(தம்பலகாமம் குறூப், கிண்ணியா மத்திய நிருபர்கள்)

தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்டி திருகோணமலை பிரதான வீதியின் 96 ஆம் கட்டை முள்ளிப்பொத்தானையில் கொழும்பிலிருந்து நேற்றுமுன்தினம் திருகோணமலை நோக்கி வந்த அதிசொகுசு தனியார் பயணிகள் போக்குவரத்து பஸ் பாதையை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியது. இச்சம்பவம் நேற்று (10) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

தனியாருக்கு சொந்தமான அதிசொகுசு பஸ் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளதாக தெரியவருகின்றது.

சாரதி, நடத்துனர் உட்பட பயணிகள் சிலரும் காயமடைந்துள்ளதாக தெரியவருகிறது. சம்பவ இடத்துக்கு தம்பலகாமம் போக்குவரத்து பொலிஸார் விரைந்துள்ளனர்.

# அட்டாளைச்சேனை சதொச கிளையை மீளத்திறக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை

அட்டாளைச்சேனையில் மூடப்பட்டுள்ள லங்கா சதொச கிளையை மீளத் திறக்குமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது அரசாங்கத்தினால் பொது மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை தங்கு தடையின்றி விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இக்கிளை மூடப்பட்டுள்ளதால் அட்டாளைச்சேனை, ஒலுவில், பாலமுனை, திராய்க்கேணி, தீகவாபி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்வதில் பல அசௌகரியகங்களை எதிர்நோக்கியுள்ளனர். அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு விலைக்கு அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு அட்டாளைச்சேனை பிரதேசத்தில் கூட்டுறவு விற்பனை நிலையங்களும் மூடப்பட்டுள்ளன.

இதனால் பொது மக்கள் தங்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு பல மைல்களுக்கு அப்பால் உள்ள சதொச கிளைகளுக்கு செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, தேசிய கல்வியற் கல்லூரி, கிழக்கிலங்கை அரபுக் கல்லூரி உட்பட பல அரச உயர் நிறுவனங்களை கொண்டுள்ள அட்டாளைச்சேனையில் இயங்கிய லங்கா சதொச கிளை திடீரென மூடப்பட்டுள்ளதால் பொதுமக்கள் பல சிரமங்களை எதிர்கொள்வதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இக்கிளை மூடப்பட்டுள்ளதால் அரசாங்கத்தின் உத்தரவாத விலைக்கு தரமான பொருட்களை பெற்றுக் கொள்வதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே, இக்கிளையை மீளத் திறக்குமாறு பொதுமக்கள் சம்மந்தப்பட்ட தரப்பினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வடக்கின் உதயம்

# மக்களின் தேவைகளை பூர்த்திசெய்யவே அரச உத்தியோகஸ்தர்கள் கடமையாற்றுகின்றனர்

## தொண்டைமானாறு சித்தமத்திய மருந்தக திறப்பு விழாவில் ஆளுநர் தெரிவிப்பு




யாழ்ப்பாணம் பருத்தித்துறை தொண்டைமானாறு பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட சித்த மத்திய மருந்தகம் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்களால் நேற்று முன்தினம் (09/07/2024) திறந்து வைக்கப்பட்டது. 60 மில்லியன் ரூபா செலவில் இந்த புதிய கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

கட்டடம் அமைந்துள்ள 12 பரப்புக் காணி அந்தப் பகுதியை சேர்ந்த குடும்பத்தினரால் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின் போது உரையாற்றிய கௌரவ ஆளுநர் அவர்கள், “மக்களின் நீண்டகால தேவையாக காணப்பட்ட ஆயுர்வேத சித்த மருந்தகம் இன்று திறக்கப்பட்டுள்ளது. இந்த கட்டடத்தை நிர்மாணிக்க மக்களாக முன்வந்து தேவையான அடிப்படை வசதிகளை மேற்கொண்டுள்ளமை வடக்கு மாகாணத்திற்கே சிறந்த முன்னுதாரணமான செயற்பாடாகும்.

இந்த மண்ணின் பெருமைக்குரிய குடும்பத்தினரின் உதவியோடு இந்த வைத்தியசாலை திறந்து வைக்கப்படுகின்றது.

மக்கள் அரச உத்தியோகஸ்தர்களுடன் இணைந்து செயற்பட வேண்டும்.

மக்களுக்காகவே அரச சேவை முன்னெடுக்கப்படுகின்றது. அதற்கமைய, மக்களிடமிருந்து விலகி நிற்க ஒருபோதும் நாங்கள் நினைத்ததில்லை. வடக்கு மாகாணத்தில் 138 வைத்திய நிபுணர்களுக்கான வெற்றிடம் நிலவுகின்றது.

இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு சுகாதார அமைச்சிடம் ஆளணி இல்லை.

தாதியர் பயிற்சிகளுக்கு எமது பகுதிகளில் இருந்து ஒருவரும் செல்வதில்லை. இந்நிலையில் வைத்தியசாலைகளில் வெளி மாகாணங்களைச் சேர்ந்தவர்களே அதிகளவில் பணியாற்றுகின்றனர். இவ்வாறான பல சவால்களுக்கு மத்தியிலேயே எமது சுகாதாரத்துறை இயங்குகின்றது. மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கே அரச உத்தியோகஸ்தர்கள் சேவையாற்றுகின்றனர்.

ஏதேனும் சேவைகள் உரிய முறையில் கிடைக்காவிடின் எங்களை சந்தித்து அவற்றிற்கான உரிய தீர்வுகளை பெற்றுக்கொள்ளுங்கள் என தெரிவித்தார்.

# சாவகச்சேரி வைத்தியசாலைக்கு தற்காலிக மின் பிறப்பாக்கி கையளிப்பு

## அங்கஜன் எம்.பியின் முயற்சி வெற்றி

(யாழ். விசேட நிருபர்)



சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு தற்காலிக மின்பிறப்பாக்கியை வழங்கி வைத்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் விபத்து மற்றும் சத்திர சிகிச்சைகள் பிரிவு உள்ளிட்ட பிரிவுகளுக்கான மின்சார மாற்றீடுகள் (Power Backup) இல்லாத நிலை தொடர்பில் கடந்த சில நாட்களாக பேசப்பட்டு வந்தது.

அதனடிப்படையில், மேலதிக மின்பிறப்பாக்கியின் அவசியத்தை கருத்தில்கொண்டு வைத்தியசாலைக்கு தற்காலிக அடிப்படையில் இன்றைய தினம் செவ்வாய்க்கிழமை 150kVA வலுவுடைய மின்பிறப்பாக்கியொன்று வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது.

இந்த மின்பிறப்பாக்கியை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் தற்போதைய பதில் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் கோபாலமூர்த்தி ரஜீவ் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதன்போது, நிரந்தர மின்பிறப்பாக்கியை பெற்று வைத்தியசாலையில் பொருத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருவதாகவும், அதற்கான அறையொன்றை (Generator Room) அமைக்கும் பணிகள் தற்போது முன்னெடுக்கப்படுவதாகவும் வைத்தியர் கோபாலமூர்த்தி ரஜீவ் தெரியப்படுத்தினார் என நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

# சிறப்பாக இடம் பெற்ற நானாட்டான் தூய ஆரோக்கிய அன்னை ஆலய திருவிழா



(மன்னார் குறூப் நிருபர்)

மன்னார் நானாட்டான் தூய. ஆரோக்கிய அன்னை ஆலய வருடாந்த திருவிழா திருப்பலி நேற்று புதன்கிழமை (10) காலை 7 மணிக்கு அருட்தந்தை றெஜினோல்ட் அடிகளார் தலைமையில் திருவிழா திருப்பலி கூட்டு திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது.

திருநாள் திருப்பலியில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் உள்ளடங்கலாக ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு அன்னையின் ஆசி பெற்றனர்.

நானாட்டான் பங்குத்தந்தை அருட்தந்தை பெனோ அடிகளாரின் ஒழுங்கு படுத்தலில் ஏழு நாள் ஆயத்த வழிபாடுகளுடன் நேற்றைய தினம் திருநாள் திருப்பலி வெகு விமர்சையாக இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# "பேரொளி" கவிதை நூல் தொகுப்பு வெளியீடு



(சாவகச்சேரி விசேட நிருபர்

வாழ்விற்கான பேரொளி வாசிப்பு எனும் தொனிப்பொருளில் நெடுந்தீவு கிழக்கு சனசனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் கடந்த 04/07 வியாழக்கிழமை "பேரொளி"கவிதைத் நூல் தொகுப்பு வெளியீட்டு நிகழ்வு நெடுந்தீவு மாவிலித்துறை வித்தியாலயத்தில் முன்னெடுக்கப்பட்டது.

நெடுந்தீவுப் பிரதேச பாடசாலை மாணவர்களது ஆக்கங்களின் தொகுப்பாக பேரொளி கவிதை நூல் அமையப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டுக்கு வயதில்லை பதக்கங்களை வென்ற தம்பதிகள்

37ஆவது வருடாந்த Master (Open) Athletes Champion Ship போட்டியில் கடந்த மே மாதம் 15ஆம், 16ஆம் திகதிகளில் மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இதன்போது 74 வயதுடைய நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி பழைய மாணவரும், அகில இலங்கை இந்து இளைஞர் முதியோர் நலன்புரி மன்றத் தலைவரும், பல்துறை அறிவுக் கலசம் 'ஆ', 'ஆ' புத்தக நூலாசிரியரும், யோகா மாஸ்டருமாகிய திரு. தம்பிராசா வேலாயுதபிள்ளை 300 மீற்றர் தடைக்களப் போட்டியிலும், 3000 மீற்றர் நடைப்போட்டியிலும் பங்குபற்றி 03ஆம் இடத்தினைப் பெற்று அதற்குரிய பதக்கங்களை வென்றுள்ளார்.

இவர் கடந்த மாதம் 25ஆம் மற்றும் 26ஆம் திகதிகளில் சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்ற வருடாந்த சம்பியன்சிப் போட்டியிலும் பங்குபற்றி 3000 மீற்றர் ஓட்டப் போட்டியில் 03ஆம் இடத்தைப் பெற்று அதற்குரிய பதக்கத்தையும், 80 மீற்றர் தடைகள ஓட்டப் போட்டியில் 01ஆம் இடத்தையும் பெற்று தங்கப் பதக்கத்தையும் சுவீகரித்துள்ளார்.




மேலும் இவரது 65 வயது நிரம்பிய மனைவி திருமதி ரேவதி வேலாயுதபிள்ளையும் 15ஆம், 16ஆம் திகதிகளில் நடைபெற்ற 3000 மீற்றர் நடைப்போட்டியில் 03ஆம் இடத்தினைப் பெற்று பதக்கத்தை பெற்றுள்ளார்.

# வளரிளம் பிள்ளைகள் பாலியல் கல்வியை முறையாக பெறுவதால் சிறந்த குடும்ப வாழ்வை கட்டியெழுப்ப முடியும்

(சாவகச்சேரி விசேட நிருபர்)

பாலியல் கல்வியை முறையாக பெறுவதால் சுபீட்சமான குடும்ப வாழ்வைக் கட்டியெழுப்ப முடியும் என மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் ஜென்சன் றொனால்ட் தெரிவித்துள்ளார்.

பூநகரி மத்திய கல்லூரியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற வளரிளம் பருவப் பிள்ளைகளுக்கான சுகாதார மேம்பாட்டு கருத்தமர்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்;

பாலியல் சுகாதாரம் பற்றிய தெளிவான அறிவு வளரிளம் பருவ மாணவர்களுக்கு ஊட்டப்பட வேண்டியது அவசியம். அவர்கள் பிறழ்வான பாலியல் நடத்தைகளுக்கும், பாலியலூடாகப் பரவும் தொற்று நோய்களுக்கு ஆளாகாமல் இருக்கவும், இளவயது கர்ப்பம் மற்றும் கலாசாரச் சீரழிவுக்கு உட்படாமல் இருக்கவும் இது மிகவும் அவசியமாகின்றது.

பிள்ளைகளின் மனதில் ஏற்படும் பாலியல் ரீதியான சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ள பெற்றோரும் ஆசிரியர்களும் பாலியல் கல்வியைப் பெற்றிருப்பதோடு பிள்ளைகள் அவர்களை நம்பிக்கையுடன் அணுகி சந்தேகங்களை தீத்துக்கொள்ளக் கூடிய நட்புறவான மற்றும் நம்பிக்கையான உறவுநிலையை வளர்க்க வேண்டும்.

வளரிளம் பருவ பிள்ளைகள் ஓமோன்களால் ஏற்படும் எதிர்ப்பால் மீதான கவர்ச்சிக்கும் உண்மையான காதலுக்குமான வித்தியாசத்தைப் புரிந்துகொள்ள வேண்டும்.

திருமணத்திற்கு முன்னரான பாலியல் உறவுகளைத் தவிர்த்து திருமணத்தின் பின் நம்பிக்கையுடைய நல்ல துணையாளர்களாக பாலுறவின் புனிதத்தையும் கௌரவத்தையும் பேணும் திறனுள்ளவர்களாக மாற அறிவூட்ட வேண்டும்.



கணவன் மனைவிக்கிடையிலான புரிந்துணர்வையும், பாலியல் திருப்தியினூடான மனநிறைவையும் பெற வளரிளம் பருவத்தில் பாலியல் துர்நடத்தைகளில் ஈடுபடாதிருக்க வேண்டியது அவசியம்.

அத்தோடு பாலியல் நோய்கள் ஏற்படாது தவிர்க்கும் வழிமுறைமையையும் ஏற்பட்டால் அதற்கான பொருத்தமான சிகிச்சைகளைப் பெறும் வழிகளையும் அனைவரும் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

உயிர்களின் நிலைத்திருப்புக்குத் தேவையான இனப்பெருக்கத்தை கலாசாரத்தின் மேன்மையைப் பேணும் மனித குலமாகிய நாம் பாலியல் உறவை பொறுப்புணர்வு மிக்கதாகவும் புனிதமானதாகவும் பேண பாலியல் கல்வியை தெளிவாகப் பெற்றுக்கொள்ள வேண்டும்.என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.




மறைந்த தமிழர் விடுதலை கூட்டணியின் முன்னாள் செயலாளர் நாயகம் இரா. சம்பந்தன் அவர்களுக்கு அஞ்சலிக்கூட்டம் 06.07.2024 அன்று கிளிநொச்சியில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தலைவர் அருண்மொழிவர்மன் தம்பிமுத்து, செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி, சிரேஷ்ட உபதலைவர் அசோக்குமார் ஐயம்பிள்ளை, உபதலைவர் றொபட் நிக்சன், சட்டச்செயலாளர் பவதாரணி ராஜசிங்கம் உட்பட கூட்டணியின் மத்திய குழு உறுப்பினர்கள், சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.



தாய்மண்ணில் வெற்றிமணி நிலாமுற்றம் வெற்றிமணி பத்திரிகையின் 30வது ஆண்டு நிறைவு விழா சிரேஷ்ட ஊடகவியலாளர், பாரதி இராசநாயகம் தலைமையில் பருத்தித்துறை ராஜாராணி சேவை இல்ல மண்படத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வெற்றிமணியின் 28 வது வெளியீடான வைகல் நூல் பேராசிரியர் அ. சண்முகதாஸ், முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோருக்கு வெற்றிமணி ஆசிரியர் கலாநிதி மு.க.சு சிவகுமாரனினால் வழங்கி அறிமுகம் செய்து வைக்கப்படுவதையும், வெற்றிமணி மாசிகையின் ஜூலை மாத இதழ் வெளியிடப்படுவதையும், ஊடகவியலாளர் பாரதி உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

## தேசிய குத்துச்சண்டை போட்டியில்

# முல்லைத்தீவு வீராங்கனைகள் வெள்ளிப்பதக்கம் பெற்று சாதனை




மாங்குளம் குருப் நிருபர்

கொழும்பில் இடம்பெற்ற தேசிய குத்துச்சண்டை போட்டியில் முல்லைத்தீவு மாவட்ட வீராங்கனைகளான கே.இந்துகாதேவி (கரிப்பட்ட முறிப்பு), எஸ்.யஷ்மிதா (பூதன்வயல்) ஆகியோர் வெள்ளிப்பதக்கம் (இரண்டாம் இடம்) பெற்று சாதனை படைத்துள்ளனர்

விளையாட்டுத்துறை அமைச்சால் நடாத்தப்படும் 2024ஆம் ஆண்டுக்கான தேசிய மட்ட ஆண்கள்/ பெண்களுக்கான குத்துச்சண்டை போட்டிகள் கொழும்பு றொறிங்ரன் உள்ளக அரங்கில் 3.7.2024 தொடக்கம் 7.7.2024 வரை நடைபெற்றது

இப் போட்டியில் வடமாகாண குத்துச்சண்டை வீராங்கனைகளாக கலந்து கொண்ட முல்லைத்தீவு மாவட்ட வீராங்கனைகளான கரிப்பட்ட முறிப்பைச் சேர்ந்த கே.இந்துகாதேவி (48 50kg), பூதன்வயலைச் சேர்ந்த எஸ். யஷ்மிதா (5760kg) ஆகிய இருவரும் இறுதிப் போட்டிக்கு தெரிவாகி இறுதிப் போட்டியில் 2ஆம் இடத்தைப்பெற்று, வெள்ளிப் பதக்கத்தை தமதாக்கி மாகாணத்திற்கும் மாவட்டத்திற்கும் தமது கிராமத்திற்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட குத்துச்சண்டை வீராங்கனைகளுக்கு பலரும் பாராட்டுகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து வருகின்றனர்.

# போதை ஒழிப்பு நடவடிக்கை தொடர்பில் ஊடகவியலாளர்களுடன்கலந்துரையாடல்





(யாழ்.விசேட நிருபர்)

போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கை தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு விளக்கம் அளிக்கும் பயிற்சி பட்டறையொன்று யாழ்ப்பாணத்தில் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை நடாத்தப்பட்டது.

மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் மையத்தின் ஏற்பாட்டில் யாழ் மாவட்ட ஊடகவியலாளர்களுக்கான இந்த பயிற்சி பட்டறை யாழ். நல்லூர் பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது. இதன் பொழுது ஊடகங்களுக்குரிய போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பான கடமைகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

குறித்த பயிற்சி பட்டறையில் கொழும்பு போதைப்பொருள் தகவல் நிலைய சிரேஸ்ட நிகழ்ச்சி திட்ட அதிகாரி எச். ரஹீம், யாழ். மாவட்ட நிகழ்ச்சித் திட்ட அதிகாரி ஏ. கோடீஸ் மற்றும் யாழ் மாவட்ட ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.

# புதுக்குடியிருப்பில் இயற்கை எய்திய வர்த்தகர்களுக்கான நினைவேந்தல் நிகழ்வு

ஓமந்தை விஷேட நிருபர்

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் உயிரிழந்த வர்த்தகர்களுக்காக நினைவேந்தல் நிகழ்வு ஒன்று நேற்று (10.07.2024) காலை நடைபெற்றது.

புதுக்குடியிருப்பு வர்த்தக சங்க தலைவர் த.நவநீதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வர்த்தகர்களின் குடும்பத்தினர்கள், வர்த்தகர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

இதேவேளை குறித்த நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொள்வதற்காக புதுக்குடியிருப்பு வர்த்தகர்கள் அனைவரும் தமது வர்த்தக நிலையங்களை மூடியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மலையக கல்வி எழுச்சிக்காக அரும்பெரும் பணியாற்றிய அமரர் பெரியார் பி.டி இராஜன்





மலையகம் 201 ஆம் நூற்றாண்டைத் தாண்டி கொண்டாடும் தருணத்தில் மலையக மக்களின் முன்னேற்றத்திற்காக உழைத்த உன்னதமான மலையக கல்வி எழுச்சிக்காக அரும் பெரும் பணியாற்றிய முக்கியஸ்தர்களுள் அமரர் பெரியார் பி.டி. இராஜனும் ஒருவராவார். அவர் கல்வி எழுச்சிக்காக மட்டுமல்ல கலை இலக்கிய மேம்பாட்டுக்காகவும் அவருடைய பெரும் பங்களிப்பு பிரதான வகிபாகமாக அமைந்துள்ளது. அவர் குறித்த அடையாளத்தையும் அறிமுகத்தையும் மலையக கலை கலாசார இரத்தின தீப சங்கத்தின் தலைவர் தேசமானிய எஸ். பரமேஸ்வரன் தினகரன் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி.

கண்டியில் பெரியார் அமரர் பி.டி இராஜன் எனும்போது கண்டியில் கல்வி எழுச்சியின் தொடக்க கால பணியாளர்களின் சிறப்புக்கள் அதிகம் கொண்ட வரும் தேசிய மட்டத்திலும் மலையக மக்கள் மத்தியிலும் அதிகம் பிரகாசித்த ஒருவராக அமரர் பி. டி. இராஜன் விளங்கினார். மலையக வறிய மாணவர்களின் நலன் கருதி கண்டியில் 1935 ஆம் ஆண்டு ஜனவரி 19 ஆம் திகதி இந்திய மாணவர் ஹாஸ்டல் என்ற பெயரில் ஒரு மாணவர் விடுதியினையும் கண்டி அசோகா வித்தியாலயத்தின் ஸ்தாபகத் தலைவராக இருந்து மிக நேர்த்தியான முறையில் தனது செயற்பாடுகளை தொடர்ந்த சிறப்பு பெரியார் பி. டி. இராஜனுக்கு உண்டு. இவருடைய கல்விப் பணியின் மூலம் புதிய மூலோபாய முயற்சியின் ஊடாக கண்டியில் தமிழ் கல்வி எழுச்சியை மேற்கொள்ள அவர் துணிச்சலுடன் செயற்பட்டார் என்ற பெருமை அவருக்கும் உண்டு.

**பெரியார் பி.டி இராஜன் பற்றி வாசகர்களுக்கு கூற முடியுமா?**

உண்மையிலே பெரியார் பி. இராஜன் பற்றி சிறு வயதில் இருந்து நன்கு அறிவேன். அவரைப் பற்றி நான் வாசித்த, கேள்வியுற்ற விடயங்களை உங்கள் முன் வைப்பதில் இரட்டிப்பு மகிச்சியடைகின்றேன். பி. டி. இராஜன் அவர்கள் அவருடைய இருபது வயதில் 1933 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 8 ஆம் திகதி இந்தியாவில் இருந்து கண்டிக்கு அழைத்து வரப்பட்டார். அக்காலம் பௌத்த மத விழிப்புணர்வு தோன்றிய கால கட்டம் என்று குறிப்பிடலாம். கண்டியில் தர்மராஜா கல்லூரியும், கொழும்பில் ஆனந்தா கல்லூரியும் தோன்றிய காலம் அது.

அதேவேளையில், அம்பிடியவில் செமனெரி என்று மக்களால் அழைக்கப்பட்ட ஆங்கிலக் கல்லூரி தோட்ட பிள்ளைகளினதும், ஏழை விவசாயிகளின் குழந்தைகளுக்கு இலவசக் கல்வியை வழங்கியது. வண. தந்தை பெரவட்ஸ், இயேசு திருச்சபையைச் சேர்ந்த ஜெய்கட் ஆகியோர் தன்னலங்கருதாது பணி இதற்காக புரிந்தார்கள். இவர்களின் கல்விப் பணி இராஜனை மிகவும் கவர்ந்தது. எந்தவித எதிர்பார்ப்புக்களுமின்றி சமூக நோக்குடன் செயற்பட்டமை இராஜனின் மனதில் மிகவும் கவர்ந்தன.

**கண்டியில் புதிய கல்வி மாற்றத்திற்கு பிரதான காரணியாக பலருடைய சிந்தனைத் தாக்கம் பெரியார் பி. டி இராஜனிடம் மேல் நிலை பெற்றிருந்தது. இதற்குப் பின்புலமாக விளங்கியவர்கள் பற்றிக் கூறுவீர்களா?**

இதே, கால கட்டத்தில்தான் சுவாமி சிவானந்தாவாகப் பிற்காலத்தில் மாற்றம் அடைந்த ஜே. டி. ராஜு. சென் அந்தனிஸ் கல்லூரியிலும் திரித்துவக் கல்லூரியில் சுந்தரமணியும், தர்மராஜா கல்லூரியில் கணபதிப்பிள்ளையும் குறிப்பிடத்தகுந்தவர்களாகத் திகழ்ந்தனர். இந்த மூவருடைய கல்வி ஆற்றலை பி. டி. இராஜன் நேரடியாக கண்டுகளித்தார். இதில் கண்டி மாநகர மக்களிடையே தன்னை ஒரு முக்கியமான பிரமுகராக அடையாளப்படுத்திக் கொண்டார். போல் தியாக ராஜன் என்ற தனது பெயரை அந்த நாளில் புகழ்பெற்ற ஜஸ்டிஸ் கட்சியின் அமைச்சராகவும் இருந்த சேர். பி. டி ராஜன் என்ற பெயரை ஒட்டி தம் பெயரை எல்லோர் நாவிலும் எளிதில் உச்சரிக்கும் வண்ணம் பி. டி .இராஜனாக மாற்றிக் கொண்டார்.

கண்டி மாநகரில் ஹொக்கி விளையாட்டு அறிமுகமாயிராத அந்தக் கால கட்டத்தில் ஹொக்கி விளையாட்டைப் போதிப்பதற்காக 1934 இல் ஹொக்கி கிளப் என்ற அமைப்பை உருவாக்கி ஹொக்கி விளையாட்டை சிறப்பாக விளையாடியும் பயிற்சி அளித்தும் இளைஞர்கள் மத்தியில் வழிகாட்டும் கலங்கரை விளக்காகத் திகழ்ந்தார். மலையக சமூகத்தில் வசதி படைத்த குழந்தைகளைப் போல வசதியற்ற பிள்ளைகளும் படித்து முன்னேற வேண்டும். அந்த வகையில் மலையகத்தின் தலைநகரான கண்டி மாநகரில் மலையக மாணவர்களின் நலன் கருதி விடுதி ஒன்றை நிர்மாணிக்க உறுதி பூண்டார்.

1935 ஆம் ஆண்டு ஜனவரி 19 ஆம் திகதி இந்திய மாணவர் என்ற பெயரில் ஒரு மாணவர் விடுதி திறக்கப்பட்டது.

ஆசிரியர் சுந்தரமணியின் தம்பி தான் பெரியார் பி.டி இராஜன் ஆவார். இக்கால கட்டத்தில் இராமானுஜம் அவர்கள் கண்டி மாநகரில் பிற கல்லூரிகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்காக மாணவர் விடுதியை ஆக்கினார். ஆங்கிலத்திலும் தமிழிலும் வல்லவரான இராமானுஜம் அவரது சகோதரர் டி. சாரநாதன் ஆகியோர் இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தையும் கவிஞர் தாகூர், கவிஞர் பாரதியார் போன்ற இலக்கிய மேதைகளின் கவிதா ஆற்றலையும் எடுத்துக் கூறுவார்கள்.

தோட்டத் தொழிலாளர்களின் முன்னேற்றத்தில் அக்கறையுள்ள இராமானுஜம் இலங்கை இந்தியன் காங்கிரஸின் முக்கியஸ்தர்களில் ஒருவர். பின்னர் மக்களின் வாக்குகளால் அளுத்நுவர பாராளுமன்றத்தின் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டவர். இவரது அண்ணனான டி. சாரநாதன். இவர், தமிழகத்தில் சுயமரியாதை இயக்கத்தின் தந்தை பெரியாரின் குடியரசுப் பத்திரிகையில் பணியாற்றியவர். தமிழிலும், ஆங்கிலத்திலும் பேசவும் வல்லவர். மலையக மக்களுக்காக முதன் முதலாக தொழிற் சங்கத்தை உருவாக்கிய தேசபக்தன் கோ. நடேசய்யரின் அழைப்புக்கு இணங்க இங்கு வந்தவர். ஐயரின் பத்திரிகைப் பணிக்கு துணையாக இருந்தவர். இராமானுஜனின் சகோதரருடன் இராஜனுக்கு தொடர்பு இருந்தது. இவர்கள் மூவரும் மலையக மக்களின் முன்னேற்றம் குறித்து கலந்துரையாடுவார்கள். ஆனால் இராஜன் தொழிற் சங்கத் துறையிலோ அரசியலில் ஆர்வம் காட்டாமல் கல்வித் துறையில்தான் தன் கவனத்தைச் செலுத்தினார். இராஜனின் சிந்தனையில் மலையக மக்களின் பற்றிய எண்ணங்கள் குவிந்தன.

மலையக மக்கள் கல்வி அறிவிலும் கல்வி வாய்ப்பிலும் மிகவும் தாழ்ந்த நிலையில் இருந்தார்கள். உரிமைகள் பறிக்கப்பட்டு அடிப்படை வசதிகள் மறுக்கப்பட்ட நிலையில் யாருமே கவனிப்பாரற்ற நிலையில் மிகவும் துயரமான வாழ்வினை மலையக மக்கள் கொண்டிருந்தனர். இத்தகைய நிலையில் பி . இராஜன் கண்டி வாழ் மலையக மக்களின் வாழ்க்கையில் மாற்றம் காண வேண்டும் என்று பல நாட்கள் சிந்தித்தார். இந்த முயற்சியின் ஓர் அங்கமாக கண்டியில் மிக காத்திரமான நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டார். இதற்கு அவருடைய பங்களிப்பு பிரதான வகிபாகமாக அமைந்திருந்தது.

**அவருடைய செயற்பாடுகள் குறித்து உங்களால் கூற முடியுமா?**

பெரியார் பி. டி. இராஜன், முதலில் தோட்ட உரிமையாளர் ஒருவரின் புதல்வரான ஆர். கோவிந்தசாமி, ஆடிட்டர் கே. ராமையா, அட்டன் வழக்கறிஞராக இருந்த அழகமுத்துவின் தந்தையாரான கருப்பையா கங்காணி ஆகியோர் ஆரம்ப பணிகளுக்குத் துணையாக நின்றனர். இந்த இந்திய மாணவர் விடுதியுடன் கண்டி மாநகரில் கண்டி அசோகா வித்தியாலயம் ஆகியவை முக்கியமானவையாகும்.

**கல்விசார் சிந்தனையாளர்களுடன் இணைந்து கண்டியில் கல்வி மாற்றத்தினை கொண்டு வருவதற்கான பங்களிப்பை இராஜன் ஒளிவு மறைவு எதுவுமின்றி முன்னெடுத்த போது அவர் எதிர்நோக்கிய சவால்கள் பற்றிக் கூறுவீர்களா?**

ஆரம்பத்தில் ஒன்பது மாணவர்கள் விடுதியில் சேர்ந்தனர். இதற்காக இராஜன் சோர்ந்து விடவில்லை. எந்த இலட்சியத்திற்காகவே அந்த மாணவர் விடுதியை ஆரம்பித்தாரோ அந்தப் பணியினைத் தொடர்ந்தார். ஆரம்பத்தில் பல பிரச்சினைகளை அவர் எதிர்கொள்ள வேண்டியதாயிற்று. இந்தப் பிரச்சினைகளுக்குரிய காரணம் ஆரம்ப கால மாணவர்கள் கல்வி அறிவற்ற ஒரு சமூகத்தில் இருந்து வந்திருந்தால், அவர்கள் சாதி சமய வேறுபாடுகளில் வளர்ந்தவர்களாதலால் அவர்களை ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளாக அரவணைத்து கூட்டுக் குடும்பமாக வழி நடத்திச் செல்வது ஆரம்பத்தில் சிரமமாக இருந்தது. அந்தப் பாரச் சிலுவையை தானே சுமந்தார்.

இதனைப் பற்றி பிற்காலத்தில் இராஜன் குறிப்பிடும் போது; எனது அயராத உழைப்பினால் இந்தப் பிரச்சினைகளை வேருடன் களைந்தேன். தன் நம்பிக்கையும் விடா முயற்சியையும் மூலதனமாகக் கொண்டு நான் இதனை தொடங்கியதால் ஆபிஸ் பையன் வேலை முதற் கொண்டு முகாமையாளர் பொறுப்பு வரை நானே ஏற்க வேண்டியிருந்தது. மாணவர்களை நல்வழிப்படுத்த சமூக, சமய தேசிய ஒற்றுமையை வளர்க்க மாணவர்களின் வாழ்க்கை வெற்றியை குறிக் கோளாகக் கொண்டு இந்த விடுதி செயற்பட சுதந்திர, சமத்துவ, சகோதரத்துவ கொள்கைகள் பரப்பப்பட்டன. நமது புராதான ஆசாரங்களான சமூக வாழ்க்கைக் கல்வி, அறிவு, நாகரீகம், தேசசேவை ஆகிய பல துறைகளிலும் புத்துயிரளிக்க இந்த விடுதியின் வாயிலாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

'கடமை முன், இன்பம் பின்' என்ற தாரக மந்திரப்படி காலை 5.30 மணி முதல் இரவு 9.30 மணி வரை கடமைகள் ஆற்றப்பட்டன. தகுந்த சூழ்நிலையில் அளிக்கப்பட்ட தேகப்பயிற்சி, மனப்பயிற்சி, ஒழுக்கப்பயிற்சி, சமயப் பயிற்சி போன்றவை மாணவர்களை நல்வழிப்படுத்தின' என்று தெரிவித்துள்ளார்.

குறிப்பாகச் சொல்லப் போனால் எந்தச் சவால்களை எதிர்நோக்கிய போதிலும் பெரியார் பி.டி.இராஜனின் நிர்வாகம் மாணவர் விடுதி வெறும் கற்களாக இருந்த மாணவர்களை பட்டை தீட்டி வைரக் கற்களாக மாற்றும் பணியைச் செய்தது மாணவர்களின் அறிவை விருத்தி செய்ய காலை, மாலை கூட்டுக் கடவுள் வழிபாடு, மாலையில் அனைவருக்கும் விளையாட்டுப் பயிற்சி, சான்றோர்களை அழைத்து நல்ல போதனைகள் மிக்க உரைகளை நிகழ்த்தச் செய்தல் போன்ற எல்லாப் பயிற்சிகளில் மாணவர்கள் ஈடுபடல் வேண்டும்.

இல்லையேல் கண்டிப்பும் தண்டனையும் வழங்கப்பட்டது. இதனால் மாணவர்கள் சாதி, சமய பேதமற்ற சமூகமாக உருவாகினார்கள்.

எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் இனம். எல்லோரும் ஓர் நிறை எல்லோரும் ஓர் விலை என்று பாரதியார் பாடிய பாடலை பெரியார் பி. டி. இராஜன் தனது மாணவர் விடுதி மூலம் நனவாக்கினார்.



மாணவர் மத்தியில் சாதி சமய பேதமற்ற சமதர்ம ஒருமைப்பாடு நிலவியது.

அவை மட்டுமல்ல ஆரம்ப முதல் இந்திய மாணவர்கள் விடுதி என்று இயங்கி வந்த நிறுவனம் தேசிய நன்மைக்கு ஏற்ப 1951 இல் அசோகா மாணவர் விடுதி என்று புதுப் பெயர் சூட்டப்பட்டது. இந்தப் பெயரைச் சூட்டியவர் வேறுயாருமல்ல. இந்திய அரசு இராஜதந்திரமிக்க சாணக்கிய மேதையாகத் திகழ்ந்த ராஜாஜி என்று அன்போடு அழைக்கப்பட்ட இந்தியாவின் முன்னாள் கவர்னர் ஜெனரல் அமரர் சி. இராஜகோபாலாச்சாரியர் ஆகும். அம்மேதை அசோக மாணவர் விடுதியிலும் அதன் முன்னேற்றத்திலும் பெரிதும் அக்கறை காட்டி பல அறிவுரைகளும் கடிதம் மூலம் உத்வேகம் காட்டியுள்ளார்.

1960 இல் அசோகா மாணவர் விடுதி வெள்ளி விழாக் கண்டது. இதன் போது வெள்ளி விழா மண்டபம் நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. இவ்விழாவுக்கு இலங்கையின் கல்வி மேதை வில்பட் பெரேரா தலைமை தாங்கி சிறப்பித்தார்.

**பெரியார் பி. டி . இராஜன் வேறு எத்தகைய கல்விப் பணியாற்றினார் என்று கூறுவீர்களா?**

அவர் 1937 இல் முதன் முதலில் கண்டி கிங்ஸ்வூட் கல்லூரியிலும் 1940 இல் புனித சில்வெஸ்டர் கல்லூரியிலும் பகுதி நேர ஆசிரியராக நியமனம் செய்யப்பட்டு கற்பித்து வந்தார். இவ்விரு பாடசாலையின் தொடர்பு பி. டி. இராஜனுக்கு இருந்த காரணத்தினால் தனது விடுதியில் தங்கியிருந்த மாணவர்களை கண்டியில் இருந்த சிறந்த கல்லூரிகளில் சேர்க்க வாய்ப்பு இருந்தது. இராஜனின் சிபாரிசில் வரும் மாணவர்களை அக்கல்லூரிகள் விரும்பி ஏற்றுக் கொண்டன.

கண்டி மாவட்டத்தில் இயங்கிய கல்லூரிகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் பி. டி. இராஜனை பெரிதும் மதித்தார்கள். இது பற்றி அவரே குறிப்பிடும் போது, ' நான் கல்லூரியில் கடமையாற்றும் போது கடமையுணர்ச்சியுள்ள ஆசிரியனாகவும், சேவை மனப்பான்மையிலும், வாழ்க்கை நெறிமுறையிலும் ஒரு இலட்சியவாதியாகவும் இருக்க முயற்சித்தேன். ஓரளவு வெற்றியும் கண்டேன். ஆகையினாலே ஆசிரியர் வட்டாரத்தில் எனக்குப் பெரும் மதிப்பு கிடைத்தது. எனவே. கண்டி வட்டாரத்திலுள்ள பல கல்வி நிலையங்களில் எனது அனுபவங்களையும் போதனைகளையும் கேட்க ஆசிரியர்களும் மாணவர்களும் பெரிதும் விரும்பினார்கள். இதனால் அறிவு வட்டாரத்தில் நல்ல பெயர் கிடைத்தது என்றார்.

**பி. டி. இராஜன் அவர்கள் அசோகா வித்தியாலத்தை ஆரம்பித்த வரலாறு பற்றிக் கூறுவீர்களா?**

நிச்சயமாக கண்டியில் டி. எஸ். சேனாநாயக வீதியில் எனது கடைக்கு முன்னாள் அமைந்துள்ள அசோகா வித்தியாலயம் பெரியார் பி. டி. இராஜனினால் 1955 இல் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அன்று முதல் இன்று வரையிலும் மலையகத்தின் தலைநகர் கண்டியில் அசோகா வித்தியாலயம் தனித்துவம் மிக்கதாக தலைநிமிர்ந்து நிற்கின்றது. இதற்கு முக்கிய காரணம் பெரியார் இராஜனின் தீட்சண்யமான பார்வையும், தீர்க்க தரிசனமான நோக்கமுமாகும்.

இந்த அசோக கல்வி நிறுவனம் மாணவர்களை கல்வி மாத்திரம் கற்கும் மாணவர்களாக அவர்களை உருவாக்குவதில்லை. நாட்டின் நற்பிரஜைகளாகவே அவர்களை நெறிப்படுத்துகின்றது.

அசோக வித்தியாலயத்தின் முன்னேற்றத்திலும் வளர்ச்சியிலும் அக்கறை கொண்டு செயற்பட்ட கல்லூரியின் முதல்வர் அமரர் செ. நடராசா இராஜன் கண்டெடுத்த நல் முத்து. அவரது பாசறையில் பயிற்சி பெற்றவர்.

அவர் அடியொற்றி கல்விப் பணிகளை ஆற்றியுள்ளார். அது மாத்திரமல்ல பெரியார் இராஜனின் மைந்தர்களும் தந்தையின் அடியொற்றி அவரது கல்விப் பணிகளை தொடர்ந்து ஆற்றுவது வரலாற்றுச் சிறப்புக்குரிய பணியாகும்.

அவற்றை இன்றும் நேரில் காணலாம். பெரியார் இராஜன் தன்னலம் கருதாத பணிகளை கௌரவிக்கும் முகமாக அக்காலத்தில் அரசினர் சமாதான நீதவான் வழங்கி கௌரவித்தனர். கண்டி மாநகர சபை அவருக்கு தேநீர் விருந்துபசாரம் செய்து தன்னை பெருமைப்படுத்திக் கொண்டது. மலையக தலை நகரில் கல்விப் பணியாற்றிய பெரியவரை கொழும்பு தலைநகருக்கு அழைத்து பாராட்டி கௌரவித்து தன்னைப் பெருமைப்படுத்திக் கொண்டது கொழும்பு கலைச் சங்கம்.

பெரியார் இராஜன் வாழ்வின் தலையாய பணியாக உயர்ந்து நிற்பது அவரது கல்விப் பணியாகும். அதற்குச் சான்றாக இன்னும் உயிர்த்துடிப்புடன் இயங்கிக் கொண்டிருப்பது அசோகா கல்வி நிறுவனம் ஆகும். அதனால் அவரை கண்டி மக்கள் அசோகா இராஜன் என்று அழைத்து மரியாதை செய்தார்கள்.

**நீங்கள் தற்போது கலை இலக்கிய வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றி வருவதைப் போன்று பெரியார் பி. டி. இராஜனும் கலை இலக்கியத் துறைக்கு ஆற்றிய பங்களிப்பு பற்றிக் கூறுவீர்களா?**

அவர் கல்வி வளர்ச்சிக்கு மாத்திரமல்ல கலை இலக்கிய வளர்ச்சிக்கும் தன்னால் இயன்ற பங்களிப்பைச் செய்துள்ளார். தமிழகத்தில் இலக்கியத் துறையில் ஒரு மாற்றத்தையும் மறுமலர்ச்சியையும் ஏற்படுத்திய மணிக்கொடி என்ற இலக்கிய இதழ் வளர்சிக்கு அடிநாதமாக புதுமைப் பித்தன், கு. பா. ரா. பிச்சைமூர்த்தி போன்றவர்கள் திகழ்ந்தார்கள்.

அதேபோன்று, மணிக்கொடி என இன்று இலங்கையில் இலக்கிய ஆய்வாளர்களினால் குறிப்பிடுகின்ற 'மலைமுரசு' என்ற சஞ்சிகையை பெரியார் இராஜனின் அன்புக்குரிய மாணவனான க. ப. சிவம் நடத்திய பொழுது அந்த சஞ்சிகையின் வளர்ச்சிக்கு அறிவுரைகளை வழங்கியும் ஆலோசனைகளையும், ஒத்துழைப்புக்களையும் வழங்கியவர் நமது பெரியார் இராஜனாவார். மலைமுரசு சஞ்சிகையே மலையக இலக்கிய வளர்ச்சிக்கு முன்னோடியாகத் திகழ்ந்துள்ளது. அதில் எழுதிய சாரல் நாடான், தெளிவத்தை ஜோசப் போன்றவர்களே இன்று இலக்கிய உலகில் சுடர் விட்டு பிரகாசித்து விட்டு மரணம் எய்தினாலும் அவர்கள் என்றும் இறக்காமல் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இது மாத்திரமல்ல மலையகக் கவிஞர்களின் கவிதைத் தொகுதித் தொகுப்பான 'குறிஞ்சுப் பூ'ஈழக்குமார் தொகுத்து வெளியிட்ட பொழுது இதற்கு இராஜின் பங்களிப்பு இருந்தது என்று இப்படி பல கூறலாம்.

**பி. டி இராஜன் ஹொக்கி விளையாட்டில் பிரகாசித்தவர் அது பற்றிக் கூறுவீர்களா?**

உண்மையிலே அவர் கண்டியில் ஹொக்கி விளையாட்டை அறிமுகப்படுத்தியவர் என்று கூடக் கூறலாம். 1938 கண்டியில் ஹொக்கிச் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. அதில் அவர் அங்கத்தவராக இணைந்து கொண்டார்.

இச்சங்கத்தின் ஆதரவுடன் கண்டியிலுள்ள விளையாட்டுக் கழகங்கள் விளையாட்டை ஆரம்பித்தன.

அப்பொழுது பி. டி. இராஜனின் உதவியை நாடினர். ஹொக்கி விளையாட்டின் சட்ட திட்டங்களை சரியாகத் தெரிந்து வைத்திருந்த பெரியார் பி. டி. இராஜனை மத்தியஸ்தராக அழைத்தனர். கட்டுப்பாடு, ஒழுக்கம், நேர்மைமிக்க மத்தியஸ்தராக விளங்கியதால் விளையாட்டு வீரர்கள், பொது மக்கள் மத்தியில் இவரது நாமம் பிரசித்தி பெற்றது. அவரது அசோக விடுதி மாணவர்களும் பல போட்டிகளில் கலந்து பெயரையும் புகழையும் தேடிக் கொடுத்தார்கள்.

இப்பெரியாரின் வெற்றிக்கு பின்புலமாக இருந்தவர் குறித்து அவருடைய வெற்றிக்கெல்லாம் உந்து சக்தியாகவும் உறுதுணையாகவும் விளங்கியவர் அவர் மனைவி திருமதி புஸ்பம் இராஜனாகும்.


அவர் இராஜனின் பணிகளில் இரண்டறக் கலந்து இருந்தார். வள்ளுவர் வாசுகி போல அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை ஒவ்வொருவருடைய வாழ்வுக்கும் வழிகாட்டியாகும்.

இராஜனின் வாழ்க்கையையும் அவரது பணிகளையும் நினைவு கூரும் போது நாம் அன்னை புஸ்பம் இராஜன் அவர்களையும் நினைக்க வேண்டியது தலையாய கடமையாகும்.

நேர்காணல் இக்பால் அலி



# மலைச்சாரல்



# தோட்ட தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு விவகாரம்

## அமைச்சர் மனுஷவுடன் இ.தொ.கா. பிரதிநிதிகள் சந்திப்பு



தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பாக அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு எதிராக சில பெருந்தோட்டக் கம்பனிகள் நீதிமன்றத்தை நாடியமையால் எழுந்துள்ள பிரச்சினைகள் தொடர்பாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவுடன் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (9) சந்திப்பு இடம்பெற்றது.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சில் அமைச்சர் மனுஷ நாணயக்காரவை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பிரதிநிதிகள் உட்பட பெருந்தோட்டத் தொழிலாளர் குழுவினர் சந்தித்து கலந்துரையாடியதுடன், மகஜரும் கையளித்தனர்.

இது தொடர்பாக கடந்த அமைச்சரவை கூட்டத்தில் கலந்துரையாடியதாக இதன்போது அமைச்சர் குறிப்பிட்டார்.

தற்போதுள்ள சட்டத்துக்கமைய சம்பளத்தை 1,350 ரூபாவாகவும் உற்பத்தித்திறன் அடிப்படையிலான ஊக்குவிப்பு கொடுப்பனவை 350 ரூபாவாகவும் அதிகரிப்பதற்கு சம்பள சபையின் மூலம் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளுக்கு பெருந்தோட்டக் கம்பனிகள் ஒத்துழைப்பு நல்கவில்லை.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் அதிகரித்த சம்பளத்தை வழங்கிய நிறுவனங்களின் குத்தகை ஒப்பந்தத்தை நீடித்தும் மற்றும் அதை மறுத்தவர்களின் ஒப்பந்தத்தை நீடிக்காதிருக்கவும் அமைச்சரவை கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டது.

மேலும் அதிகரிக்கப்பட்ட 1,000 ரூபா சம்பளத்தை வழங்கவும் நிலுவைத் தொகையான 350 ரூபாவை ஒரு வாரத்துக்குள்ளும் இதன் பின்னர் ஊக்குவிப்புத் தொகையை வழங்குவதற்கு சில தோட்ட நிறுவனங்கள் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும், அமைச்சர் குறிப்பிட்டார்.

சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டாலும், தோட்டத் தொழிலாளர்கள் தற்போது அனுபவித்து வரும் அனைத்து சலுகைகளும் இரத்து செய்யப்பட மாட்டாதெனவும், அமைச்சர் உறுதியளித்தார்.

இதேவேளை தோட்டத் தொழிலாளர்களின் வீடுகள் அமைந்துள்ள பகுதிகளை கிராமங்களாக வர்த்தமானியில் வெளியிடுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

எனவே எதிர்காலத்தில் இப்பகுதிகளில் வசிப்பவர்கள், பெருந்தோட்ட நிறுவனங்களின் பராமரிப்பு நிர்வாகத்திலிருந்து விலக்கப்பட்டு ஏனைய கிராமவாசிகள் அனுபவிக்கும் வசதிகளை அனுபவிக்கும் வாய்ப்பை பெறுவார்கள்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிக்காத நிறுவனங்கள் தொடர்பாக சில தொழிற்சங்கங்கள் கடைப்பிடிக்கும் இரட்டைக் கொள்கை தொடர்பாக கவலை வெளியிட்ட அமைச்சர், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தை வழங்க மறுக்கும் நிறுவனங்கள் வருடாந்தம் பல பில்லியன் ரூபா இலாபத்தை பெறுவதாக தெரிவித்தார்.

இந்நிலையில் இச்சாதகமான தலையீட்டுக்காக ஜனாதிபதி, அமைச்சர் மனுஷ நாணயக்கார, அரசாங்கத்துக்கு தோட்டத் தொழிலாளர்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

குறிப்பிட்ட பெருந்தோட்டக் கம்பனிகள் அதிகரிக்கப்பட்ட சம்பளத்தை வழங்க மறுப்பதால் எழுந்துள்ள பிரச்சினை குறித்து அமைச்சர் தொழிலாளர் பிரதிநிதிகளிடம் விளக்கினார்.

# எல்ல நீர்வீழ்ச்சியை பார்வையிட வந்த இருவர் விபத்தில் காயம்

ஊவா சுழற்சி நிருபர்



எல்ல நீர்வீழ்ச்சியை பார்வையிட வந்த போது விபத்துக்குள்ளான இருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

எல்ல வெல்லவாய வீதியில் 17ஆம் கட்டை பிரதேசத்தில் நேற்று புதன்கிழமை (10) இந்த விபத்து இடம்பெற்றதாகவும் இவர்கள் இருவரும் பயணித்த ஸ்கூட்டி ரக மோட்டார் சைக்கிளும் எதிர்த்திசையில் பயணித்த மணல் லொறியும் ஒன்றுடனொன்று மோதி விபத்துக்குள்ளானதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

அகங்கமை பிரதேசத்திலிருந்து மோட்டார் சைக்கிளில் வந்த 44 வயதுடைய பெண் ஒருவரும் இவரது மகனுமே விபத்துக்குள்ளாகினர்.

இவர்கள் இருவரும் வெல்லவாய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மொனராகலை சிறிகலா தள வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், வெல்லவாய போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணையை வெல்லவாய போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# துப்பாக்கி சூட்டில் வர்த்தகர் பலி

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

எம்பிலிப்பிட்டி, கொலன்ன வீதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 63 வயதுடைய பிரபல வர்த்தகர் ஒருவர் உயிரிழந்துள்ளார். கேல்ல எனும் இடத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (9) இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றதுடன், இதில் தேயிலை தொழிற்றுறை சம்பந்தமான பிரபல வர்த்தகரும் தேயிலை தோட்டங்களுக்கு சொந்தக்காரருமான ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இந்த துப்பாக்கி சூட்டை நடத்தியதாகவும் இவர்கள் இந்த வர்த்தகர் மீது துப்பாக்கிச் சூட்டை நடத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளதாகவும், பொலிஸார் கூறினர்.

இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பாக கொலன்ன பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

# தொழிலாளர்களை தொடர்ந்தும் ஏமாற்றினால் பல்லாயிரக்கணக்கானோர் வீதிக்கு இறங்குவர்

லோரன்ஸ் செல்வநாயகம்

19 தோட்டக் கம்பனிகள் கொள்ளை இலாபமீட்டும் நிலையில் பெருந்தோட்டத் தொழிலாளர்களை தொடர்ந்தும் துன்புறுத்தினால் பல்லாயிரக்கணக்கான மக்கள் வீதிக்கு இறங்குவார்களென, அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

தம்மிக்க பெரேராவின் 3 கம்பனிகள் 3,000 மில்லியன் ரூபாவை இலாபமாக பெற்றுள்ளதாக சபையில் குறிப்பிட்ட அமைச்சர், எனினும் அப்பாவி தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்புக்கு அவர் எதிர்ப்பு தெரிவித்து வருவதாகவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற தொலைத்தொடர்புகள் திருத்தச்சட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றிய போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். சபையில் தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர்,

"1,700 ரூபா சம்பள விவகாரம் எந்நிலையில் உள்ளதென்பதை அனைவரும் நன்கறிவர். சம்பள அதிகரிப்பு கிடைக்காது, அரசாங்கம் நாடகமாடுவதாக சிலர் மக்களை தூண்டிவிடும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றார்கள்.



நாம் எந்த விதத்திலும் அரசியல் நோக்கத்துடன் ஜனாதிபதியிடம் 1,700 ரூபா சம்பள கோரிக்கையை முன்வைக்கவில்லை. 2021ஆம் ஆண்டு 1,000 ரூபா சம்பளத்தை நாம் பெற்றுக்கொடுத்தோம். 2021ஆம் ஆண்டு முதல் 1,000 ரூபா சம்பளம் நடைமுறையில் உள்ளது. கூட்டு ஒப்பந்தம் நடைமுறையிலிருந்த காலப்பகுதியில் ஒவ்வொரு இரண்டாண்டுகளிலும் சம்பளம் அதிகரிக்கப்பட்டு இறுதியாக பெருந்தோட்ட மக்களுக்கு 1,000 ரூபா சம்பளம் வழங்கப்பட்டது.

2024ஆம் ஆண்டு சம்பளம் தொடர்பான பேச்சுவார்த்தையில் ஈடுபட பலமுறை பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு அழைப்பு விடுத்த போதும் முன்வரவில்லை. குறைந்த சம்பளத்தில் தோட்டத் தொழிலாளர்களை வைத்திருக்க வேண்டுமென்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தன. இவ்வாறான பின்னணியில் சம்பள நிர்ணய சபை மூலமாக 1,700 ரூபா சம்பள அதிகரிப்பை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்தோம். எனினும் அதனை கம்பனிகள் ஏற்றுக்கொள்ளவில்லை.

பெருந்தோட்ட மக்கள் விவகாரத்தில் தனித்து செயற்பட நாம் ஒருபோதும் விரும்பவில்லை. ஒன்றிணைந்து செயற்பட எதிர்பார்ப்பதுடன், அனைவரும் ஒன்றிணையவே மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறோம்.

பெருந்தோட்டத்துறை மக்களை தொடர்ந்தும் துன்புறுத்தினால் பல்லாயிரக்கணக்கானோர் வீதியில் இறங்குவார்கள்.

பெருந்தோட்ட மக்கள் தேயிலை தொழிற்றுறையை மாத்திரம் நம்பியிருக்கவில்லை என்பதை அனைவரும் விளங்கிக்கொள்ள வேண்டும்" எனத் தெரிவித்தார்.

# பின்னவலை சிசில்டன் தமிழ் வித்தியாலய கட்டட திறப்பு விழா

பொகவந்தலாவ நிருபர்



பலாங்கொடை கல்வி வலயத்துக்கு உட்பட்ட பின்னவலை சிசில்டன் தமிழ் வித்தியாலயத்தின் இரண்டு மாடிகளை கொண்ட புதிய கட்டட திறப்பு விழா நேற்று புதன்கிழமை நடைபெற்றது. இந்த இரண்டு மாடி கட்டடம் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டு, மாணவர்களின் பாவனைக்கு கையளிக்கப்பட்டது.

21.47 மில்லியன் ரூபா செலவில் இந்த இரண்டு மாடி கட்டடம் நிர்மாணிக்கப்பட்டது.

மேற்படி வித்தியாலய அதிபர் ஞானபிரகாசம் தேவகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார், சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திஸாநாயக்க ஆகியோர் கலந்துகொண்டு புதிய மாடி கட்டடத்தை திறந்து வைத்தனர்.

இந்நிகழ்வில் வலய கல்விப் பணிப்பாளர், கோட்ட கல்விப் பணிப்பாளர், இம்புல்பிட்டி பிரதேச செயலக செயலாளர், அயல் பாடசாலையின் அதிபர்கள், மாணவர்களாகிய பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இதன்போது மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.

# கே/ பாபுல் ஹஸன் மத்திய கல்லூரியின் 80 வது வருட பூர்த்தி

## மாபெரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டி

கே/ பாபுல் ஹஸன் மத்திய கல்லூரியின் 80ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு பழைய மாணவர் சங்கத்தால் மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பழைய மாணவர்களுக்கு இடையில் இக்கிரிக்கெட் சுற்றுப் போட்டி நடத்தப்படவுள்ளதுடன், இம்மாதம் 20ஆம், 21ஆம் திகதிகளில் பாடசாலை மைதானத்தில் மென்பந்து கிரிக்கெட் போட்டியை நடத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக்கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பங்குபெற விரும்புவோருக்கு வயது எல்லை மட்டுப்பாடு இல்லையென, கே/ பாபுல்ஹஸன் மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் தெரிவித்தது.

இது தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்துகொள்ள 0779273737 எனும் கையடக்க தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியுமெனவும், பழைய மாணவர் சங்கம் மேலும் தெரிவித்தது.

# வாள்வெட்டு சந்தேக நபர் கைது

மாத்தளை சுழற்சி நிருபர்

மாத்தளையில் வாள்வெட்டு நடத்திய சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இந்நிலையில் நேற்று வாள்வெட்டில் காயமடைந்தவர் மாத்தளை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த வாள்வெட்டை நடத்திவிட்டு சந்தேக நபர் தப்பிச் சென்றதாகவும் இவரை தோட்டமொன்றின் மறைவிடத்தில் தாம் கைது செய்துள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர். கொடுக்கல், வாங்கலில் ஏற்பட்ட தகராறே இந்த வாள்வெட்டுக்கு காரணமென தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரை மாத்தளை மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளார்.

# கண்டியில் மத்திய மாகாண விளையாட்டு போட்டி



அக்குறணை குறூப் நிருபர்


48ஆவது தேசிய விளையாட்டு விழாவுக்கு முன்னோடியாக மத்திய மாகாண விளையாட்டு போட்டியானது மத்திய மாகாண கண்டி, திகன மைதானத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (9) இடம்பெற்றது.

மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ.கமகே பிரதம அதிதியாக இப்போட்டியில்கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களை வழங்கி வைத்தார். இதன்போது உரையாற்றிய ஆளுநர் தெரிவித்ததாவது,

"விளையாட்டுகள் மூலம் பெறப்படும் அனுபவங்கள் தமது அன்றாட வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமைய வேண்டும். மத்திய மாகாணத்தில் உதயமான சுகத், டங்கள் வைட், ரோசா, தருசி, ரனதுங்க கருணாரத்ன போன்று இன்னும் பல வீர, வீராங்கனைகள் உதயமாக வேண்டும்" எனத் தெரிவித்தார்.

இதற்கான நிகழ்வில் மத்திய மாகாண சபையின் பிரதான செயலாளர் அஜித் பிரேமசிங்க, மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மேனக ஹேரத், மாகாண விளையாட்டு அமைச்சின் செயலாளர் திலகேஷ்வரி உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# ஐடியல் பாலர் பாடசாலையின் சிறுவர் சந்தை



மாவனல்லை ஐடியல் பாலர் பாடசாலையின் சிறுவர் சந்தை அதன் தலைமை ஆசிரியை சனா ஹனீபா தலைமையில் ராலியா வரவேற்பு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

'வளமான கிராமத்தை நோக்கி' எனும் தொனிப்பொருளின் கீழ் நடைபெற்ற இச்சிறுவர் சந்தைக்கான ஆரம்ப நிகழ்வில் பிரதம அதிதியாக மாவனல்லை ஸாஹிரா தேசிய கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபர் ஏ.ஏ.டி.ஹஸனா கலந்துகொண்டார். விசேட அதிதிகளாக மாவனல்லை வலய கல்வி அதிகாரி ஆர்.ஏ.எஸ். விஜித பண்டார, ஆரம்பப்பிரிவு வலயக் கல்வி அதிகாரி ஆர்.எம். சுசன்தா ரத்நாயக்க மெனிக்கே, பெற்றோர், நலன்விரும்பிகள் ஆகிய பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# வருடாந்த பரிசளிப்பு விழா

புசல்லாவை தினகரன் நிருபர்



மமா/க/வத்/விபுலானந்தா தமிழ் வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா அப்பாடசாலையின் பிரதான மண்டபத்தில் அண்மையில் மிக சிறப்பாக நடைபெற்றது.

மேற்படி பாடசாலை அதிபர் எஸ். ஆனந்தகுமார் தலைமையில் நடைபெற்ற இப்பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாக வத்தேகம வலய கல்விப் பணிப்பாளர் டபிள்யூ.எம். ரி.என். குணரட்ண கலந்துகொண்டு சிறப்பித்தார்.

இதன்போது மாணவர்களுக்கு வத்தேகம வலய கல்விப் பணிப்பாளர் பரிசில் வழங்கி உரையாற்றினார்.

# விலையுயர்ந்த போர்வையை கஃபாவுக்கு போர்த்தி உலக முஸ்லிம்களை மகிழ்விக்கும் சவுதி அரேபியா







இமாம் சவுத் அவர்களின் காலம் தொட்டு இன்று வரை ஆட்சி செய்கின்ற சவுதி அரேபிய மன்னர்கள் இரு புனித மஸ்ஜித்களான மக்கா, மதீனாவுக்கு மிக முக்கியத்துவம் அளித்து வருகின்றனர். இதன் பெருமை அல்லாஹ்வின் அருளால் ஆல் ஸஊத் பரம்பரையினரையே சாரும்.

சவுதி அரேபியா உருவாக்கத்திலிருந்து இன்று வரைக்கும் அதன் ஆட்சியாளர்கள் புனித ஸ்தலங்களை நாடி வருகின்ற அல்லாஹ்வின் விருந்தாளிகளுக்கு அளப்பரிய சேவைகளை செய்து வருகின்றனர். இதன் நிமித்தம் அவர்கள் எடுத்துக் கொள்கின்ற அக்கரை, அர்ப்பணிப்புகள், செலவுகள் பாரியளவிலான சேவைக்கு வித்திடுகிறது. அனைத்தையும் உலக முஸ்லிம்கள் பாராட்டுவதோடு அவர்களுக்காக துஆ (பிரார்த்தனை)வும் செய்கின்றனர்.

மக்காவிலுள்ள புனித கஃபதுல்லாஹ்வுக்கு வருடா வருடம் முஹர்ரம் முதலாம் நாள் புதிய போர்வையைப் போர்த்துவதும் சவுதி மேற்கொள்ளும் பாரிய சேவைகளில் ஒன்றாக விளங்குகிறது. அந்த வகையில் இவ்வருடம் முஹர்ரம் முதலாம் நாளான கடந்த ஞாயிற்றுக்கிழமை (07.07.2024) கஃபாவுக்கு புதிய போர்வை பாதுகாப்பு படையினரின் அணிவகுப்பு மரியாதையோடு வைபவ ரீதியாக போர்த்தப்பட்டது.

இப்போர்வையைத் தயாரிக்கவென தனியான நிர்வாகக் கட்டமைப்பையும் நெசவாலையையும் தன்னகத்தே கொண்டுள்ள சவுதி அரேபியா, இப்போர்வையை நெய்வதற்காக தனித்துவமான நூல் வகைகள், நிறமூட்டுதல் உள்ளிட்ட அனைத்தும் இத்தொழிற்சாலையிலேயே மேற்கொள்கிறது. அத்தோடு தங்கம், வெள்ளி மற்றும் பட்டு ஆகியவற்றை உள்ளடக்கி அதியுயர்ந்த பெறுமதி மிக்கதாக தயாரிக்கப்படும் இப்போர்வை சுமார் 120 கிலோ கிராம் எடை கொண்ட உயர் ரகத் தங்கம், 100 கிலோ கிராம் எடை கொண்ட வெள்ளி, 1000 கிலோ கிராம் கொண்ட உலகில் மிகச் சிறந்த பட்டு என்பவற்றை உள்ளடக்கியுள்ளன.





இப்போர்வையைத் தயாரித்தல் மற்றும் வடிவமைக்கும் பணிகளிலும் அது தொடர்பான நிர்வாகக் கட்டமைப்பிலும் சவுதியின் துறைசார் நிபுணர்கள் உள்ளிட்ட நூற்றுக்கணக்கான ஊழியர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கின்றனர். இப்பணிகளுக்கென வருடாவருடம் 30 மில்லியன் ரியால்களை செலவு செய்து வரும் சவுதி, கஃபதுல்லாஹ்வின் போர்வையைத் தயாரிப்பதற்காகவும் அதனை கஃபாவில் போர்த்துவதற்காகவும் அளப்பரிய சேவைகளை முன்னெடுத்து வருகின்றது.

பொதுவாக ஒவ்வொரு பெற்றோரும் தங்களது பிள்ளைகளுக்கு பெருநாள் தினங்களிலும் விஷேட தினங்களிலும் புத்தாடைகளை அணிவித்து ஆனந்தம் அடைவர். அதேபோன்று ஒவ்வொரு வருடமும் அல்லாஹ்வின் மாளிகையான புனித கஃபதுல்லாஹ்வுக்கு அதியுயர்ந்த போர்வையைப் போர்த்தி தாங்களும் சந்தோஷப்படுவதோடு உலக முஸ்லிம்களையும் சந்தோஷப்படுத்தி கொண்டிருக்கின்றனர் சவுதி அரேபிய ஆட்சியாளர்கள்.

புனித கஃபதுல்லாஹ்வுக்கு வருடா வருடம் புதிதாகப் போர்த்தப்படும் இப்போர்வை உலகிலே மிகப்பெரிய பெறுமதி மிக்க போர்வை. இதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. அல்லாஹ்வின் மாளிகை என்பதால் அதிவிலை உயர்ந்த பொருட்களைக் கொண்டு தனித்துவமான முறையில் இப்போர்வையைத் தயாரித்து வருடா வருடம் கஃபாவுக்கு போர்த்தும் பணியை அன்று தொட்டு இன்று வரை சவுதி மேற்கொண்டு வருகின்றது. இது அனைவராலும் பாராட்டத் தக்க பணியாக அமைந்திருக்கிறது.

இந்த இரு புனித ஸ்தலங்களுக்கும் மிக முக்கியத்துவம் அளித்து இப்புனித ஸ்தலங்களை சிறப்பான முறையில் சவுதி அரேபிய ஆட்சியாளர்கள் பராமரித்து வருகின்றனர். அந்த வகையில் கஃபதுல்லாஹ்வுக்கு புதிய போர்வையைப் போர்த்தும் பணி மன்னர் அப்துல் அஸீஸின் காலத்தில் இருந்து மிகச் சிறப்பாக முன்னெடுக்கப்படுகின்றது. இதற்கான அனைத்து பூர்வாங்க ஏற்பாடுகளும் மன்னரின் தலைமை மற்றும் வழிகாட்டல்களின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

இரு புனித மஸ்ஜித்களின் பாதுகாவலரான மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் ஸஊத்தும் இளவரசர் முஹம்மத் பின் ஸல்மான் ஆல் ஸஊத்தும் மிகச் சிறந்த முறையில் இந்த இரு புனித ஸ்தலங்களையும் பராமரித்து வருகின்றனர். அந்த வகையில் தற்போதைய மன்னர் சல்மானுக்கு 'இரு புனித பள்ளிவாசல்களின் பாதுகாவலர்' என்ற நாமம் சூட்டப்பட்டிருப்பது அவர்கள் ஆற்றிவருகின்ற சேவைகளின் நிமித்தமாகும்.

உலகின் முதலாவது மஸ்ஜிதாகவும் முஸ்லிம்கள் தொழுகைக்காக முன்னோக்கும் தலமாகவும் விளங்கும் கஃபாவுக்காக இவ்வாறு மகத்துவம் மிக்க சேவையாற்றிவரும் மன்னர் சல்மான், இளவரசர் முஹம்மத் பின் சல்மான் மற்றும் இஸ்லாமிய விவகார அமைச்சரும் சவுதி அரேபியா அரசும் என்றும் எமது நன்றிகளுக்கும் பாராட்டுதல்களுக்கும் உரியவர்களாவர்.



**மௌலவி எம்.எச். ஷைஹுத்தீன் மதனி**
**பணிப்பாளர், அல் ஹிக்மா நிறுவனம், கொழும்பு**

# பொருளாதார நெருக்கடிகளை முறியடிக்க டிஜிட்டல் தொழில்நுட்பம் அவசியம்

**அக்கரைப்பற்று விசேட நிருபர்**

பொருளாதார நெருக்கடிகளை முறியடிக்க டிஜிட்டல் தொழில்நுட்பம் அவசியம் என வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடமேல் மாகாணத்தின் 33 உள்ளூராட்சி மன்றங்களில் ஒப்பந்த, தற்காலிக, பதிலீட்டு அடிப்படையில் பணியாற்றிய சுமார் எண்ணூறுக்கும் மேற்பட்டோருக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (08) நாத்தாண்டிய நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் தெரிவித்தார்.



அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

21ஆம், நூற்றாண்டுக்கு ஏற்ப எமது உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள் மாற்றமடைய வேண்டும். ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களும் வரி அறவிடல், பாதைகள் பராமரித்தல் உள்ளிட்ட வழக்கமான செயற்பாடுகளுக்கு அப்பால் அந்தந்தப் பிரதேசங்களிலிருக்கும் வளங்களைப் பயன்படுத்தி உச்சபட்ச பலனைப் பெறவும், அதனைக்கொண்டு வருமானம் ஈட்டிக் கொள்வதற்குமான வழிகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

"ஸ்மார்ட் டெக்னோலொஜி" எனும் நவீன தொழில்நுட்பத்தின் ஊடாக செயற்பாடுகளை இலகுபடுத்திக் கொள்ள வேண்டும்.

இந்நாட்டின் நவீன சவால்களைச் சமாளிக்கும் வகையில் மாற்றியமைக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளார். அதன் ஒரு கட்டமாக இனியொரு பொருளாதார நெருக்கடி ஏற்படாத வகையில் நாட்டை சுபீட்சமாக மாற்றி, நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளார். அதனை அடியொற்றி வடமேல் மாகாணத்தை தொழில்நுட்பம், சுகாதாரம், கல்வி, சுற்றுலாத்துறை உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் மேம்பட்ட மாகாணமாக மாற்றி அமைப்பது எங்கள் இலக்காகும். அதனை மனதில் கொண்டு அனைத்து அரச ஊழியர்களும் தங்கள் கடமைகளை வினைத்திறனுடன் மேற்கொள்ள வேண்டும் என்றும் ஆளுநர் நஸீர் அஹமட் குறிப்பிட்டார். இந்நிகழ்வில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன, உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியாந்த, நகர அபிவிருத்தி ராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ, நாடாளுமன்ற உறுப்பினர்களான அமல்சிந்தக மாயாதுன்னே, சமன்பிரியஹேரத், யதாமினி குணவர்த்தன, அலி சப்ரி றஹீம் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



மருதமுனை மக்பூலியா மீனவர் சங்கத்தினருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப்புக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று கடந்த 7ஆம் திகதி நடைபெற்றது. இச்சந்திப்பின் போது மருதமுனை மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டன. இவர்களது தேவைகள் தொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் இதன்போது உறுதியளித்தார். இந்நிகழ்வின்போது கிழக்கு மாகாண ஆளுநரின் கல்முனைக்கான இணைப்பாளரும் கல்முனை மாநகரசபையின் முன்னாள் உறுப்பினருமான வி.எம். சிபான் மற்றும் மீனவர் சங்க பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். **(படம்: அம்பாறை மத்திய தினகரன் நிருபர்)**

# வாழைத்தோட்டம் பொதுவிளையாட்டு மைதான அபிவிருத்தி

**தோப்பூர் குறூப் நிருபர்**

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் வெருகல் பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட ஆனைத்தீவு கிராம சேவகர் பிரிவிலுள்ள வாழைத்தோட்டம் பொது விளையாட்டு மைதானத்தின் சுற்றுவேலி அமைப்பதற்கான ஆரம்ப நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

# சேவை நலன் பாராட்டு விழா

**அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) உதவி அதிபர் ஏ.எம்.நபீலின் சேவையை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நேற்று(10) கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அதிபர் ஏ.எச்.பௌஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஓய்வு பெற்றுச் செல்லும் உதவி அதிபர் ஏ.எம்.நபீல் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் பிரதி அதிபர்களான என்.எம்.எம்.சாலிஹ், ஏ.எல்.நசீபா, உதவி அதிபர்களான எம். ஐ.எல்.ஜாபீர், எம்.சம்ஸ்றபா உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் அதிதிகளாக கலந்து கொண்டனர்.



இதன்போது கடந்த 34 வருட காலமாக ஆசிரியர் சேவையில் தன்னை அர்ப்பணித்து கல்விச் சேவை புரிந்து வந்த ஏ.எம்.நபீலின் சேவையை பாராட்டி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன், பொற்கிளியும் வழங்கி வைக்கப்பட்டதுடன், நினைவுப் பரிசில்கள் மற்றும் வாழ்த்துப் பத்திரங்களும் அவருக்கு கையளிக்கப்பட்டன.

# அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவையின் உப தலைவராக எம். ஐ. உதுமாலெவ்வை தெரிவு

**பாலமுனை தினகரன் நிருபர்**



அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவையின் உப தலைவராக எம். ஐ. உதுமாலெவ்வை( ஜேபி) தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவையின் வருடாந்த பொதுக் கூட்டம் கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற போதே உதுமாலெவ்வை தெரிவு செய்யப்பட்டார்.

இவர் முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் அகில இலங்கை சம்மேளனத்தின் முன்னாள் தேசிய தலைவராகவும், முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் அம்பாறை மாவட்ட சம்மேளனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளராகவும் கடமையாற்றியதுடன் தற்போது அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரணர் சங்கத்தின் மாவட்ட ஆணையாளராகவும் செயற்பட்டு வருகிறார்.

சுமார் ஐம்பது வருடங்களாக சமூக சேவையில் ஈடுபாடு கொண்டுள்ள இவருக்கு அண்மையில் ஐம்பதாவது ஆண்டு பொன்விழாவும் கொண்டாடப்பட்டது.இவரது சமூக சேவைக்கு அரச, தனியார் மற்றும் சமூக சேவை, பொது அமைப்புக்களினாலும் பல்வேறுபட்ட பட்டங்களும், பதக்கங்களும், விருதுகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளன.

# அக்கரைப்பற்று மத்திய பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் பொதுச்சபை கூட்டம், புதிய நிர்வாக சபை தெரிவு

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று மத்திய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுச்சபைக் கூட்டமும், புதிய நிர்வாக சபை தெரிவும் அண்மையில் சங்கத்தின் தலைவரும் சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தருமான ஏ.சீ.எம். அஷ்ரப் தலைமையில் அக்கரைப்பற்று மத்திய பலநோக்கு கூட்டுறவு சங்க கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில், ஒன்பது இயக்குநர் சபை உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான விசேட பொதுச்சபை கூட்டத்தில் வாக்கெடுப்பு நடைபெற்றது.இதில் பலர் போட்டியிட்டு அதன் பின்னர் வாக்கெடுப்பின் மூலம் மகளிர் பிரதிநிதிகளாக ஏ.ஆர். நுஸ்கியா, ஏ.எம். றம்சானா ஆகியோரும், ஆண்கள் சார்பில் ஏ.எஸ். ஆகில் அஹமட் , ஏ.எச்.ஏ. றொஸான், எம்.ஏ. நஜுமுதீன், எம்.எச். தாஸிம், ஏ.ஜீ. அன்வர், எம். முஹம்மது இஸ்மாயில் (மீரா இஸ்ஸதீன்), ஐ.எச்.ஏ. வஹாப் ஆகியோர் வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்டனர். அதன் பின்னர் நடைபெற்ற இயக்குநர் சபை கூட்டத்தில் தலைவராக எம்.ஏ. நஜுமுதீன், உப தலைவராக ஏ.எஸ். ஆகில் அஹமட் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். விசேட பொதுச்சபை கூட்டத்தில் கல்முனை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலக தலைமைக் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஐ.எம். பரீட், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களான யூ.எல்.எம். பௌஸ், எஸ். ரமேஸ் குமார், பீ. வரதராஜன், கே.காந்தரூபன், எஸ்.ஜாபீர், ரி.ஜனார்த்தனா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சிறந்த உணவுப் பழக்கத்தை பேணுவதால் என்றும் ஆரோக்கியமாக வாழ முடியும்

மனிதனின் அடிப்படைத் தேவைகளில் மிகப்பிரதானம் உணவாகும். உணவின்றி நாம் உயிர் வாழ முடியாது.

எனினும் பலரின் தவறான உணவுப் பழக்கவழக்கங்கள் மற்றும் ஆரோக்கியமற்ற உணவுகளை உண்ணுதல் போன்ற காரணங்களால் பல்வேறு வகையான உடற்பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அத்துடன் சுகாதாரப் பழக்கங்களை கடைப்பிடிக்காமை, நோய் எதிர்ப்பு சக்தி கொண்ட உணவு உண்ணாமை போன்ற காரணங்களால் தொற்று நோய்கள் ஏற்படுகின்றன.

எனவே சிறந்த உணவுப்பழக்கங்களை நாம் கடைப்பிடிப்பதோடு, சுகாதாரப் பழக்கங்களை தினமும் கடைப்பிடிக்க வேண்டும்.

சிறுவர்கள், இளம்பருவத்தினர், வளர்ந்தோர் ஆகியோருக்கு தவறான உணவுப் பழக்கங்கள் காரணமாக பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

தேவையானளவு உணவுகளை உட்கொள்ளாமை காரணமாக நிறை குறைவு, குருதிச் சோகை, வளர்ச்சி குன்றுதல் போன்ற பிரச்சினைகள் ஏற்படும்.

அதிக அளவு உணவு உட்கொள்வது, சீனி, உப்பு , தரமற்ற பதனிடப்பட்ட உணவுகள் போன்றவற்றால் அதிக நிறை, உடல் பருமனடைதல், தொற்றாநோய்கள் ஏற்படும்.

தேவையான அளவு மரக்கறி, பழவகைகளை உட்கொள்ளாமை காரணமாக உயிர்ச்சத்து குறைபாடு, நோய் எதிர்ப்பு சக்தி குறைதல், குறைவான கல்விச் செயல்பாடுகள், பார்வைக் குறைபாடு போன்ற பிரச்சினைகள் ஏற்படும்.

உணவு வேளைகளைத் தவிர்த்துக் கொள்வதால் போசாக்கு குறைபாடு, குடற்புண், உடற் செயல்பாடு மந்தமடைதல்போன்ற பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

எனவே ஆரோக்கியமான உணவுப் பழக்கங்களை மனிதன் கடைப்பிடிப்பதன் மூலம் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம். அத்துடன் நோய் எதிர்ப்பு சக்தி கொண்ட உணவுகளை அவசியம் உண்ண வேண்டும். எனவே நாம்ஆரோக்கியமான உணவுப்பழக்கத்திற்கு மாற வேண்டும். இவ்வாறு மாறும்போது உடலாரோக்கியம் உள்ளவர்களாக வாழ முடியும்.

பல்வேறு வகையான உணவுகளைத் தேவையான அளவுகளில், பரிந்துரைக்கப்பட்ட வகையில் உண்ண வேண்டும். ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தை கடைப்பிடிப்பதால் அது எமது வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் பெரும்பங்காற்றுவதோடு தொற்றா நோய்களிலிருந்தும் பாதுகாப்புத் தரும். எனவே ஆரோக்கியமான உணவை நாளாந்த வாழ்வில் நாம் தெரிவு செய்தல் வேண்டும்.



நாம் நாளாந்தம் மூன்று பிரதான உணவு வேளைகளில் உணவை உட்கொள்கின்றோம். ஆரோக்கியமான உணவை தெரிவு செய்வதற்கு மூன்று வேளை உணவை நாம் திட்டமிடல் வேண்டும்.

தானியங்கள் மற்றும் கிழங்கு வகைகள் உணவுத் தட்டில் அரைப்பங்கு இருக்க வேண்டும். மரக்கறி வகைகள் உணவுத் தட்டில் இருக்க வேண்டும். மீன், அவரை வகைகள், முட்டை, இறைச்சி இருக்க வேண்டும். கொழுப்பு எண்ணெய் விதைகள் ஓரளவு சேர்க்க வேண்டும். பழவகைகள் (குறைந்தது ஒருநாளைக்கு இருதடவை), பால் உற்பத்திப் பொருட்கள்.

குறிப்பிட்ட ஒன்று அல்லது இரண்டு வகையான உணவுவகைகளில் அதிகளவை உண்பதை விட ஆறு வகையான உணவுகளை உண்ண வேண்டும். எல்லாவற்றிலும் சிறிதளவு உண்ணுவது சிறந்தது. ஒவ்வொரு உணவு வகைகளிலும் வெவ்வேறு போசணைப்பொருட்கள் காணப்படுகின்றன. அப்போசணைப் பதார்த்தங்கள் எவை என்பதை நாம் அறிந்து திட்டமிடுதல் வேண்டும்.

அவை வருமாறு:

தானியங்கள், கிழங்கு வகைகள்,அரிசி, குரக்கன், சோளம், கோதுமை, மாச்சத்து கொண்ட பழங்கள், பலா, ஈரப்பலா, கிழங்கு வகைகள், மரக்கறிகள், கனியுப்புக்கள், விட்டமின்கள்.

நார்ச்சத்துக்கள் போன்றவற்றை வழங்கும் பிரதான உணவு மரக்கறிகளாகும். கீரை,கங்குன், வல்லாரை, முருங்கையிலை, பசளி,அகத்தி,பொன்னாங்காணி, கரட், பீட்ரூட், பூசணி, வெண்டிக்காய், கத்தரிக்காய், தக்காளி, வாழைக்காய் போன்றவற்றில் போசணைகள் காணப்படுகின்றன.

மீன், அவரை வகைகள், முட்டை, இறைச்சி போன்றவற்றில் உயர்தரப் புரதச்சத்துள்ளது. நாம்உண்ணும் மீன் வகைகள், அவரை வகைகளிலும் புரதச்சத்துள்ளது.

கொழுப்பு, எண்ணெய் வகைகள் எமது உடல் வளர்ச்சிக்கும் தொழிற்பாட்டிக்கும் அவசியமானதாகும். எனினும் இவற்றின் மேலதிக பாவனையானது தொற்றாநோய்களை ஏற்படுத்தும்.

நலமான வாழ்வுக்கு நாம் தினமும் பழ வகைகளை சாப்பிட வேண்டும், பால் மற்றும் பால் உற்பத்திப் பொருட்களையும் சேர்க்க வேண்டும். அத்துடன் எமது உணவுகளில் வாசனை திரவியங்களை சேர்ப்பது சிறந்ததாகும். இது சுகாதாரத்துக்கு சிறந்தது. மஞ்சள், இஞ்சி, கறுவா,மிளகு,உள்ளி, மிளகாய், கராம்பு, ஏலம், சீரகம், வெந்தயம் போன்றவை அவையாகும்.

எனவே ஆரோக்கியமான உணவுப் பழக்கங்களையும், சமபோசாக்கான உணவைப் பெற்றுக் கொள்ளும் வகைகளையும் நாம் அறிந்து நடந்தால் ஆரோக்கியமுள்ள பிரஜையாக வாழலாம். அத்துடன் சுகாதாரப் பழக்கங்களை தினமும் அனுசரித்து நடக்கும்போது, தொற்றுநோய் ஏற்படுவதில் இருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.



இஸ்மாயில் ஹுஸைன்தீன் (B Ed), (அம்பாறை விசேட நிருபர்)

# கலைஞர் கருணாநிதிக்கு நினைவு நாணயம் மத்திய அரசு அனுமதி



தமிழக அரசு முன் வைத்த கோரிக்கையை ஏற்று மறைந்த தமிழக முன்னாள் முதல்வர் கருணாநிதியின் நினைவாக நினைவு நாணயம் வெளியிட மத்திய நிதி அமைச்சகம் சார்பில் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அனுமதி வழங்கி உள்ளார்.

இந்தியை திணிப்பதாக தி.மு.க தொடர்ந்து போராடி வரும் நிலையில், இந்த நாணயத்தில் இந்தி மொழியில் முக்கிய வாசகம் இடம் பெற உள்ளது.

மறைந்த தமிழக முன்னாள் முதல்வர் கருணாநிதியின் 100 ஆவது பிறந்தாளை கடந்த ஓராண்டாக தமிழகத்தில் திமுகவினர் கொண்டாடி வந்தனர். இதையொட்டி'முத்தமிழ் அறிஞர் கலைஞர் டொக்டர் எம்.கருணாநிதி' என்ற பெயரில் ஒரு நினைவு நாணயம் வெளியிட தமிழக அரசு விரும்பியது. இந்தியாவில் புகழ் பெற்ற தலைவர்கள், முக்கிய நிகழ்வுகளின் நினைவாக நாணயம் என்பது மத்திய நிதி அமைச்சகம் மூலம் வெளியிடப்பட்டு வருகிறது. இந்நிலையில்தான் கருணாநிதிக்கும் நினைவு நாணயம் வெளியிட தமிழக அரசு சார்பில் மத்திய நிதி அமைச்சகத்துக்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அதாவது ரூ.100 மதிப்பில் தமிழக முன்னாள் முதல்வர் கருணாநிதிக்கு நினைவு நாணயம்வெளியிடும்படி மத்திய நிதியமைச்சகத்திடம் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான தமிழக அரசு சார்பில் கடந்த ஆண்டு அனுமதி கோரப்பட்டது. கடந்த ஜுன் 3ம் முடிந்த கருணாநிதியின் நூறாவது பிறந்தநாள் விழாவில் வெளியிடும் முயற்சியில் இந்த அனுமதி கோரப்பட்டது. ஆனால் அனுமதி என்பது உடனடியாக கிடைக்கவில்லை.

நினைவு நாணயத்திற்கான நடைமுறைகள் முடிவடையாததால் மத்திய நிதி அமைச்சகம் அனுமதி வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டது.

இந்நிலையில்தான் தற்போது அனைத்து நடைமுறைகளும் முடிவடைந்துள்ள நிலையில் 'முத்தமிழ் அறிஞர் கலைஞர் டொக்டர் எம். கருணாநிதி' என்ற பெயரில் நினைவு நாணயம் வெளியிடுவதற்கான அனுமதியை மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பெற்றுள்ளார். இதற்கான உத்தரவு விரைவில் வர்த்தமானியில் வெளியாக உள்ளது. இந்த நினைவு நாணயத்தில் 'டொக்டர் கலைஞர் மு கருணாநிதி' என்றபெயருடன், 'தமிழ் வெல்லும்' எனும் வாசகம் இந்தி மற்றும் ஆங்கிலத்தில் இடம்பெற உள்ளது.

## தமிழகத்தில் உயிர்பறிக்கும் மதுபானம்

# 66 பேர் மரணமான அதிர்ச்சி ஓய்வதற்குள் மேலும் 11 பேர் வைத்தியசாலையில் அனுமதி!

தி.மு.க சட்டசபை உறுப்பினரின் மறைவை அடுத்து தமிழ்நாடு விக்கிரவாண்டியில் நேற்றுக் காலை 7 மணி முதல் வாக்குப்பதிவு தொடங்கி நடைபெற்றது.

விக்கிரவாண்டியில் விறுவிறு என வாக்குப்பதிவு மும்முரமாக நடைபெற்று வரும் நிலையில் விக்கிரவாண்டி தொகுதிக்குட்பட்ட டி.கொசபாளையம் பகுதியில் உள்ள வாக்குச்சாவடியில் வாக்களிக்க வந்த பெண்ணுக்கு கத்திக்குத்து நிகழ்ந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது. இந்நிலையில் விக்கிரவாண்டி பகுதியில் சட்டவிரோத மதுபானம் குடித்த 11 பேர் மருத்துவமனையில் வாந்தி, மயக்கம் காரணமாக அனுமதிக்கப்பட்டுள்ளது மேலும் ஒரு பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது. புதுச்சேரியில் இருந்து சாராயம்



வாங்கி வந்த சக்திவேல் என்பவர் விக்கிரவாண்டி தொகுதிக்குட்பட்ட பூரிகுடிசை என்ற கிராமத்தில் உள்ளவர்களுக்கு கொடுத்துள்ளார். அதைக் குடித்த 11 பேர் வாந்தி, மயக்கம் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வாக்குப்பதிவு நாளில் மதுபானக் கடைகள் மூடப்பட்டு இருப்பதால், புதுச்சேரியில் இருந்து சாராயம் கடத்தி வரப்பட்டு அங்கு கொடுக்கப்பட்டது தெரியவந்துள்ளது. சம்பந்தப்பட்ட நபரான சக்திவேலை கஞ்சனூர் பொலிசார் கைது செய்து இது தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். 11 பேரும் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் கள்ளக்குறிச்சியில் கருணாபுரம் பகுதியில் கள்ளச்சாராயம் அருந்திய 60 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தது பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது. நேற்று உயிரிழப்பு எண்ணிக்கை 66 ஆக உயர்ந்திருந்தது. இந்நிலையில் பரபரப்பாக இடைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெற்று வரும் விக்கிரவாண்டி தொகுதியில் மீண்டும் சாராயம் குடித்து 11 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளது பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

# கிளிநொச்சி அருள் மிகு கந்தசுவாமி ஆலய மஹா கும்பாபிசேகம்



கிளிநொச்சி அருள் மிகு கந்தசுவாமி ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்ட பக்ஷ மஹா கும்பாபிசேகம் மக நட்சத்திரமும் சித்தாமிர்த யோகமும் கூடிய சுபவேளையாகிய 9.02 மணி முதல் 10.31 மணி வரையா சுபமுகூர்த்த வேளையில் இராஜகோபுரத்திற்கும் ஏனைய விமான ஸ்தூபிகளுக்கும் மூவாலய முருகப்பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மஹா கும்பாபிசேகம் சிறப்பாக நடைபெற்றது.

(பரந்தன் குறூப் நிருபர்)

# ஆயிரக்கணக்கான மக்களின் அஞ்சலியுடன் இளம் குருவின் பூதவுடல் நல்லடக்கம்



(தலைமன்னார் விஷேட நிருபர்)

கடந்த ஞாயிற்றுக்கிழமை (07) இரவு அகால மரணமடைந்த மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த மன்னார் மறைமாவட்ட மடுமாதா சிறிய குருமட உதவி அதிபர் அருட்பணி கீ.ஜொனாத்தன் கூஞ்ஞ (வயது 31) அவர்களின் நல்லடக்கம் செவ்வாய் கிழமை (09) பிற்பகல் மன்னார் பொது சேமக்காலையில் சமய தலைவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் இடம் பெற்றது.

திங்கள் கிழமை (08) மன்னார் ஆயர் இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த இவரின் பூதவுடல் செவ்வாய் கிழமை காலை தொடக்கம் மாலை வரை பொது மக்களின் அஞ்சலிக்காக மன்னார் பேராலயத்தில் வைக்கப்பட்டிருந்தது.

இதைத் தொடர்ந்து அன்றைய தினம் மாலை 3 மணிக்கு மன்னார் ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையின் தலைமையில் இரங்கல் கூட்டுத் திருப்பலியுடன் இறுதி யாத்திரை சடங்குகளுடன் அமரர் கீ.ஜொனார்த்தன் அடிகளாரின் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவரின் பூதவுடலுக்கு பல ஆயிரக்கணக்கான மக்களும் பாராளுமன்ற உறுப்பினர்கள், பொலிஸ் இராணுவ தலைவர்கள். பாடசாலை மாணவர்கள், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் உட்பட பல முக்கியஸ்தர்கள் இவரின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

# கொக்குத்தொடுவாய் பகுதிக்கு ஐ.நா. சபை மனித உரிமைகள் அலுவலர் விஜயம்

ஓமந்தை விஷேட நிருபர்

முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழி அகழ்வு இடத்திற்கு நேற்று (09) பிற்பகல் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அலுவலர் லூடியானா செல்றீன் அகிலன் நேரடியாக சென்று பார்வையிட்டுள்ளார்.

அத்துடன், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் சட்டத்தரணி வி.கே. நிரஞ்சன் ஆகியோரிடம் குறித்த புதைகுழி விவகாரங்கள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

கடந்த 2023 ஜுன் 29ஆம் திகதியன்று, முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் பகுதியில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் நீர் இணைப்பினைப் பொருத்துவதற்காக, கனரக இயந்திரத்தின்



மூலம் நிலத்தினை அகழ்ந்தபோது மனிதப் புதைகுழியொன்று இனங்காணப்பட்டிருந்தது.

இதனையடுத்து முல்லைத்தீவு நீதிமன்றம், முல்லைத்தீவு சட்ட வைத்திய அதிகாரி ஆகியோரின் கண்காணிப்பு மற்றும் பங்குபற்றுதல்களுடன், தொல்லியல் துறைப் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினரால், இனங்காணப்பட்ட மனிதப்புதைகுழி இரண்டு கட்டங்களாக அகழ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

அகழ்வாய்வுகளின்படி இதுவரையில் 40 மனித எலும்புக்கூட்டு தொகுதிகளும், தமீழீழ விடுதலைப் புலிகள் பயன்படுத்தும் இலக்கத் தகடுகள், துப்பாக்கிச் சன்னங்கள், உடைகள் உள்ளிட்ட பல தடயப் பொருட்களும் மீட்கப்பட்டிருந்தன.

இரண்டாங்கட்ட அகழ்வாய்வு பணிகளின்போது மனிதப் புதைகுழி வளாகம் விசேட ஸ்கேன் கருவிமூலம் ஆய்வு செய்யப்பட்ட போது, முல்லைத்தீவு கொக்கிளாய் பிரதானவீதியின் கீழ்ப்பகுதியிலும் மேலும்பல மனித எச்சங்கள் இருப்பதும் கண்டறியப்பட்டிருந்தது.

அகழ்வாய்விற்கென ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் முடிவுற்றதால் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த சூழலில் மீளவும் நிதிஒதுக்கீடுகள் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் கடந்த 04.07.2024 அன்று ஆரம்ப கட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.

# படுகொலை செய்யப்பட்ட பெண் இராணுவ மரியாதையுடன் அடக்கம்!

(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு உட்பட்ட மூங்கிலாறு தெற்கு உடையார் கட்டு பகுதியில் வசித்து வந்த 29 வயதுடைய நிசானி என்ற இளம் குடும்ப பெண், கடந்த 06.07.2024 அன்று யாழ்ப்பாணத்தில் வைத்து இரண்டாவது கணவனால் குத்தி படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இவர் தனது இரண்டாவது கணவனுடன் யாழ் கொழும்புத்துறை ஆனந்தவடலி பகுதியில் வசித்து வந்த நிலையில் குடுத்தில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக கணவன் கத்தியால் குத்தி படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கணவன் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தி சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். குறித்த பெண்ணின் உடலம் நேற்று முன்தினம் (09) மூங்கிலாறு தெற்கில் உள்ள அவரது இல்லத்திற்கு எடுத்துவரப்பட்டு பூரண இராணுவ மரியாதையுடன் மூங்கிலாறு தெற்கு



இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் பெருமளவான மக்கள் கலந்துகொண்டனர்

குறித்த பெண் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள இராணுவத்தில் இணைந்து கடந்த 10 ஆண்டுகளாக கேப்பாபிலவு இராணுவ முகாமில் கடமையாற்றிய நிலையில் இராணுவத்தினை சேர்ந்த ஒருவரை திருமணம் செய்து வாழ்ந்து வந்துள்ளார். முதற்கணவன் ஏற்கனவே திருமணம் செய்துள்ளமை தெரியவந்துள்ளதை தொடர்ந்து பிரிந்து வந்த நிலையில் மற்றும் ஒருவரை திருமணம் செய்து ஒரு பிள்ளை உள்ள நிலையில் இருவருக்கும் இடையில் குடும்ப பிரச்சினை தொடர்ந்து வந்துள்ளது.

# பெண் நோயியல் வைத்திய நிலையமானது தொடர்ந்து இயங்காத நிலையில் காணப்படுகின்றது

(பரந்தன் குறூப் நிருபர்)

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை வளாகத்தில் நெதர்லாந்து அரசின் நிதி உதவியுடன் சுமார் 5320 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டு கடந்த மே மாதம் 25ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் திறந்து வைக்கப்பட்ட பெண் நோயியல் வைத்திய நிலையமானது தொடர்ந்து இயங்காத நிலையில் காணப்படுகின்றது

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை வளாகத்தில் கடந்த 2017 ஆம் ஆண்டு வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் முன்மொழிவுக்கு அமைய நெதர்லாந்து அரசின் நிதியுதவியுடன் 5320 மில்லியன் ரூபாய் செலவில் நவீன வசதிகள் கொண்ட மருத்துவ உபகரணங்களுடன் கூடிய பெண்நோயியல் வைத்திய நிலையம் திறந்து வைக்கப்பட்டது. இக் கட்டடமானது போதிய ஆளணி வளம் இன்மையால் தொடர்ந்து இயங்காத நிலையில் காணப்படுகின்றது. குறிப்பாக நவீன வசதி கொண்ட இரு சத்திர சிகிச்சை கூடங்கள் இயங்காத நிலையில் காணப்படுகின்றன. மயக்க மருந்து வைத்திய ஆளணி இன்மை காரணமாகவே இயக்க முடியாதிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

அதேபோல கதிரியக்க வைத்திய நிபுணர் இன்மையால் அவற்றின் செயற்பாடுகளும் இடம்பெறுவதில்லை இவ்வாறு வைத்திய சிகிச்சைப்பிரிவு திறந்து வைக்கப்பட்டுள்ள போதும் போதிய ஆளணி வளங்கள் நியமிக்கப்படவில்லை இதற்கான ஆளணி வளங்களை நியமிப்பதற்கோ அல்லது ஏற்கனவே வைத்தியசாலையில் இருக்கின்ற ஆளணி வளங்களைக் கொண்டோ அதனை இயங்க வைப்பதற்கு மத்திய மற்றும் மாகாண சுகாதார அமைச்சுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## அறிவித்தல்

வ/ப தம்பதெனிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எதிர்வரும் வாக்கெடுப்பு விடயங்களுக்காக 2024.06.30 திகதிக்கு முடிவுறும் வாக்குரிமை அங்கத்தவர் பெயர் பட்டியல் மற்றும் 2024.06.30ம் திகதிக்கு அங்கத்தவர் பெயர்பட்டியல் போன்ற ஆவணங்கள் 02, 2024.07.11 முதல் 2024.07.25 வரை வாரத்தின் தலைமையகத்தில் மற்றும் ஒவ்வொரு கூட்டுறவு பிரதேச அலுவலகங்களுடன் சம்பந்தப்பட்ட வளாகங்களில் காட்சிப்படுத்தப்படுவதாக இத்தால் அறிவிக்கப்படுகிறது. வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் பதிவாளரால் விநியோகிக்கப்பட்டுள்ள இல. 1981/2 என்ற 2016.08.22ம் திகதிய வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட்ட வடமேல் மாகாண பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதேச செயற்குழு அங்கத்தவர்களை தேர்தெடுக்கும் கூட்டுறவுச் வாக்கெடுப்பு கட்டளை கோவையின் பிரகாரம் இக்காட்சிப்படுத்தல் இடம்பெறுவதுடன் குறித்த ஆவணத்தில் குறிப்பிடப்படும் பெயர்கள் அல்லது வேறு தகவல்களில் பிழையுடனான நிலை இருப்பின் அது பற்றி மேன்முறையிடு அல்லது திருத்தம் மேற்கொள்ளல் அல்லது உள்ளடக்கப்பட்டுள்ள பெயர் சம்பந்தமாக ஏதேனும் எதிர்ப்புகள் இருப்பின் காட்சிப்படுத்தல் கால எல்லைக்குள் சங்கத்தின் செயலாளருக்கு எழுத்துமூலம் சமர்ப்பிக்குமாறு இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

**கௌரவ பணிப்பாளர் சபையின் கட்டளைப் பிரகாரம்,**

**செயலாளர்,**
**வ/ப, தம்பதெனிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,**
**தம்பதெனிய**


# அநுராதபுரம் மாவட்ட விவசாய குழுக்கூட்டத்தில் முக்கிய தீர்மானம்

**திறப்பனை தினகரன் நிருபர்**

இவ் வருட ஜூன் மாதத்திற்கான அநுராதபுரம் மாவட்ட விவசாய குழுக் கூட்டம் மாவட்ட செயலாளர் ஜனக ஜயசுந்தர தலைமையில் மாவட்ட செயலக அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

கறுவாச் செய்கை போன்ற புதிய பயிர் செய்கையை மேற் கொள்ளல், வெற்றுக் காணிகளை முறையாகப் பயன்படுத்துதல், விவசாயிகளுக்கு நல்ல வருமானத்தை பெற்றுக் கொடுத்தல், யானை மனித மோதலை தவிர்த்தல் போன்ற பல்வேறு விடயங்கள் இங்கு கலந்துரையாடப்பட்டன.

இக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய மாவட்ட செயலாளர் ஜனக ஜயசுந்தர; கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இவ்வருடம் காட்டு யானைகளின் தாக்குதல்களினால் மனித உயிரிழப்புக்கள் குறைவாகவே காணப்பட்டுள்ளன.

அதற்கு மின்சார வேலியே பிரதான காரணம் எனவும் தெரிவித்தார்.

இவ்வருடம் சுமார் 272 கிலோமீற்றர் தூரம் கொண்ட மின்சார வேலி நிர்மாணிக்கப்பட்டு வருவதோடு, அதற்கு பொது மக்களின் ஆதரவு மிகவும் அவசியமானது எனவும் மாவட்ட செயலாளர் மேலும் தெரிவித்தார்.

இம்முறை கூடுதலான பயிர்ச் செய்கையை மேற்கொள்ளும் நோக்கில் மகாவலி "எச்" பிராந்திய விவசாயிகளுக்கு உர மானியம் வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் பாரிய நீர்த்தேக்கங்கள், நடுத்தர நீர்த்தேக்கங்கள், சிறிய நீர்த்தேக்கங்கள், தற்காலிக நீர்த்தேக்கங்களில் மீன் குஞ்சுகள் விடப்பட்டுள்ளன. இதனுடன் அலங்கார மீன் வளர்ப்புக்கு வங்கிகள் ஊடாக கடன் வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

# அளுத்மாவத்தை ஆனந்த ஐயப்பனின் திருவிழா எதிர்வரும் 16 இல் ஆரம்பம்



அளுத்மாவத்தை ஆனந்த ஐயப்பனின் 21ஆம் ஆண்டு திருவிழா எதிர்வரும் 16ம் திகதி காலை 05.45 மணியளவில் கணபதி ஹோமத்துடன் ஆரம்பமாகின்றது. அதனைத் தொடர்ந்து 17ம் திகதி மஞ்ச மாதா திருப்பூஜையும், 18ம் திகதி நாகராஜா பூஜையும், 19ம் திகதி கருப்புசாமி பூஜையும், 20ம் திகதி பள்ளிவேட்டை திருவிழாவும், 21ம் திகதி தீர்த்தவாரி உற்சவமும் தேர்த்திருவிழாவும் நடைபெறவுள்ளன.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் அகில இலங்கை ஆனந்த ஐயப்ப தேவஸ்தான அறங்காவலர் சபையினர் செய்து வருகின்றனர்.

30 ஆண்டுகளுக்கு முன்னர் 1993 இல் ஏப்ரல் மாதம் 5ம் திகதி ஆலய நிர்மாணத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. 15.07.2002ல் முதலாவது மகாகும்பாபிஷேகமும் நடைபெற்றது. கும்பாபிஷேக கிரியாபூஜைகள் யாவும் சபரிமலை அதியுயர் தந்திரி பிரம்மஸ்ரீகண்டருமகேஸ்வரு தலைமையின் கீழ் கேரள செண்டை பஞ்சவாத்தியம் முழங்க நடைபெற்றன.

30.10.2015 இல் இரண்டாவது கும்பாபிஷேகமும் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் ஆனிமாதம் வருடாபிஷேக கொடியேற்ற தீர்த்த ஆராட்டு திருவிழா நடைபெற்று வருகிறது.

2011ம் ஆண்டில் ஆலயத்தின் கொடித்தம்பம் புனரமைக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது.

ஆலயம் அமைவதற்கு அறங்காவலர் ராஜுசிவராமனுக்கு பக்கத்துணையாக இருந்து செயற்பட்டு வரும் நிர்வாகசபை உறுப்பினர்களான க.கணேஷமூர்த்தி, எ.பால்ராஜ், வி.மனோரஞ்சன், சி.ஆனந்தீஷ்வரன், அ.ரமேஷ், சி.தியாகராஜ், பி.சுப்ரமணியம் ஆகியோர் மற்றும் ஆலய குரு சுவாமிமார்களும், ஆலயத்தொண்டர்களும் குறிப்பிடத்தக்கவர்கள்.

கார்த்திகை மாதம் 1ஆம் திகதி ஐயப்பசுவாமிக்கு விரதம் இருக்கும் சாமிமார்களுக்கு மாலை அணிவிக்கப்படுகிறது.

அதைத் தொடர்ந்து விசேட பூஜைகள், பஜனை, நடைபெற்று அன்னதானம் வழங்கப்படுகிறது.

**எச்.எச்.விக்கிரமசிங்க**

சீனன்கோட்டையில் 35ஆவது வருட

# ஹஜ்ஜுப் பெருநாள் தின விளையாட்டு நிகழ்ச்சி





**பேருவளை விசேட நிருபர்**

பேருவளை, சீனன்கோட்டை ஸாலி ஹாஜியார் மாவத்தை 'யங் பிரதர்ஸ்' விளையாட்டுக் கழகம் ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டு 35ஆவது வருடமாக ஏற்பாடு செய்த ஹஜ்ஜுப் பெருநாள் விளையாட்டு நிகழ்ச்சிகள் 17, 18 ஆகிய தினங்களில் ஸாலி ஹாஜியார் மாவத்தையில் வெகுவிமர்சையாக நடைபெற்றது.

இந்த விளையாட்டு போட்டிகளில் 40க்கும் மேற்பட்ட போட்டிகள் ஆண், பெண்களுக்கு வெவ்வேறாக இடம்பெற்றதோடு இப்போட்டிகளில் 400க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் பங்குபற்றினர். விசேட கலைநிகழ்ச்சிகளாக சமூக நாடகம் மற்றும் முஸ்லிம்களது பாரம்பரியத்தை பிரதிபலிக்கும் களிகம்பு நிகழ்ச்சி மற்றும் சிறார்களின் திறமைகளை வெளிக்காட்டும் நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

யங் பிரதர்ஸ் விளையாட்டுக் கழகத் தலைவர் சமாதான நீதவான் ஏ.டப்ளியு.எம். அன்ஸார் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் ஊரின் முன்னேற்றத்திற்காக உழைக்கும் பல பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தனர். இவ்வனைத்து நிகழ்ச்சிகளையும் ஸாலி ஹாஜியார் மாவத்தை இளைஞர்கள் முன்னின்று ஒற்றுமையோடு நடத்தியமை விசேட அம்சமாகும்.


தேசிய லொத்தர் சபை National Lotteries Board
செவ்வாய் 2024.07.09
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5529 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.38,578,936.00
ஆங்கில எழுத்து K — வெற்றி இலக்கங்கள் 0 6 5 3 6 2

அத சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 104
ஆங்கில எழுத்து K — வெற்றி இலக்கங்கள் 5 3 6 2

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3771 — சீட்டிழுப்பு திகதி 2024.07.09 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.64,775,524.36
ஆங்கில எழுத்து C — வெற்றி இலக்கங்கள் 03 32 40 73 — விசேட எழுத்து C — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 38813

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1877 — 2024.07.09 — 63379 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 438,363,958.00
ஆங்கில எழுத்து B — சுப்பர் இலக்கம் 13 — வெற்றி இலக்கங்கள் 15 20 54 72
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

VIP — திகதி 2024.07.09 — சீட்டிழுப்பு இலக்கம் 0355
ஆங்கில எழுத்து F — வெற்றி இலக்கங்கள் 6 1 2 1 1 2
L7 எழுத்து F
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 32,648,818.08

ராசி சுப பலன் — திகதி 2024.07.09 — சீட்டிழுப்பு இலக்கம் 838 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.3,581,768.40
வெற்றி இலக்கினம் கன்னி — வெற்றி இலக்கங்கள் 05 16 19 46 — தனயோக இலக்கம் 06229 — நாளுக்கான விதி எண் 08

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1559 — 2024.07.09 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 100,482,205.92
ஆங்கில எழுத்து Q — வெற்றி இலக்கங்கள் 04 09 11 40 — விசேட எழுத்து Q — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 45839


# சமாதான நீதவானாக நியமனம்



சாய்ந்தமருது 01 ஐச் சேர்ந்த உதுமான்கண்டு முஹம்மது றிம்சான் அகில இலங்கை சமாதான நீதவனாக நியமிக்கப்பட்டுள்ளார். அண்மையில் கல்முனை மாவட்ட நீதிமன்றத்தின் நீதவான் முன்னிலையில் இவர் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். கிழக்குப் பல்கலைக் கழகத்தின் சு.வி.அ.க. நிறுவகத்தின் நுண்கலை பட்டதாரியுமாவார்.






# 28 கிலோ கேரள கஞ்சா கூலர் வாகனத்தில் கடத்தல்; வவுனியா பொலிசார் அதிரடி

**வவுனியா விசேட நிருபர்**

மன்னார், பேசாலை பகுதியிலிருந்து கொழும்பு நோக்கி கடத்தப்பட்ட 28 கிலோ 760 கிராம் கேரளா கஞ்சா வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளதுடன் கூலர் வாகனத்துடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். நேற்று (10) அதிகாலை ஒரு மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய விசேட புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் வவுனியா தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஜெயக்கொடியின் அறிவுறுத்தலின் நிமித்தம் போதைப் பொருள் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ரிஸ்வி தலைமையிலான குழுவினரே இந்த நடவடிக்கை மேற்கொண்டிருந்தனர்.

மன்னார், பேசாலை பகுதியிலிருந்து கூலர் ரக வாகனம் ஒன்றில் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டு கொழும்பு நோக்கி கடத்தப்பட்ட போதே பொலிஸார் இதனை கைப்பற்றியுள்ளனர்.


## இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

2009ம் ஆண்டு 20ம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின்
12 (1) (அ) பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்.

### அனுமதிப்பத்திரங்களை நீட்டிப்பதற்கான உத்தேசம்

2009ம் ஆண்டு 20ம் (திருத்தப்பட்ட) இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 12(1) (அ) பிரிவிற்கமைய, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ("ஆணைக்குழு") இலங்கை மின்சார சபைக்கு மின்சாரத்தை உற்பத்தி செய்தல், கடத்துதல், விநியோகித்தல் மற்றும் பறிமாற்றம் செய்தல் ஆகிய நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களை நீட்டிக்க ஆணைக்குழு உத்தேசித்துள்ளது என்பதனை இதன் மூலம் அறிவிக்கின்றது. நுகர்வோருக்கு மின்சார விநியோகத்தின் இருப்பு மற்றும் தொடர்ச்சியை விருத்தி செய்யும் நோக்கத்திற்கான அனுமதிப் பத்திரத்தினை நீட்டிக்க உத்தேசிக்கின்றது என்பதை இத்தால் அறியத்தருகின்றது.

| உரிமங்கள் | உரிம இல: |
|---|---|
| மின்சார உற்பத்தி உரிமம் | EL/GB/09-001 |
| மின்சார பரிமாற்றம் மற்றும் மொத்த விநியோக உரிமம் | EL/T/09-002 |
| மின்சார விநியோகம் மற்றும் பரிமாற்றம் உரிமம் (வலயம் 1 தொடர்பாக) | EL/D/09-003 |
| மின்சார விநியோகம் மற்றும் பரிமாற்றம் உரிமம் (வலயம் 2 தொடர்பாக) | EL/D/09-004 |
| மின்சார விநியோகம் மற்றும் பரிமாற்றம் உரிமம் (வலயம் 3 தொடர்பாக) | EL/D/09-005 |
| மின்சார விநியோகம் மற்றும் பரிமாற்றம் உரிமம் (வலயம் 4 தொடர்பாக) | EL/D/09-006 |

மேற்கூறிய நோக்கம் தொடர்பாக ஆட்சேபனைகளை (இருப்பின்) இந்த அறிவித்தல் வெளியிடப்பட்டு இருபத்து எட்டு (28) நாட்களுக்குள் ஆணைக்குழுவிற்கு எழுத்து மூலமாக அறிவிக்கலாம்.

தலைவர்
இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு
06-வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,
இலக்கம் 28, புனித மைக்கல் வீதி,
கொழும்பு 03

திகதி: 2024.07.11

தொலைபேசி: (011) 2392607/8
தொலைநகல்: (011) 2392641
பெக்ஸ்: licensing@pucsl.gov.lk
இணையதளம்: www.pucsl.gov.lk

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

### 122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

AAY-1955 BAJAJ, 2015, THREEWHEELER அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு-03. தொலைபேசி. 0711210810. 046300

### 128 டயர்கள், டியூப்புகள் விற்பனைக்கு

டயர் டியூப் ஒரே கூரையின் கீழ் சகல டயர் போக்லிப்ட், கல், காற்று, டயர் இருக்கும் இடத்திற்கு போக்குவரத்து ரிச்சட் பீரிஸ், ஆர்பிடெக் டயர் நிரப்புவதற்கு வழங்கப்படாத 700x167 50716700x20-1000x20.155 கிரவுன் டயர், கொழும்பு -14. 0773134060 044411

## காணி/தோட்டம்

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

மாலபே, கஹன்தொட்ட வீதியில் அத்துருகிரிய மற்றும் கொத்தலாவல அதிவேக பிரவேச பாதைகளுக்கு 05 நிமிட தூரத்தில் உள்ள தனி மாடி வீடு மற்றும் மூன்று மாடி அனெக்ஸ் உடன் 35 பேர்ச் காணி விற்பனைக்கு. தொலைபேசி இலக்கம் 0742107170. 046178

## வேலைவாய்ப்பு

### 309 வெற்றிடங்கள் கணக்கியல்/ நிதி

கொழும்பு-03, நிர்மாணக் கம்பனிக்கு ஒரு கணக்கு இலிகிதர் தேவை. CV Mail - asmhanan@hotmail.com +94 (75) 035 4533 0773154146. 045999

### 312 வெற்றிடங்கள் தொழில் நுட்பம்

சுத்திகரிப்பு ஆண்/ பெண் ஊழியர் வெற்றிடங்கள். 20 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்ட ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தங்குமிட வசதிகள் மற்றும் உணவு பானங்கள் இலவசம். சீருடை இலவசம். கவர்ச்சியான சம்பளத்துடன் மேலதிக நேர கொடுப்பனவுகள். சுத்திகரிப்பு மற்றும் பராமரித்தல் வேலைகள் பற்றிய அனுபவம் மற்றும் கடும் நம்பிக்கை, ஆர்வம் உள்ள உங்களுக்கு கல்வித் தகைமைகள் முக்கியமில்லை. அழையுங்கள் தொ.பே. இலக்கம் - 0766845349. (நாட்டின் எப்பாகத்தில் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்.) 046170

### 318 வெற்றிடங்கள் டிரைவர்கள்

கொழும்பு-06, ஒரு வீட்டுச் சாரதி தேவை. +94 (75) 035 4533, 0773154146. 045991

### 325 தொழில்துறை பொது

கொழும்பு-03, ரியல் எஸ்டேட் கம்பனிக்கு ஓர் இணைப்பாளர் தேவை. Cv mail asmhanan@hotmail.com மொழி சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம். +94 (75) 035 4533 0773154146 046001






**Applicable Rates for Obituary Notices of Sunday Observer**

**For 15 Words - Rs. 500**

* Each additional word Rs. **20/-**

N. B. - Death Certificate is essential

**011 2 429 342 / 011 2 429 343**
classified@lakehouse.lk
frontoffice@lakehouse.lk


## திருத்த அறிவித்தல்

**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி**

2024.06.19 ஆம் திகதியன்று மேலே குறிப்பிட்டுள்ள தலையங்கத்தின் கீழ் தினகரன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் விலைக்கோரல் இலக்கமானது **0169/T/2024** என தவறாக பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இதனை **069/T/2024** என திருத்தி வாசிக்கவும்.

**தலைவர்,**
**வ/ப விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்**
**பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்க**

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

# சுகாதார அமைச்சு

### இலங்கை தேசிய கண் வைத்தியசாலை, கொழும்பு 10

### பழைய கட்டிடத்தின் E.W. பெரேரா மாவத்தை பக்கம் மற்றும் பின்புறத்திற்கு நிறப்பூச்சு பூசுதல்

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் மற்றும் அடிப்படை மதிப்பீட்டுச் கிரயமாக (வரிகள் மற்றும் சில்லறைச் செலவுகள் இன்றி) 18.94 மில்லியன் ரூபாவைக் கொண்ட பழைய கட்டிடத்தின் E.W. பெரேரா மாவத்தை பக்கம் மற்றும் பின்புறத்திற்கு நிறப்பூச்சு பூசுவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து கொழும்பு-10, இலங்கை தேசிய கண் வைத்தியசாலை, பணிப்பாளரின் சார்பாக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மேல்நிலை திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.
2. இந்த வேலைகளில் ஐந்து மாடிகளைக் கொண்ட பழைய கட்டிடத்தின் E.W. பெரேரா மாவத்தை பக்கம் மற்றும் பின்புறத்திற்கு நிறப்பூச்சு பூசுதல் என்பன உள்ளடங்குகின்றன. இந்த வேலைகளில் சாந்து பூசுதல், நீர்க்கசிவு தடுப்பு வேலைகள், கட்டமைப்பு திருத்தவேலைகள் மற்றும் நிறப்பூச்சு வேலைகள் பிரதானமாக உள்ளடங்குகின்றன.
3. இந்த வேலைத்தளம் கொழும்பு 10, இலங்கை கண் வைத்தியசாலை இடப்பரப்பில் அமைந்துள்ளது. நிர்மாணக் காலம் 84 நாட்களாகும்.
4. விலைக்கோரல்கள் தேசிய கண் வைத்தியசாலை போட்டி ரீதியிலான விலைக்கோரல் முறையில் (NCB) நடைமுறைப்படுத்தப்படும்.
5. ஒப்பந்தந்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியைப் பெறுவதற்கு, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் அடங்காதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் பின்வரும் தகைமைத் தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

   ICTAD பதிவுத் தேவைப்பாடு:
   - விசேடத்துவம் : கட்டிடம்
   - தரம் : C6 அல்லது C5
6. ஒப்பந்தந்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியாக தகைமைத் தேவைப்பாடுகளில் உள்ளடங்குவன:
   - I. நிர்மாண வேலைகள் 5 வருடகால அனுபவம்.
   - II. வருடாந்த சராசரி நிர்மாண வேலைகளின் அளவு 114 மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும்.
   - III. 20% வேலைகளைத் தவிர்த்து செயற்பாட்டு மூலதனத்தின் குறைந்தபட்ச தொகை கடன் வசதிகள் சகிதம் 23 மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும்.
   - IV. இந்த விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு 8 மற்றும் 9ஆம் பிரிவிற்கு இணக்கமாக 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் பதிவு.
7. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கொழும்பு 10, தேசிய கண் வைத்தியசாலை, பணிப்பாளரிடம் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல. 011-2691111 மற்றும் மேற்கூறிய முகவரியில் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் விலைமனுக்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
8. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத 4,000.00 ரூபா கட்டணத்தை இலங்கை தேசிய கண் வைத்தியசாலை காசாளருக்குச் செலுத்தியதன் பின் 2024-07-15ஆம் திகதி முதல் (விலைமனுக்கள் வழங்கப்படும் நாள்) 2024-07-31ஆம் திகதி வரையில் (திகதி) மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் கொழும்பு-10, இலங்கை தேசிய கண் வைத்தியசாலை, பணிப்பாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
9. நகல்பிரதிகளுடனான விலைமனுக்களை 2024 ஆகஸ்ட் 01ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் சமுகம்தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் விலைக்கோரலில் கலந்துகொள்ள தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் முடிவுறுத்தல் நேரத்தின் பின் உடன் திறக்கப்படும்.
10. சகல விலைமனுக்களுடனும் 300,000.00 ரூபாவுக்கான (மூன்று இலட்சம் ரூபா மட்டும்) விலைமனுப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப் பிணை முறியானது 2024-08-01ஆம் திகதி முதல் 2024-11-27ஆம் திகதி வரையில் (விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 119 நாட்கள் வரையில்) செல்லுபடியாதல் வேண்டும்.

    விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு மேற்கூறப்பட்ட முகவரியானது:
    **கணக்காளர்,**
    **இலங்கை தேசிய கண் வைத்தியசாலை,**
    **கொழும்பு 10.**

**பணிப்பாளர்,**
**இலங்கை தேசிய கண் வைத்தியசாலை,**
**கொழும்பு 10.**
**தொலைபேசி: 0112693911**




இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு
## ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம்
(e-NIC செயற்திட்டம்)

## விலைமனுக்கோரல் (IFB)

# 752 எண்ணிக்கையிலான Touch Displays வழங்கல் மற்றும் விநியோகித்தல்

### IFB No: DRP/e-NIC/PRO/2024/31

1. e-NIC செயற்திட்டம், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், "B" பகுதி, 10 ஆம் மாடி, ஸ்ரீ சுபூதிபுர வீதி, சுஹுருபாய, பத்தரமுல்லை சார்பாக, செயற்திட்ட கொள்முதல் குழுவின் தலைவரினால், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தில் மாகாண அலுவலகத்திற்கான 752 எண்ணிக்கையிலான Touch Displays வழங்கல் மற்றும் விநியோகிப்பிபதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.
2. இம் மனுக்கோரல்கள் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும்.(NCB)
3. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **காரியாலய நேரங்களில் மு.ப 09.00** மணி தொடக்கம் **பி.ப 03.00 மணி வரை சிரேஷ்ட கொள்முதல் அதிகாரி, e-NIC செயற்திட்டம், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம்,** (தொலைபேசி: **011-2874626)** மூலம் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும். மேலும் e-NIC செயற்திட்டம், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், "B" பகுதி, 10 ஆம் மாடி, ஸ்ரீ சுபூதிபுர வீதி, சுஹுருபாய, பத்தரமுல்லையில் அமைந்துள்ள ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தில் **2024.07.11 ஆம் திகதி** முதல் **2024.08.01 ஆம் திகதி** வரை எவ்வித கட்டணச் செலுத்துகையும் இன்றி பரீட்சித்துக்கொள்ள முடியும்.
4. ஒப்பந்தத்திற்கு தகுதிபெற பின்வரும் குறைந்தபட்ச தகுதிகளை மனுதாரர் பூர்த்தி செய்ய வேண்டியதுடன், கூடுதல் விவரங்கள் மனு ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ளன.
   - a. மனுதாரர் **ஐந்து (05) ஆண்டுகளுக்கு** மேல் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக இருத்தல் வேண்டும்.
   - b. இந்த மனுக்கோரலுக்கு **பணிப்பாளர் குழு மற்றும் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட (POA) சான்றிதழ்** உடன் மனு மற்றும் ஏனைய ஆவணங்களுக்கு கையொப்பமிடும் நபருக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.
   - c. மனுதாரர் **ISO 9001-2015 (தர மேலாண்மை)** தரத்தில் சான்றிதழ் பெற்றிருப்பதோடு அதனை மனுக்களுடன் சமர்ப்பிக்க வேண்டும்.
   - d. உற்பத்தியாளர் **ISO 9001:2015, ISO 14001 மற்றும் ISO 50001** சான்றிதழைப் பெற்றவராக இருக்க வேண்டும் மற்றும் அதற்கான தொடர்புடைய சான்றிதழ்கள் ஏலத்துடன் இணைக்கப்பட வேண்டும்.
   - e. இக்கோரலில் பங்கேற்கும் மனுதாரர் **1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் கீழ்** பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
   - f. **கடந்த ஐந்து (05) ஆண்டு காலத்திற்குள் (2019-2023)** மனுதாரர் இந்த ஒப்பந்தத்தின் பொருட்கள் மற்றும் சேவைகளின் தன்மையின்படி வணிக அனுபவத்தைப் பெற்றிருக்க வேண்டும்.
   - g. கடந்த **ஐந்து (05) ஆண்டு காலத்திற்குள் (2019/2020-2023/2024)** மனுதாரர் **குறைந்தபட்சம் 300 மில்லியன் ரூபாய்** அல்லது அதற்கு அதிகமாக நிறுவனத்தின் தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலையினை கொண்டிருத்தல் வேண்டும்.
   - h. மனுதாரர் குறைந்தபட்சம் **இருநூறு மில்லியன் இலங்கை ரூபாயில் (200 மில்லியன்) நிகர திரவ சொத்துக்கள்** (தற்போதைய சொத்துக்கள்-பொருட்கள்-நடப்பு பொறுப்புகள்) அல்லது இந்த திட்டத்திற்கான **கடன் வசதிகளை** வழங்கக் கூடியவாறு இருத்தல் வேண்டும்.
   - i. கடந்த **ஐந்து (05) ஆண்டுகளாக (2019/2020-2023/2024)** நிறுவனத்தின் தணிக்கை செய்யப்பட்ட **(இலாபம் மற்றும் நஷ்டம் மற்றும் நிதிநிலை அறிக்கைகளின்) சான்றளிக்கப்பட்ட நகல்களை** மனுதாரர் சமர்ப்பிக்க வேண்டும்.
   - j. மனுதாரர் இந்த தயாரிப்பின் அசல் உபகரண உற்பத்தியாளரின் **அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குநராக** இருக்க வேண்டும். அதற்கான ஆதாரம் அசல் உபகரண உற்பத்தியாளர்களின் தொடர்பு விவரங்கள் மனு ஆவணத்தில் இணைக்கப்பட வேண்டும் மற்றும் பொருந்தினால் அவற்றின் உள்ளூர் முகவர் / விநியோகஸ்தர்கள் மனுதாரரால் தயாரிக்கப்படாத / வழங்கப்படாத உபகரணங்கள், **அசல் உற்பத்தியாளரிடமிருந்து உற்பத்தியாளரின் அங்கீகாரக் கடிதங்கள்** இந்த ஏல ஆவணத்துடன் வழங்கப்பட வேண்டும். மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் இணைக்கப்படாவிட்டால் மனுக்கள் முறையாக பதிலளிக்கப்படாதவையாகக் கருதப்படும்.
   - k. மேற்கோள் காட்டப்பட்ட நாமக் குறியீடு (brand) விற்பனைக்குப் பிந்தைய உத்தரவாதம் மற்றும் சேவைகளுடன் மனுதாரர் அல்லாத ஒரு உள்ளூர் உற்பத்தி அலுவலகம் அல்லது தனியான சுயாதீனமான அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர் இலங்கையில் இருக்க வேண்டும்.
   - l. மனுதாரர் முன்மொழியப்பட்ட நாமக் குறியீடு /தயாரிப்பு குறைந்தபட்சம் இருபத்தைந்து (25) வருடங்கள் உலகச் சந்தை இருப்பைக் கொண்டிருக்க வேண்டும்.
   - m. முன்மொழியப்பட்ட தயாரிப்பு, தாய் நாட்டைத் தவிர **05** வெவ்வேறு நாடுகளில் நிறுவப்பட்டிருத்தல் வேண்டும்.
   - n. தெரிவு செய்யப்படும் மனுதாரரால் நிறுவல், பராமரிப்பு மற்றும் துணை சேவைகளுக்கான **திறமையான தொழில்முறை தொழில்நுட்ப ஊழியர்களைக்** கொண்டிருக்க வேண்டும்.
   - o. மனுதாரர் நாடளாவிய ரீதியில் உள்ள DRP அலகுகளுக்கு அல்லது கொள்வனவளார்களின் இடத்திற்கு தேவையான தொடர்ச்சியான சேவைகளை **(24 மணிநேரம் மற்றும் 365 நாட்கள்)** வழங்கும் திறனைக் கொண்டிருக்க வேண்டும்.
   - p. கடந்த **பத்து ஆண்டுகளில் (10) (2015-2024)** மனுதாரர் எதேனும் வழக்குகள் தொடர்பான தகவல்கள் இருப்பின் அவற்றை முன்வைக்க வேண்டும்.
   - q. **கடந்த (10) பத்து ஆண்டுகளில் (2015-2024)** மனுதாரர் அல்லது அதன் துணை நிறுவனங்கள் அல்லது இணைந்த நிறுவனங்கள் எந்தவொரு அரசாங்க நிறுவனத்தாலும் கறைநிரைப் பட்டியலில் இடம்பெற்றிருக்ககூடாது.
5. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **2024.07.12** ஆம் திகதியிலிருந்து **2024.07.31** ஆம் திகதி வரை காரியாலய வேலை நாட்களில் **09.00** மணியிலிருந்து **03.00** மணி வரையான காலப்பகுதியினுள் மீளச்செலுத்தப்படாத **ரூபா.30,000.00** கட்டணத்தை செலுத்தி **செயற்திட்டப் பணிப்பாளர், e-NIC செயற்திட்டம், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், "B" பகுதி, 10 ஆம் மாடி, ஸ்ரீ சுபூதிபுர வீதி, சுஹுருபாய, பத்தரமுல்லை** காரியாலயத்தில் எழுத்து மூல விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும். கட்டணத்தை பணமாக செலுத்துதல் அவசியமாகும்.
6. மனுவிற்கு முந்தைய கூட்டம் **2024.07.18** அன்று **பி.ப 02.30** மணிக்கு **e-NIC செயற்திட்டம்,ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், "B" பகுதி, 10 ஆம் மாடி, ஸ்ரீ சுபூதிபுர வீதி, சுஹுருபாய, பத்தரமுல்லை** கேட்போர் கூடத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள அனைத்து ஏலதாரர்களும் முன் ஏல கூட்டத்தில் பங்கேற்கலாம்.
7. பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களை **இரண்டு பிரதிகளுடன் (அசல் மற்றும் நகல்) 2024.08.01 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு முன்** பந்தி 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்திற்கு கிடைக்கப்பெறுமாறு மனுக்களை அனுப்ப வேண்டும். அல்லது **e-NIC செயற்திட்டம், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், "B" பகுதி, 10 ஆம் மாடி, ஸ்ரீ சுபூதிபுர வீதி, சுஹுருபாய, பத்தரமுல்லை** எனும் முகவரியில் மனுக்களை சேகரிப்பதற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இட வேண்டும். மனுக்கள் **91 நாட்கள்** வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
8. ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் ஆகியவை தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். அனைத்து மனுக்களுடனும் இலங்கையில் செயல்படும் ஏதேனுமொரு உரிமம் பெற்ற வணிக வங்கியினால் வழங்கப்படும் **ரூபா.2,800,000/- (இருபத்தி எட்டு இலட்சம் ரூபாய்) காப்புறுதிப்பிணையுடன்** இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

தலைவர்,
திணைக்களத்தின் கொள்முதல் குழு,
**e-NIC செயற்திட்டம், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம்,**
"B" பகுதி, 10 ஆம் மாடி,
சுஹுருபாய, ஸ்ரீ சுபூதிபுர வீதி,
பத்தரமுல்லை.

SELACINE

# இந்திய கிரிக்கெட் அணியின் புதிய பயிற்சியாளராக காம்பீர் நியமனம்



இந்திய கிரிக்கெட் அணியின் அடுத்த தலைமை பயிற்சியாளராக 42 வயது முன்னாள் வீரர் கௌதம் காம்பீர் நியமிக்கப்பட்டுள்ளார்.

டி20 உலகக் கிண்ணப் போட்டி முடிந்த பின்னர் பயிற்சியாளர் பதவியில் இருந்து ராகுல் டிராவிட் விலகிய நிலையிலேயே இந்திய கிரிக்கெட் வரலாற்றில் இளம் பயற்சியாளராக காம்பீர் நியமிக்கப்பட்டுள்ளார்.

தனது குடும்பத்துடன் அதிக நேரத்தை செலவிடப்போவதாகக் கூறியே டிராவிட் உலகக் கிண்ணத்தை வென்ற பின் பயிற்சியாளர் பதவியில் இருந்து விலகியதோடு, அவரது சக ஆரம்ப துடுப்பாட்ட வீரராக இருந்த வி.வி.எஸ். லக்ஷ்மன் பயிற்சியாளர் பதவிக்கு அதிக வாய்ப்பு இருந்தபோதும் தேசிய கிரிக்கெட் அகடமியில் தொடர்ந்து பணியாற்றப்போவதாக குறிப்பிட்டதை அடுத்தே காம்பீருக்கு வாய்ப்பு ஏற்பட்டது.

இதனை அடுத்து காம்பீர் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டுள்ளார். இது குறித்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை செயலாளர் ஜெய் ஷா, எக்ஸ் சமூக தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி பயிற்சியாளராக காம்பீரின் முதல் பணியாக இந்திய அணியின் இலங்கை சுற்றுப்பயணம் அமையவுள்ளது. இந்த மாத கடைசியில் இலங்கை வரும் இந்திய அணி இலங்கைக்கு எதிராக மூன்று ஒருநாள் மற்றும் மூன்று டி20 போட்டிகளில் ஆடவுள்ளது.

இந்திய அணி கடந்த வருடம் நடந்த உலக டெஸ்ட் சம்பியன்சிப் மற்றும் ஒருநாள் உலகக் கிண்ணப் போட்டியில் இறுதிப் போட்டிவரை முன்னேறி இந்த ஆண்டு நடைபெற்ற டி20 உலகக் கிண்ணத்தை வென்று திறமையை வெளிப்படுத்தி வரும் நிலையிலேயே காம்பீர் பயிற்சியாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் பதவி விளையாட்டு உலகில் மதிப்பு மற்றும் அதிகாரம் மிக்க பொறுப்புகளில் ஒன்றாக கருதப்படுவதோடு வருடத்திற்கு ஒரு மில்லியன் டொலருக்கு அதிகமான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைக் கொண்டதாக உள்ளது.

இந்திய கிரிக்கெட் அணியின் புதிய தலைமை பயிற்சியாளர் மூன்று வகை கிரிக்கெட்டுக்கும் பொறுப்பாக 2027 டிசம்பர் வரை மூன்றரை ஆண்டுகளுக்கு நியமிக்கப்படுவார் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை முன்னதாக அறிவித்திருந்தது.

## குறுந்தூர ஓட்டத்தில் தானிஷ் மூன்று தங்கம்

அக்கரைப்பற்று வடக்கு
தினகரன் நிருபர்



தேசிய விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான மாகாண விளையாட்டு விழாவில் அக்கரைப்பற்று அஸ் ஸிறாஜ் மகா வித்தியாலயத்தின் என். தானிஷ் அஹமட் குறுந்தூர ஓட்டப்போட்டிகளில் மூன்று தங்கங்களை வென்றுள்ளார்.

மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் கடந்த திங்கள் (08) மற்றும் செவ்வாய் (09) தினங்களில் நடைபெற்ற இந்த விளையாட்டுப் போட்டியில் ஆண்களுக்கான 100, 200 மற்றும் 100 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டிகளில் அவர் முதலிடம் பெற்றார். இதன்மூலம் அவர் தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளார்.

## அல்தாஜ் மகா வித்தியாலயம் மாகாண மட்டத்திற்கு தகுதி

தோப்பூர்
குறூப் நிருபர்



மூதூர் வலய பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் ஜின்னா நகர் தோப்பூர் அல்தாஜ் மகாவித்தியாலயம் முதலிடம் பெற்று மாகாண மட்டத்திற்கு முதற்தடவையாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை கிளிவெட்டி மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் அல்தாஜ் மகாவித்தியாலயம் பட்டித்திடல் மகா வித்தியாலத்தினை வீழ்த்தி முதலிடம் பெற்றது.

## உக்ரைனுக்கு ஆயுதங்களை குவிக்க ஜோ பைடன் உறுதி



அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உக்ரைனுக்குக் கூடுதல் வான் பாதுகாப்பு ஆயுதங்களை வழங்கவிருப்பதாக அறிவித்துள்ளார்.

நேட்டோ கூட்டணியின் 75ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு வொஷிங்டனில் உச்சநிலைச் சந்திப்பு நடைபெறுகிறது.

அதில் ஆரம்ப உரையாற்றிய பைடன், அமெரிக்காவுடன் ஜெர்மனி, நெதர்லாந்து, ருமேனியா, இத்தாலி ஆகிய 4 நட்பு நாடுகளும் பட்ரொயிட் ரக ஏவுகணைகள் உள்ளிட்ட ஆயுதத் தொகுதியை உக்ரைனுக்கு வழங்கவிருப்பதாக உறுதிகூறினார்.

இன்னும் சில மாதங்களுக்குப் பின் அமெரிக்கா கூடுதல் வான் பாதுகாப்பு ஆயுதங்களை உக்ரைனுக்கு வழங்கவுள்ளது. பிரிட்டன், கனடா, நார்வே, ஸ்பெயின் ஆகியவையும் சேர்ந்து ஆயுதங்கள் வழங்கும்.

உக்ரைனிய அதிகாரிகள் நேற்று தான் கூடுதல் வான் பாதுகாப்பு ஆயுதங்கள் தேவைப்படுவதாகக் கேட்டுக்கொண்டனர்.

ரஷ்யா அண்மையில் நடத்திய தாக்குதலில் சிறார் மருத்துவமனை ஒன்று பாதிக்கப்பட்ட நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

கடந்த திங்கட்கிழமை உக்ரைனின் பல பகுதிகளிலும் நடத்தப்பட்ட சரமாரி தாக்குதல்களில் சுமார் 43 பேர் கொல்லப்பட்டனர். இதற்கு பொறுப்பேற்க ரஷ்யா மறுத்தபோதும் இது ரஷ்யா பாய்ச்சிய ஏவுகணைகளாக இருக்க அதிக சாத்தியம் உள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை குறிப்பிட்டுள்ளது.

உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலன்ஸ்கி, மேற்குலக நட்பு நாடுகளிடம் பல மாதங்களாக வான் பாதுகாப்பு ஆயுதங்களை கோரி வருகின்றனமை குறிப்பிடத்தக்கது.

## சம்சுங் நிறுவன ஊழியர் வேலை நிறுத்தம் நீடிப்பு



தென் கொரியாவில் உள்ள சம்சுங் இலக்ட்ரோனிக்ஸ் தொழிற்சங்க ஊழியர்கள் கால வரையறை இன்றி வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

சம்பளத்தை உயர்த்தித் தர வேண்டுகோள் விடுத்து கிட்டத்தட்ட 30,000 ஊழியர்கள் கடந்த திங்கட்கிழமையிலிருந்து 3 நாள் வேலை நிறுத்தத்தில் இறங்கியுள்ளனர்.

சம்சுங் இலக்ட்ரோனிக்ஸ் நிர்வாகம் இதுவரை எந்தவிதச் சமரசப் பேச்சையும் நடத்தாததால் கால வரையறை இன்றிப் போராட்டத்தைத் தொடரப் போவதாக ஊழியர்கள் அறிவித்தனர்.

உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாக அவர்கள் கூறினர். எனினும் சம்சுங் நிறுவனம் உற்பத்தியில் எந்தப் பாதிப்பும் இல்லை என்று குறிப்பிட்டுள்ளது.

ஊழியர்களின் போராட்டம் குறித்து நிறுவனம் எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை.

## சர்வதேச செய்திகள்

# காசாவில் 4 நாட்களுக்குள் நான்காவது பாடசாலை மீது தாக்குதல்: 30 பேர் பலி

## புதிய போர் நிறுத்தப் பேச்சுவார்த்தை ஆரம்பம்

தெற்கு காசாவில் 30 பேர் கொல்லப்பட்டு இடம்பெயர்ந்த மக்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் மற்றொரு பாடசாலை மற்றும் பல இடங்களிலும் இஸ்ரேல் தாக்குதல்களை தீவிரப்படுத்தி இருக்கும் நிலையில் கட்டார் தலைநகர் டோஹாவில் புதிய சுற்று போர் நிறுத்தப் பேச்சுவார்த்தை நேற்று (10) ஆரம்பமானது.

கான் யூனிஸ் நகரின் கிழக்கே உள்ள அப்பாசான் பகுதியில் அல் அவுதா பாடசாலை மீதே இஸ்ரேல் நேற்று முன்தினம் வான் தாக்குதல் நடத்தியது. இதில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் பலர் கொல்லப்பட்டதோடு மேலும் 53 பேர் காயமடைந்திருப்பதாக பலஸ்தீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தப் பாடசாலை முற்றவெளியில் இளைஞர்கள் கால்பந்து ஆடிக்கொண்டும் பலர் அதனை பார்த்துக் கொண்டிருந்த நேரமே இந்தத் தாக்குதல் இடம்பெற்றிருப்பது அங்கு எடுக்கப்பட்ட படங்கள் காட்டுகின்றன.

இந்தத் தாக்குதலில் பல உறவினர்களையும் இழந்ததாக பலஸ்தீன சிறுவன் ஒருவன் அல் ஜஸீரா செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளான். 'நாம் இருந்து கொண்டிருக்கும்போது ஏவுகணை விழுந்து அனைத்து அழிந்தன. எனது மாமா, ஒன்றுவிட்ட சகோதரர்கள் மற்றும் உறவினர்களை இழந்தேன்' என்றான்.

கான் யூனிஸில் மக்களை வெளியேறும் இஸ்ரேலின் புதிய உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. தாக்குதலுக்கு இலக்கான பாடசாலையில் பெரும் எண்ணிக்கையானோர் தங்கி இருந்ததாகக் கூறப்படுகிறது.

காசாவில் கடந்த சனிக்கிழமை தொடக்கம் தொடர்ந்து நான்கு நாட்களாக இடம்பெயர்ந்த மக்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் நான்கு வெவ்வேறு பாடசாலைகள் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் 50க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடக்கில் உள்ள காசா நகரில் இஸ்ரேலிய டாங்கிகள் தொடர்ந்து முன்னேறி வரும் நிலையில் அங்குள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களை தேடி வெளியேறி வருவதோடு தெற்கில் எகிப்து எல்லையை ஒட்டிய ரபா நகரில் இஸ்ரேலின் படை நடவடிக்கை தொடர்ந்து இடம்பெற்று வருகிறது.

மத்திய காசாவின் சலாஹ் அல் தீன் வீதியில் உள்ள வீடு ஒன்றின் மீது நேற்று நடத்தப்பட்ட தாக்குதலில் நால்வர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டது. அதேபோன்று கான் யூனிஸ் நகரின் பனீ அல் சுல்தான் பகுதியில் வீடு ஒன்றை இலக்கு வைத்து நடத்தப்பட்ட வான் தாக்குதலில் மேலும் இருவர் கொல்லப்பட்டனர்.

காசா நகரின் டெல் அல் ஹவா, ஷஜையா மற்றும் சப்ரா பகுதிகளில் முன்னேறி வரும் இஸ்ரேலிய டாங்கிகள் வீதிகள் மற்றும் கட்டடங்கள் மீது செல் குண்டுகளை வீசுவதாகவும் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி வருவதாகவும் குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். காசா நகரின் கிழக்கு மற்றும் மேற்கின் பல பகுதிகளில் இருந்து மக்களை வெளியேறும்படி இஸ்ரேல் இராணுவம் உத்தரவிட்ட நிலையிலேயே அங்கு தாக்குதல்கள் உக்கிரமடைந்துள்ளன.

இந்நிலையில் காசா நகரில் இருந்து மக்கள் வெளியேறுவதற்கான பாதையை காட்டும் வரைபடம் ஒன்றைக் கொண்ட துண்டுப் பிரசுரத்தை இஸ்ரேல் போட்டுள்ளது. அதில் குறிப்பிட்ட பகுதிகள் அன்றி ஒட்டுமொத்த நகரில் இருந்தும் மக்கள் வெளியேறுவதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இங்குள்ள மக்கள் இரு வழிகள் ஊடாக மத்திய காசாவை நோக்கிச் செல்ல அறிவுறுத்தப்பட்டுள்ளது.

காசா நகரில் இருந்து பல டஜன் அவசர அழைப்புகள் கிடைத்தபோதும் அங்கும் கடுமையாக குண்டு வீசப்பட்டு வருவதால் அவர்களுக்கு உதவ முடியாதுள்ளது என்று பலஸ்தீன செம்பிறை சங்கம் நேற்று பேஸ்புக்கில் குறிப்பிட்டிருந்தது.

காசா நகர முன்னரங்குகளில் இருக்கும் ஹமாஸ் ஆயுதப் பிரிவு மற்றும் இஸ்லாமிய ஜிஹாத் அமைப்புகள், இயந்திர துப்பாக்கிகள், மோட்டார் குண்டுகள் மற்றும் டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகள் கொண்டு போராடி வருவதாகவும் இஸ்ரேலிய படையினர் பலரை கொன்று மற்றும் காயப்படுத்தியதாகவும் குறிப்பிட்டுள்ளது.



தமது தரப்பு உயிரிழப்புகள் பற்றி விரிவாக குறிப்பிடாதபோதும் மத்திய காசாவில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற மோதல் ஒன்றில் 21 வயதான படைவீரர் ஒருவர் கொல்லப்பட்டதை அந்த இராணுவம் உறுதி செய்துள்ளது.

காசாவில் போர் வெடித்தது தொடக்கம் காசா மற்றும் எல்லைப் பகுதிகளில் 324 இஸ்ரேலிய படையினர் கொல்லப்பட்டிருப்பதாக இஸ்ரேலிய இராணுவ அதிகாரிகளை மேற்கோள்காட்டி ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. காசா போரில் மேலும் 2,097 இஸ்ரேலிய படையினர் காயமடைந்திருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஒன்பது மாதங்களுக்கு மேலாக இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 38,200 ஐ தாண்டியுள்ளதோடு 88,000க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.



காசா வட்டாரம் முழுவதுக்கும் பஞ்சம் பரவியிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை கூறியுள்ளது.

வடக்குப் பகுதி மட்டுமல்லாமல் காசா வட்டாரத்தின் தென் பகுதியிலும் பஞ்சம் ஏற்பட்டிருக்கும் அறிகுறிகள் இருப்பதாக நிறுவனத்தின் வல்லுநர்கள் கூறினர்.

காசாவின் வடக்குப் பகுதியில் குறைந்தது 33 பிள்ளைகள் ஊட்டச்சத்து குறைபாட்டால் உயிரிழந்ததாக உள்ளூர் அதிகாரிகள் கூறினர். அண்மைக்காலம் வரை அங்கு தான் அதிகச் சண்டை ஏற்பட்டது. கடந்த மே மாதத்திலிருந்து காசாவின் தென் பகுதிக்கும் சண்டை பரவியுள்ளது.

அங்கு 3 பிள்ளைகள் ஊட்டச்சத்து குறைபாட்டால் உயிரிழந்ததாக ஐக்கிய நாடுகள் சபை கூறியது.

'காசாவின் மத்திய பகுதியில் அவர்கள் மருத்துவ உதவி பெற்றிருந்தனர். சிகிச்சை பலன் இல்லாமல் பிள்ளைகள் பட்டினியால் உயிரிழந்தனர். பஞ்சம் பரவியுள்ளது என்பதில் சந்தேகம் இல்லை' என்று நிபுணர்கள் கூறினர்.

காசா மக்களைப் பட்டினியில் வைக்க இஸ்ரேல் திட்டமிடுகிறது என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

### டோஹாவில் பேச்சு

காசாவில் போரை முடிவுக்குக் கொண்டுவந்து பணயக்கைதிகளை விடுவிக்கும் புதிய முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் சூழலிலேயே இஸ்ரேல் தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளது. இஸ்ரேலின் இந்தத் தாக்குதல்கள் போர் நிறுத்த பேச்சுவார்த்தையை சீர்குலைக்கச் செய்யும் என்று ஹமாஸ் அமைப்பு ஏற்கனவே எச்சரிக்கை விடுத்துள்ளது.

எவ்வாறாயினும் டாஹாவில் நேற்று ஆரம்பமான புதிய சுற்று பேச்சுவார்த்தையில் எகிப்து, அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் உளவுப் பிரிவுத் தலைவர்கள் பங்கேற்றுள்ளனர். இதில் கூடிய விரைவில் போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதற்கு ஹமாஸ் மற்றும் இஸ்ரேல் இடையே கருத்தொருமையை பெறுவதற்கு உளவுப் பிரிவுத் தலைவர் அப்பாஸ் கமால் தலைமையிலான எகிப்து பாதுகாப்பு தூதுக்குழு டோஹா சென்றிருப்பதாக அல் கஹ்ரா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

பல விடயங்களில் இணக்கம் எட்டப்பட்டிருப்பதாகவும் பேச்சுவார்த்தைகள் இன்று கெய்ரோவுக்கு திரும்பவிருப்பதாகவும் அந்த செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இஸ்ரேலிய உளவுப் பிரிவுத் தலைவர் டேவிட் பர்னீயும் இந்தப் பேச்சுவார்த்தையில் பங்கேற்றுள்ளார். எனினும் இது தொடர்பில் பதில் அளிக்க இஸ்ரேலிய பிரதமர் அலுவலகம் மறுத்ததாக ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை கெய்ரோவில் எகிப்து ஜனாதிபதி அப்தல் பத்தா அல் சிசியுடன் பேச்சுவார்த்தை நடத்திய அமெரிக்க மத்திய உளவுப் பிரிவு தலைவர் வில்லியம் பர்ன்ஸ், டோஹா சென்று போர் நிறுத்தப் பேச்சுவார்த்தையில் பங்கேற்றுள்ளார்.

ஒரு வருடத்தை நெருங்கும் காசா போரில் எகிப்து மற்றும் கட்டார் தொடர்ந்து மத்தியஸ்த முயற்சியில் ஈடுபட்டு வருகின்றன. போர் நிறுத்த திட்டத்தில் ஹமாஸ் கடந்த வாரம் தனது நிலைப்பாட்டில் சில சமரசங்களைச் செய்துகொள்ள முன்வந்தது.

எனினும் போர் நிறுத்த உடன்பாடு ஒன்று எட்டப்பட்டாலும் ஹமாஸை ஒழிக்கும் போரின் இலக்கு நிறைவேறும் வரை போரை தொடர்வதற்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நிதன்யாகு உறுதியாக உள்ளார்.

காசா நகரில் புதிய போர் நடவடிக்கையை மேற்கொண்டது உட்பட நெதன்யாகு போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைக்கு மேலும் இடையூறுகளைச் செய்து வருவதாக ஹமாஸ் அமைப்பு குற்றம்சாட்டியுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜூலை மாதம் 11ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

WATERS EDGE

# விலைமனுக்களுக்கான அழைப்பு

பின்வரும் செயற்றிட்டங்களுக்காக ஆர்வமுள்ள தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை வோட்டர் எட்ஜ் லிமிடெட்டின் சார்பாக பெறுகைக் குழுவின் தலைவர் கோருகின்றார்.

| ஒப்பந்த இலக்கம் | விலைக்கோரல் தலைப்பு | தகுதி மூலப்பிரமாணம் | விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் |
|---|---|---|---|
| WE/PUR/MBT/2024/23 | பத்தரமுல்ல, வோட்டர் எட்ஜ் லிமிடெட் - துனபஹ ரெஸ்டூரன்ட்டிற்கு Monsoon Blinds வழங்குதல் மற்றும் நிறுவுதல்<br>**மதிப்பீட்டுச் செலவு -** 4.5 மில்லியன் இல. ரூபா | கட்டிட நிர்மாணத் துறைக்காக நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் பதிவு -<br>தரம் C6 அல்லது அதற்கு மேல்<br>அல்லது<br>விசேட நிர்மாண ஒப்பந்தக்காரர்கள் - தரம் SP3 அல்லது அதற்கு மேல்<br>அல்லது<br>பொருத்தமான வியாபாரப் பதிவைக் கொண்ட ஒப்பந்தக்காரர்கள் | திகதி: 2024 ஜுலை 17<br>நேரம்: பி.ப. 2.30<br>இடம்: வோட்டர் எட்ஜ் லிமிட்டெட், பத்தரமுல்ல |
| WE/PUR/GDS/2024/22 | பத்தரமுல்ல, வோட்டர் எட்ஜ் லிமிடெட் - ரெஸ்டூரன்ட் மற்றும் சமையலறைக்கு எரிவாயு கசிவை கண்டுபிடிக்கும் முறைமையை (LP Gas Leak Detection System) வழங்குதல் மற்றும் நிறுவுதல்<br>**மதிப்பீட்டுச் செலவு -** 2.6 மில்லியன் இல. ரூபா | மின்சாரம் மற்றும் இயந்திரவியல் சேவைகள் (EM) எரிவாயு முறைமைகள் (LPG) - EM5 அல்லது அதற்கு நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் பதிவு<br>பொருத்தமான வியாபாரப் பதிவைக் கொண்ட ஒப்பந்தக்காரர்கள் | திகதி: 2024 ஜுலை 17<br>நேரம்: பி.ப. 3.30<br>இடம்: வோட்டர் எட்ஜ் லிமிட்டெட், பத்தரமுல்ல |

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை பத்தரமுல்ல, இல. 316, எத்துள் கோட்டே வீதி, வோட்டர் எட்ஜ் லிமிடெட், பெறுகை திணைக்களம், பெறுகை முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 0112863863, 0112887050 மற்றும் 2024 ஜுலை 11ஆம் திகதி முதல் 2024 ஜுலை 23ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் விலைமனு ஆவணங்களை (இலவசமாக) பரீட்சித்துப் பார்க்கலாம்.

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத 3,000.00 ரூபா கட்டணத்தை செலுத்தியதன் பின் வோட்டர் எட்ஜ் லிமிடெட்டின் நிதிப் பிரிவிலிருந்து விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள நாம் அன்புடன் அழைக்கின்றோம்.

| | |
|---|---|
| **விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளல்** | 2024 ஜுலை 11 முதல் 2024 ஜுலை 23ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 மணிக்கிடையில். |
| **விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் திகதி** | 2024 ஜுலை 24ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு |

**தலைவர், பெறுகைக் குழு,**
**வோட்டர் எட்ஜ் லிமிடெட்,**
**இல. 316, எத்துள் கோட்டே வீதி, பத்தரமுல்ல.**

# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா.)

(மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக, வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு – மேல் மாகாணம்)

## படல்கம பஸ் நிலையத்தின் கூரையை மூடுவதற்குத் தேவையான பொருட்களை வழங்குதல்

**கேள்வி இலக்கம் : PRDA/WP/PRO/2024/41**

இவ் அதிகார சபையின் கீழ்க்காணும் கொள்வனவுகளை மேற்கொள்வதற்கு இவ்வாறான வழங்கல்கள் மேற்கொள்ளப்படும், அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து திறந்த கேள்விகள் கோரப்படுகின்றன.

| உருப்படி இல. | வேலை விபரம் | அலகு | அளவு | கேள்விப்பிணை காசாக (ரூ.) | கேள்விப்பிணை (வங்கி / இன்சூரன்ஸ்) (ரூ.) |
|---|---|---|---|---|---|
| 01. | Supply 0.47mm thick Zinc alum profile roofing colour sheets in following sizes. (Colour- Coffee Brown) | Nos | | 16,500.00 | 33,000.00 |
| | Length -21'-06" , Width – 02'-06" | Nos | 78 | | |
| | Length -18'-06" , Width – 02'-06" | Nos | 12 | | |
| | Length -15'-00" , Width – 02'-06" | Nos | 6 | | |
| | Length -14'-06" , Width – 02'-06" | Nos | 6 | | |
| | Length -11'-06" , Width – 02'-06" | Nos | 18 | | |
| | Length -13'-06" , Width – 02'-06" | Nos | 27 | | |
| | Length -10'-06" , Width – 02'-06" | Nos | 6 | | |
| | Length -09'-00" , Width – 02'-06" | Nos | 6 | | |
| | Length -08'-00" , Width – 02'-06" | Nos | 12 | | |
| | Length -06'-06" , Width – 02'-06" | Nos | 6 | | |
| | Length -05'-06" , Width – 02'-06" | Nos | 6 | | |
| 02. | Supply 0.47mm thick and 610mm girth Zinc alum standard colour ridge cap – (Length 10'-0" Lft, Colour- Coffee Brown | Nos | 27 | | |
| 03. | Supply 0.47mm thick and 610mm girth Zinc alum colour valley gutter. – (Length 10'-0" Lft, Colour- Coffee Brown | Nos | 9 | | |

02. இதற்கான கேள்வி ஆவணத் தொகுதியை 2024.07.11 முதல் 2024.07.25ம் திகதி வரைவார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை மேற்படி கேள்விப் படிவக் கட்டணம் ரூ.1209.50 இற்கு உட்பட்டு இவ் அதிகார சபையின் பெறுகைப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணை முறியை காசாக அல்லது வங்கிப் பிணை முறி மூலம் பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக மேற்படி பெறுமதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கேள்விகள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி 2024.07.26 மு.ப. 10.30 ஆவதுடன் கேள்விகள் திறத்தல் அவ்வேளையிலேயே இவ் அலுவலகத்தில் இடம்பெறும். அவ்வேளையில் வழங்குநர்களுக்கு அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா.),**
**இல. 59, சென். செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு -12.**

**தொ.பே. இல .: 011 - 4849845**


Trusted Marketplace of Classified Advertisers

Sunday Observer adz it's what you want Classified



Tuition Vehicle Employment Photo Classifieds Miscellaneous House/ Land Rent or Lease Wanted

For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-

077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk

Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361


# தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை

## பதவி வெற்றிடங்கள்

தேசிய மருந்துகள் ஒழுங்குப்படுத்தல் அதிகார சபையின் பின்வரும் வெற்றிடங்களுக்கு தகைமை வாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்தப் பதவிகள் நிரந்தரமானவை. ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புச் செய்யும் பதவிகளாகும் என்பதுடன் இடமாற்றங்கள் பெற முடியாதவையாகும். தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை கொழும்பில் மட்டுமே அமைந்துள்ளது என்பதுடன் வேறு கிளைகள் இல்லையென்பதால் இடமாற்றங்கள் அற்றதாகும்.

**01. மருந்து பகுப்பாய்வாளர் (வெற்றிடங்களின் எண்ணிக்கை 15)**

**தகைமைகள்**:

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் இரசாயனவியல் / நுண்ணுயிரியல் / மூலக்கூறு உரியியல் / உயிரியல் / உயிர் இராசாயனவியல் / மருந்தியல் / பௌதீகவியல் அல்லது பதவியுடன் தொடர்புடைய விடயத்துறையில் வேறு விஞ்ஞானமாணி பட்டமொன்று அல்லது மருந்தியலில் (B Pharm) பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

மற்றும்

மேற்கூறிய தகைமைகளைப் பெற்றுக்கொண்டதன் பின் அரசாங்கம், அரசாங்கக் கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் சட்ட நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் குறைந்தபட்சம் பதவியுடன் தொடர்புடைய விடயத்துறையில் ஒரு (01) வருட கால சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் தகைமைகளில் 1 அல்லது 2)**

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. ''கனிஷ்ட முகாமைத்துவ'' (JM 1-1)சேவை வகுதியில் உதவி மருந்து பகுப்பாய்வாளர் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**வயது:** 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**பதவிக்குரித்தான சம்பள நிலை :** 02/2016ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் பிரகாரம் MM 1-1 ரூபா (53,175 – 10x1,375 – 15x1,910 – 95,575/-) சம்பள அளவில் ஆரம்ப நிலையான 53,175/- ரூபா மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்.

**ஆட்சேர்க்கப்படும் முறை :** திறந்த போட்டிப் பரீட்சை மற்றும் / அல்லது நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் நேர்முகத் தேர்வுக் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

**02. உதவி மருந்து பகுப்பாய்வாளர் (வெற்றிடங்களின் எண்ணிக்கை 25)**

**தகைமைகள்:**

வெளிவாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் தகைமைகளில் 1 அல்லது 2)

1. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் இரசாயனவியல் / நுண்ணுயிரியல் / மூலக்கூறு உரியியல் / உயிரியல் / உயிர் இராசாயனவியல் / மருந்தியல் / பௌதீகவியல் அல்லது பதவியுடன் தொடர்புடைய விடயத்துறையில் வேறு விஞ்ஞானமாணி பட்டமொன்று அல்லது மருந்தியல் இளமாணிப் (Bachelor of Pharmacy) பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.
2. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்பம் / தொழிற் பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தேசிய தொழிற் தகுதி (NVQ) ஆறாம் (06) நிலைக்குக் குறையாத நிலையில் இரசாயனவியல் / நுண்ணுயிரியல் / இரண்டாம் நிலை உயிரியல் / உயிரியல் / உயிர் இராசாயனவியல் / மருந்தியல் / பௌதீகவியல் போன்ற துறைகளில் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

மற்றும்

மேற்கூறிய தகைமைகளைப் பெற்றுக்கொண்டதன் பின் அரசாங்கம், அரசாங்கக் கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் சட்ட நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் குறைந்தபட்சம் மருந்து பகுப்பாய்வு தொடர்பாக ஐந்து (05) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வயது:** 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**பதவிக்குரித்தான சம்பள நிலை:** 02/2016ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் பிரகாரம் JM 1-1 ரூபா (42,600 - 10x755 - 18x1,135 - 70,580) சம்பள அளவில் 2020-01-01ஆம் திகதிக்கு உரித்தான சம்பள நிலை 42,600/- ரூபா மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்.

ஆட்சேர்க்கப்படும் முறை: எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும் / அல்லது நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் நேர்முகத் தேர்வுக் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

**ஏனைய விடயங்கள்:**

சகல விண்ணப்பதாரர்களும்:

i. இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.
ii. பதவிக்கு ஒப்படைக்கப்படும் கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவதோடு நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உளத் தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
iii. சிறந்த நன்னடத்தையுடையவராகவிருத்தல் வேண்டும்.
- அரச, அரை அரச நிறுவனங்களில் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது நிறுவனத்தின் தலைவரின் ஊடாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2024-07-24ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் cv@nmra.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புவதன் மூலம் அல்லது பிரதான நிறைவேற்று அதிகாரி, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை, அரச பொறியியல் கூட்டுத்தாபனக் கட்டிடம், 02ஆம் தளம், இல. 130, W.A.D. ராமநாயக்க மாவத்தை, கொழும்பு-02 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். மின்னஞ்சல் மூலம் அனுப்பும்போது விடயமாக, தபாலில் அனுப்பும்போது கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

**தலைவர்,**
**தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை.**

**தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபை**
**......................................... பதவிக்கான விண்ணப்பப்படிவம்**

1. பிரத்தியேக தகவல்கள்:
   - 1.1 முழுப் பெயர்:
   - 1.2. முதலெழுத்துகளுடன் பெயர்:
   - 1.3. பால்:
   - 1.4 பிறந்த திகதி:
   - 1.5. வயது வருடம்:.................. மாதம்:.................... திகதி:....................
   - 1.6. தேசிய அடையாள அட்டை இலக்கம்:
   - 1.7. தொலைபேசி இலக்கம்: நிலையானது............................ கையடக்க தொலைபேசி:...................
   - 1.8. மின்னஞ்சல் முகவரி:
   - 1.9 முகவரி:
   - 1.10 வசிக்கும் மாவட்டம்:
2. பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்:
3. கல்வித் தகைமைகள்: (கூடிய தகைமையில் இருந்து வரிசைக் கிரமமாக குறிப்பிடவும்)

| தொ. இல. | தகைமைகள் | பல்கலைக்கழகம் / நிறுவனம் | நிறைவு செய்த திகதி / செல்லுபயாகும் திகதி | பாடம் / சித்தி |
|---|---|---|---|---|
| 01. | | | | |
| 02. | | | | |

4. தொழில்சார் தகைமைகள்:

| தொ. இல. | தகைமைகள் | பல்கலைக்கழகம் / நிறுவனம் | நிறைவு செய்த திகதி / செல்லுபயாகும் திகதி | பாடம் / சித்தி |
|---|---|---|---|---|
| 01. | | | | |
| 02. | | | | |

5. அனுபவம்: (தற்போது வகிக்கும் பதவி முதல் வரிசைக் கிரமமாக குறிப்பிடவும்)

| தொ. இல. | பதவி | நிறுவனம் | காலப்பகுதி |
|---|---|---|---|
| 01. | | | |
| 02. | | | |

6. விண்ணப்பதாரர் தொடர்பான தகவல்களை விசாரிக்கக்கூடிய உறவினரல்லாத இரு நபர்களின் பெயர் மற்றும் தொலைபேசி **இலக்கம் மற்றும் முகவரி:**
7. **விண்ணப்பதாரரின் சான்று:**

   இங்கு மேலே தரப்பட்டுள்ள என் தொடர்பான விபரங்கள் எனது அறிவு, விசுவாசத்தின் பிரகாரம் சரியானவை மற்றும் உண்மையானவை என பிரகடனப்படுத்துகின்றேன்.

   **திகதி:.** ........................................................................
   **(விண்ணப்பதாரியின் கையொப்பம்)**

8. அரச, அரச சார்புடைய நிறுவனங்களில் பணியில் உள்ள விண்ணப்பதாரர்களானால் நிறுவனத் தலைவரின் சான்று: இந்த விண்ணப்பதாரராகிய திரு/ திருமதி / செல்வி ........................................................................ தற்போது இந்த நிறுவனத்தில் ................................................. பதவியில் நிரந்தர / தற்காலிக / சமயாசமய பணியாளராக சேவையாற்றுகின்றார் என்பதுடன், அவர் இந்தப் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்க முடியும் என அறியத்தருகிறேன்.

   ........................................................................
   **நிறுவனத் தலைவரின் கையொப்பம்**
   **(உத்தியோகபூர்வ முத்திரை)**

**கவனிக்க வேண்டியது:**

இயைபுடைய மாதிரியின் பிரகாரம் மட்டுமே விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து அனுப்புதல் வேண்டும் என்பதுடன் உங்களின் கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளை உறுதி செய்யும் சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். இந்த மாதிரியின் பிரகாரம் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள், முழுமையற்ற விண்ணப்பங்கள் அல்லது விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளில் தகைமைகளைப் பூர்த்தி செய்திராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## விலைமனுக்கோரல்

### வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கட்டுமானப் பணிகளுக்காக

1. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கொள்முதல் குழுவின் தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிட்டம்புவ நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகத்தினால் நிட்டம்புவ நிறைவேற்று பொறியியலாளர் பிரிவுக்கு உட்பட்ட ஹங்வெல்ல - ஊரபொல வீதியின் 5 கி.மீ. தூண் மற்றும் 6/1 கால்வாய்களுக்கிடையில் வலதுபுறம் வடிகால் அமைப்பதற்காக தகுதியான மனுதாரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றது.

   i. ஒப்பந்த இலக்கம் - **RDA/EE/NIT/TEN/2024/17**

2. மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள பின்வரும் இணையதளங்களை பார்வையிடவும்.
   போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு - **www.mohsl.gov.lk**
   வீதி அபிவிருத்தி அதிகார சபை - **www.rda.gov.lk**

**தலைவர்,**
**கொள்முதல் குழு, தலைமை பொறியியலாளர் அலுவலகம்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**நிட்டம்புவ.**

SELACINE

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்

### 2024ஆம் வருடத்திற்கான அச்சிட்ட மற்றும் அச்சிடப்படாத கணினித் தாள்களை (Printed and Non Printed Computer Papers) வழங்குவதற்கான பெறுகை

### ஒப்பந்த இல. 4/10/02/2024

01. பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள ஆகக் குறைந்த அனுபவத்தைக் கொண்டுள்ள தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள அச்சிட்ட மற்றும் அச்சிடப்படாத கணனித் தாள்களை வழங்கும் பெறுகைக்காக முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார். விலைமனுக்கோரல் ஆவணத்தில் முழுமையான விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

| Lot No. | Type | No. of items in the Lot |
|---|---|---|
| 1. | 5" x 8" I PLY White Bond Two sides with holes Continues Computer Sheets (80±2 GSM) | 10 Packets (1000 sheets per packet) |
| 2. | 9.5" x 12" I PLY White Bond Two sides with holes Continues Computer Sheets (80±2 GSM) | 450 Packets (1000 sheets per packet) |
| 3. | 15" x 12" I V PLY White Bond Two sides with holes Continues Computer Sheets (60±2 GSM) | 30 Packets (1000 sheets per packet |
| 4. | 15" x 12" White Bond Two sides With Holes and Printed Continues Common Admission Sheets (80±2 GSM) | 450 Packets (1000 sheets per packet) |
| 5. | 15" x 12" White Bond Two sides With Holes Printed Continues Admission Sheets A/L (80±2 GSM) | 200 Packets (1000 sheets per packet) |
| 6. | 15" x 12" White Bond Two sides with holes and Printed Continues Results Schedule—A/L (80±2 GSM) | 150 Packets (1000 sheets per packet) |
| 7. | 15" x 12" White Bond Two sides with holes and Printed Continues Attendent Sheets — A/L (80±2 GSM) | 50 Packets (1000 sheets per packet) |
| 8. | 15" x 12" White Bond Two sides with holes Printed Continues Results Register —A/L (80±2 GSM) | 50 Packets (1000 sheets per packet) |
| 9. | 15" x 12" White Bond Two sides with holes and Printed Continues Attendent Sheets — O/L (80±2 GSM) | 60 Packets (1000 sheets per packet) |
| 10. | 15" x 12" White Bond Two sides with holes and Printed Continues Results Schedule - O/L (80±2 GSM) | 200 Packets (1000 sheets per packet) |
| 11. | 15" x 12" White Bond Two sides with holes and Printed Continues Admission Sheets - O/L (80±2 GSM) | 260 Packets (1000 sheets per packet) |
| 12. | 15" x 12" White Bond Two sides with holes and Printed Continues Result Register - O/L (80±2 GSM) | 60 Packets (1000 sheets per packet) |
| 13. | 10.5" x 8" Printed Continues (4 colours) Certificates Paper - (5 Grade scholarship) (100 ± 2 GSM) | 275 Packets (1000 sheets per packet) |

02. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான நடைமுறைகள் (NCB) மூலம் நடாத்தப்படும்.

03. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக எதிர்பார்க்கப்படும் விலைமனுதாரர் தகுதிநீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் இடம்பெறாதவராகவும் இயைபுடைய பொருட்களை வழங்குவதில்/விற்பனை செய்வதில் மூன்று வருட அனுபவத்தையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

04. விலைமனுதாரர் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் பிரகாரம் பொது ஒப்பந்தங்கள் பதிவாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தன்மையிலுள்ள சான்றிதழைக் கொண்டிருத்தல் வேண்டும்.

05. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பரீட்சைகள் திணைக்கள 3ஆம் மாடி வழங்கல் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி: 011-2786200-238 அல்லது 011-2785219) மற்றும் 2024.07.31 ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.

06. 2024.07.31 ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன்னராக மீளளிக்கப்படும் கட்டணமாக ஒவ்வொரு ஆவணத்திற்கும் 6,100.00 ரூபாவைச் செலுத்திய பின்னர் வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றுடன் எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை வழங்கல் பிரிவிலிருந்து ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்திலேயே மேற்கொள்ளல் வேண்டும்.

07. விலைமனுக்கள் 90 நாட்கள் வரையில் (2024.10.30ஆம் திகதி வரை) செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

08. அனைத்து விலைமனுக்களும் இலங்கையில் செயற்படும் கீர்த்தி வாய்ந்த வர்த்தக வங்கியிலிருந்து பெறப்பட்டதும் நிபந்தனையற்ற வங்கி உத்தரவாதமாகவும் விலைமனு ஆவணங்களுடன் இணைக்கப்பட்ட உருமாதிரியின் பிரகாரம் 215,000.00 இலங்கை ரூபாவிற்கானதும் விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் திகதியிலிருந்து 120 நாட்களுக்கு (2024.11.30 ஆம் திகதி வரை) செல்லுபடியாகும் தன்மையிலும் இருத்தல் வேண்டும்.

09. விலைமனுக்கள் 2024.08.01 ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பத்தரமுல்ல, பெலவத்த, பரீட்சைகள் திணைக்களம், 03ஆம் மாடி, வழங்கல் பிரிவிற்கு ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும். விலைமனுக்கள் அவற்றை மூடிய பின்னர் மேலே வழங்கப்பட்டுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

10. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ''2024ஆம் வருடத்திற்கான அச்சடிக்கப்பட்ட மற்றும் அச்சடிக்கப்படாத கணனி தாள்களை வழங்குவதற்கான பெறுகை - ஒப்பந்த இல.: 4/10/2/2024" என குறிப்பிடப்படல் வேண்டும்.

11. பாதிக்கப்பட்ட விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரர்களுக்கு எந்தவொரு பொறுப்பையும் ஏற்படுத்துதல் அல்லது பாதிக்கப்பட்ட விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரர்களுக்கு தெரிவிக்கவேண்டும் என்ற எவ்விதக் கடப்பாடும் இன்றி ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னர் எந்நேரத்திலும் எந்தவொரு முயற்சியையும் ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்கும் அல்லது அனைத்து விலைமனுக்கோரல் செயற்பாட்டை இரத்துச் செய்வதற்கும் எவ்விதக் காரணமும் காட்டாமல் எந்தவொரு விலைமனுவை ஏற்றுக்கொள்ளும் உரிமையை திணைக்களப் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**பரீட்சை ஆணையாளர் நாயகம்,**
**பரீட்சைகள் திணைக்களம்,**
**பெலவத்த, பத்தரமுல்ல.**
**11.07.2024**

## இலங்கை வங்கி

### மீட்கப்படாத அடகு நகைகளின் ஏலவிற்பனை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகளின் பெயர்களுக்கு எதிரேயுள்ள திகதிகள் வரை அடகு வைக்கப்பட்டு அடுத்த கூட்டிற் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகள் வரை மீட்கப்படாதுள்ள நகைகள் அட்டவணையின் இறுதிக் கூட்டில் உள்ள திகதி மற்றும் இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். (ஏலங்கள் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்)

| கிளை | நகைகள் அடகு வைக்கப்பட்டுள்ள காலப்பகுதி | மீட்கப்பட வேண்டிய இறுதித் திகதி | ஏல விற்பனைத் திகதியும் இடமும் |
|---|---|---|---|
| வெள்ளவத்தை மேற்தரக் கிளை<br>கொள்ளுப்பிட்டி மேற்தரக் கிளை<br>பம்பலப்பிட்டி மேற்தரக் கிளை<br>யூனியன் பிளேஸ்<br>நகரக் கிளை (சிற்றி ஒவ்விஸ்)<br>பொரளை மேற்தரக் கிளை<br>றீஜென்ட் ஸ்ட்ரீட் மேற்தரக் கிளை<br>சுதந்திர சதுக்கம்<br>திம்பிரிகஸ்யாய<br>ஹைட்பாக்<br>மிலாகிரிய<br>புதுக்கடை (ஹல்ப்ட்ஸ்ட்ரொப்)<br>மருதானை | 2023.04.26 வரை (12 மாதங்களுக்கு) அடகு வைக்கப்பட்ட நகைகள் | 2024.07.26 | 2024.07.27 நகரக் கிளை |
| பிரதான வீதி (மெயின் ஸ்ரீட்)<br>கொட்டாஞ்சேனை<br>லேக்வியூ<br>தெமட்டகொட<br>கிராண்ட்பாஸ்<br>கொழும்பு தங்க நிலையக் கிளை<br>மத்திய பேருந்து நிலையக் கிளை<br>பொரளை இரண்டாம் கிளை<br>லேக் ஹவுஸ் கிளை<br>பழைய சோனகத் தெரு கிளை<br>கொள்ளுப்பிட்டி இரண்டாம் கிளை<br>நாரஹன்பிட்ட<br>விசாகா<br>கிருலப்பனை<br>லங்கா ஹொஸ்பிட்டல் கிளை | 2023.10.26 வரை (06 மாதங்களுக்கு) அடகு வைக்கப்பட்ட நகைகள் | | |

மேற்குறித்த ஏலங்களை இரத்துச் செய்யவும், பிற்போடவும், ஒன்றிணைக்கவும் உரிமை இலங்கை வங்கிக்கு உரிமை உண்டு.

**இலங்கை வங்கி**
**பிரதிப் பொது முகாமையாளர்**
**அபிவிருத்தி வங்கியியல் மற்றும் கிளைக் கடன் செயற்பாடுகள் - பிரிவு II**
**தலைமை அலுவலகம்,**
**கொழும்பு 01**
**தொலைபேசி – 011 2399568 / 011 2204545**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch Rating, AAA Brand Finance Rating.
Bank of Ceylon is a Licensed Commercial Bank supervised by the Central Bank of Sri Lanka.
Head Office, BOC Square, No.1, Bank of Ceylon Mawatha, Colombo 1.
BANK OF CEYLON BOC Bankers to the Nation

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### பத்தரமுல்ல, பெலவத்தையிலுள்ள இலங்கை பரீட்சைகள் திணைக்களம்
### நிதியிடல் - இலங்கை அரசாங்கம்

### பாடசாலை பரீட்சைகள் கிளையிலுள்ள களஞ்சிய அறையின் புதுப்பித்தல் வேலைகள்

### ஒப்பந்த இல. 4/2/4/2023

1. மதிப்பீட்டுச் செலவாக 8.43 மில்லியன் ரூபாவைக் கொண்டதும் மற்றும் பரீட்சைகள் திணைக்களத்தின் பாடசாலை பரீட்சைகள் கிளையிலுள்ள களஞ்சிய அறையின் புதுப்பித்தல் வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பத்தரமுல்ல, பெலவத்த, இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் சார்பாக திணைக்கள மேல்நிலை பெறுகைக் குழுவின் தலைவர் கோருகின்றார்.
2. வேலையின் நோக்கத்தில் தகர்த்தல் வேலைகள், பகுதிபிரிப்பு, தரை மற்றும் சுவர் முடிவுறுத்தல்கள், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு, மின்சார நிறுவல்கள். இன்னும் பல உள்ளடங்கியுள்ளன மற்றும் மொத்த நிர்மாணக் காலம் 60 நாட்காட்டி நாட்களாகும்.
3. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் ஊடாக விலைமனுக்கள் கோரப்படும்.
4. ஒப்பந்தத்தைக் கையளிக்கப்பெறுவதற்கான தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர்கள் தகுதிநீக்கம் செய்யப்பட்டோர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் C6 மற்றும் C7 தரப் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
5. ஒப்பந்தத்தைக் கையளிக்கப்பெறுவதற்கான தகைமை பெறுவதற்கான தகைமைத் தேவைப்பாடுகளில் பின்வரும் மூலப்பிரமாணங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.
   அ) ஆகக்குறைந்த திரவச் சொத்துக்கள் மற்றும் / அல்லது கடன் வசதிகளாக தேறிய ஏனைய நிர்மாணக் கடப்பாடுகள் மற்றும் ஏதாவது முற்பணக் கொடுப்பனவுகள் தவிர்த்து இந்த ஒப்பந்தத்திற்கான தொகை 02 மில்லியன் ரூபாவிற்குக் குறையாமல் இருக்க வேண்டும். (மொத்த வேலையின் 20%)
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்கள் மற்றும் இலவசமான விலைக்கோரல் ஆவணங்களைப் பரீட்சித்தல் என்பவற்றை பின்வரும் முகவரியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான வேலை நேரங்களில் மேற்கொள்ளலாம். (தொலைபேசி: 011-2785219 / 011-2784393 தொலைநகல்: 011-2785219)
7. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஒரு ஆவணத்திற்காக மீளளிக்கப்படாத கட்டணமாக 2,500.00 ரூபாவை (இரண்டாயிரத்து ஐந்நூறு இலங்கை ரூபா மட்டும்) செலுத்தியதன் பின் 2024-07-11ஆம் திகதி முதல் 2024-07-31ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பத்தரமுல்ல, பெலவத்த, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், 'A' கட்டிடம், 03ஆம் தளம், உதவி ஆணையாளர் (வழங்கல்) அவர்களுக்கு எழுத்து மூலமான விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். (கொடுப்பனவு முறை ரொக்கப் பணமாகவிருத்தல் வேண்டும்)
8. விலைமனுக்கள் முடிவுறுத்தல் திகதியிலிருந்து 77 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாகும்.
9. சகல விலைமனுக்களுடனும் விலைமனு ஆவணத்தில் இணைக்கப்பட்டுள்ள வடிவத்தில் இலங்கையில் செயற்படும் புகழ்பெற்ற வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட எண்பத்தையாயிரம் ரூபா (85,000.00 இல. ரூபா) தொகைக்கான இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் பெயரில் வழங்கப்பட்ட விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் விலைக்கோரல் பிணை முறியானது விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 105 நாட்களுக்கு (2024-11-14ஆம் திகதி வரை) செல்லுபடியாதல் வேண்டும்.
10. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை தலைவர், திணைக்கள மேல்நிலை பெறுகைக் குழு என முகவரியிட்டு, பத்தரமுல்ல, பெலவத்த, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், 'A' கட்டிடம், 03ஆம் தளம், உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கு நகல் பிரதிகளுடன் ஒப்படைத்தல் வேண்டும்.
11. விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் 2024-08-01ஆம் திகதி பி.ப. 2.30 மணியாகும் என்பதுடன் முடிவுறுத்தல் நேரத்தின் பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
12. விலைமனுதாரர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.
13. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024-07-27ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பத்தரமுல்ல, பெலவத்த, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், 'A' கட்டிடம், 03ஆம் தளம், உதவி ஆணையாளர் (வழங்கல்) அலுவலகத்தில் இடம்பெறும்.
14. பெறுகைக் குழுவின் விருப்பத்தின் பேரில் மாத்திரமே ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்படுவார்.

**தலைவர்,**
**திணைக்கள மேல் நிலை பெறுகைக் குழு,**
**இலங்கை பரீட்சைகள் திணைக்களம்,**
**பெலவத்த, பத்தரமுல்ல.**
**2024-07-11**

## அறிவித்தல்

வ/ப ஹிரியால பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 2024.06.30ம் திகதியுடன் நிறைவுபெறும் வாக்குரிமையுள்ள அங்கத்தவர் பெயர் பட்டியல் மற்றும் 2024.06.30 திகதிய அங்கத்தவர் பெயர் பட்டியல் 2024.07.11 முதல் 2024.07.25 வரையான காலத்திற்குள் சங்கத்தின் தலைமையகத்தின், சங்கத்தின் வியாபார ஸ்தலங்கள் மற்றும் மூடப்பட்டுள்ள பிரதேச அலுவலகங்களுடன் சம்பந்தப்பட்ட பெயர் பட்டியல் கிட்டிய வியாபார ஸ்தலத்தில்/கிராமிய வங்கிக் கிளையில் காட்சிப்படுத்தப்படுவதாக தயவுடன் அறிவிக்கிறேன்.

வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் பதிவாளரினால் விநியோகிக்கப்பட்டுள்ள இல.2131/54 என்ற 2019.07.12ம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் திருத்தப்பட்ட இல.1981/2 என்ற 2016.08.22ம் திகதிய வர்த்தமானி மூலம் பொறியிடப்படும் வடமேல் மாகாண பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் பிரதேச செயற்குழு அங்கத்தவர்களை தேர்ந்தெடுக்கும் கூட்டுறவு வாக்கெடுப்பு கட்டளைக் கோவையின் பிரகாரம், இக் காட்சிப்படுத்தல் மேற்கொள்ளப்படுவதுடன் குறித்த அட்டவணையில் குறிப்பிடப்படும் பெயர்கள் அல்லது வேறு தகவல்கள் பிழையான நிலைமையில் இருப்பின் அதுபற்றி மேல் முறையீடு அல்லது பிழைத்திருத்தம் அல்லது உள்ளடக்கப்பட்டுள்ள பெயர் சம்பந்தமாக எதிர்ப்புகள் இருப்பின், காட்சிப்படுத்தல் கால எல்லைக்குள் சங்கத்தின் செயலாளரிடம் எழுத்துமூலம் சமர்ப்பிக்குமாறு இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

இப்பெயர் பட்டியல் பற்றிய தகவல்களை எமது, www.hiriyalampcs.lk என்ற இணையதளத்திலும் பெற்றுக்கொள்ளலாம் இவ் வாக்குரிமை அங்கத்தவர் பெயர்பட்டியலுக்கு உள்ளடக்கப்பட்டிருப்பது 2023.06.30 வரை அங்கத்தவர் பெயர்கள் மட்டும் என்பதை கவனியுங்கள்

கௌரவ பணிப்பாளர் சபையின் கட்டளைப் பிரகாரம்

**செயலாளர்**
**வ/ப ஹிரியால பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,**
**இப்பாகமுவ**
**037 - 4647403** **2024.07.10**

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

### 2024/2025 ஆம் ஆண்டுகளுக்காக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் மோட்டார் வாகன கூட்டத்திற்கான காப்புறுதித் திட்டம்

### B/40/2024

இலங்கை காப்புறுதி ஒழுங்காற்றல் ஆணைக்குழுவின் கீழ் புகழ்வாய்ந்த காப்புறுதி சேவை வழங்குநர்களிடமிருந்து ஒரு வருட காலத்திற்கு மேலேயுள்ள காப்புறுதி திட்டத்திற்காக கொழும்பு-09, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் விலைமனுக்களை இத்தால் அழைக்கின்றார். விலைமனுக்கோரல் ஆவணமானது http://ceypetco.gov.lk/public-tenders/ என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம் அல்லது 2024.07.30 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் கொழும்பு-09, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, 609 ஆம் இலக்கத்தின் 1 ஆம் மாடியிலுள்ள இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு விலைமனுவிற்கும் வரிகள் அடங்கலாக 2,000 ரூபாவை (ரூபா 1653.58 + 18% பெசேவ) மீளளிக்கப்படாத கட்டணமாக இபெகூ தலைமையக காசாளரிடம் செலுத்தப்படல் வேண்டும் அல்லது கீழே குறிப்பிடப்பட்டுள்ள இறுதி தினத்தன்று அல்லது அதற்கு முன்னராக விலைமனுவானது பதிவிறக்கம் செய்யப்பட்டால் மக்கள் வங்கி தலைமையகத்தின் 004100110208633 என்ற கணக்கிலக்கத்திற்கு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் பெயரில் வரவு வைக்கப்பட்டு விலைமனுவுடன் பற்றுச்சீட்டானது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனுவானது 2024.07.31 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு, மூடப்பட்ட நேரத்தின் பின்னர் உடனடியாகவே கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியின் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்தில் திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுவை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம். 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம், 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் ஒவ்வொரு பொது ஒப்பந்தத்திற்கும் எதிர்பார்க்கப்படும் விலைமனுதாரர் http://eroc.drc.gov.lk/ என்ற இணையதளத்தினூடாக கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்துடன் பதிவு பெற்றிருத்தல் வேண்டுமென்பதுடன் பொது ஒப்பந்த சட்ட (பிசிஏ) 3 சான்றிதழானது விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியின் பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள் செயற்பாடு மே/ பா.**
**01 ஆம் மாடி, இல. 609, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, கொழும்பு-09.**
**மின்னஞ்சல்:** supplies~@ceypetco.gov.lk

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

### வலு மற்றும் சக்தி அமைச்சு
### இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்
### Supply of White Cans
### B/41/2024

White Cans ஐ வழங்குவதற்காக புகழ்வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார்.

ஒப்பந்தத்தை பெறுவதற்கான தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் தகுதிநீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் விலைமனுக்கோரல் ஆவணத்தில் கூறப்பட்டுள்ள தகுதித்தன்மை மற்றும் தகைமை தகவுத்திறனுக்கு அமைந்தொழுகியிருத்தலும் வேண்டும்.

2024.07.30 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணி வரைக்குமிடையில் இபெகூ இற்கு மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000 ரூபாவை (4,133.94 + 2.5% SSCL + 18% VAT) செலுத்திய பின்னர், கொழும்பு-09, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, 609 ஆம் இலக்கத்தின் 1 ஆம் மாடியிலுள்ள இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து வேலைநாட்களில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.

அனைத்து விலைமனுக்களும் 260,000 ரூபா பெறுமதியான கேள்விப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

விலைமனுக்கள் 2024.07.31 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியின் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்தில் விலைமனுக்களின் மூடும் நேரம் முடிந்தவுடன் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம். 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் எதிர்பார்க்கப்படும் விலைமனுதாரர்கள் **https://eroc.dre.gov.lk/** என்ற இணையதளத்தின் வழியாக தம்மை கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்து அவர்களின் விலைமனுவுடன் பிசிஏ 3 சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

தெளிவுறுத்தல்கள் ஏதுமிருப்பின், 0773173920 என்ற தொலைபேசி இலக்கத்தின் வழியாக உதவி முகாமையாளரிடமிருந்து (Agro) பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள் முகாமையாளர் மே/பா.,**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**இல.: 609, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, கொழும்பு-09.இலங்கை.**
**தொலைபேசி : 0094-11-5455335**
**தொலைநகல் : 0094-11-5455424**

## இலங்கை புகையிரத சேவைகள்

# பெறுகை அறிவித்தல்

### 5,800 cubes of Track Ballast to upper District
### Procurement No.: SRS/F.8003

01. தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் அடிப்படையில் பின்வரும் அமைவிடங்களுக்கு வழித்தட சிறுகற்களை வழங்குவதற்காக வழங்குநர்களிடமிருந்து இலங்கை புகையிரத சேவைகள் திணைக்கள பெறுகைக் குழுத் (உயர் மட்டம்) தலைவர் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார். இந்த விலைமனுக்கள் கீழே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு அமைவிடத்திற்கும் தனித்தனியாக மதிப்பீடு செய்யப்பட்டு ஒப்பந்தம் வழங்கப்படும்.

| அம்ச இல. | அமைவிடம் | கியூப்புகளின் எண்ணிக்கை | ஒப்படைக்கும் காலப்பகுதி (மாதங்கள்) |
|---|---|---|---|
| 01. | மாத்தளை திறந்தவெளி | 1,000 | 08 |
| 02. | நாவலப்பிட்டிய திறந்தவெளி | 1,000 | 08 |
| 03. | வட்டவல திறந்தவெளி | 1,000 | 08 |
| 04. | ஹட்டன் திறந்தவெளி | 200 | 03 |
| 05. | கொட்டகல திறந்தவெளி | 50 | 02 |
| 06. | தலவாக்கலை திறந்தவெளி | 100 | 02 |
| 07 | வட்டகொட திறந்தவெளி | 50 | 02 |
| 08 | நானுஓய திறந்தவெளி | 100 | 02 |
| 09 | அம்பெவெல திறந்தவெளி | 500 | 04 |
| 10 | பட்டிப்பளை திறந்தவெளி | 200 | 03 |
| 11 | அப்பத்தளை திறந்தவெளி | 300 | 03 |
| 12 | தியதலாவ திறந்தவெளி | 200 | 03 |
| 13 | பண்டாரவளை திறந்தவெளி | 100 | 02 |
| 14. | ஹீல்-ஓயா திறந்தவெளி | 1,000 | 08 |

02. **2024.08.08** ஆம் திகதியன்று பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக 22,400 ரூபாவை (இருபத்திரெண்டாயிரத்து நானூறு ரூபா) மாத்திரம் செலுத்திய பின்னர், பெறுகைக்கான பிரதி பொது முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

03. விலைமனுக்கள் 2024.08.09 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடப்படும்.

04. விலைமனுதாரர் அவர்களின் விலைமனுவின் பகுதியொன்றாக 1,160,000 ரூபாவை மாத்திரம் (பதினொரு இலட்சத்து அறுபதினாயிரம் ரூபா பெறுமதியான கேள்விப் பிணையொன்றை வழங்கல் வேண்டும்.

05. விலைமனுக்கள் அவைகளின் மூடும் நேரத்தின் பின்னர், பெறுகைக்கான பிரதி பொது முகாமையாளரின் அலுவலகத்தில் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

06. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஒன்றில் கீழேயுள்ள முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாகவே ஒப்படைக்கப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்),**
**இலங்கை புகையிரத சேவைகள்,**
**பிரதி பொது முகாமையாளரின் அலுவலகம் (பெறுகை),**
**ஒல்கட் மாவத்தை, கொழும்பு-10.**

07. விலைமனுக்கோரல் ஆவணங்கள் பெறுகைக்கான பிரதி பொது முகாமையாளரின் அலுவலகத்தில் இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.

**தொலைபேசி இலக்கங்கள்: 2438078/2436818**
**தொலைநகல் இலக்கம்: 2432044**
**மின்னஞ்சல்** : srs/slr@gmail.com **இணையதளம்**: www.railway.gov.lk
tender2@railway.gov.lk

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்),**
**இலங்கை புகையிரத சேவைகள்**
**Ref. No.: SRS/F.8003**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## இலங்கை புகையிரத சேவைகள்

### பெறுகை அறிவித்தல்

### இலங்கை புகையிரத சேவைக்கு 5,000 சோடிகள் RAIL JOINT SHIMS 90(A) LBS வழங்குவதற்கான பெறுகை

**பெறுகை இல. SRS/F.8014**

01. இலங்கை புகையிரத சேவைகள் திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்) தலைவர், சர்வதேச போட்டிரீதியிலான விலைக்கோரலின் அடிப்படையில் இலங்கை புகையிரத சேவைக்கு 5,000 சோடிகள் RAIL JOINT SHIMS 90(A) LBS வழங்குவதற்காக முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை வெளிநாட்டுத் தயாரிப்பாளர்கள்/ வழங்குநர்களிடமிருந்து பெற்றுக்கொள்வார். விலைமனுதாரர்கள் தங்களது விலைமனுக்களை நேரடியாக அல்லது அற்றோனித் தத்துவம் அளிக்கப்பட்டவர்களுமான அதிகாரமளிக்கப்பட்ட இலங்கையில் பதிவு செய்யப்பட்ட முகவர்களின் ஊடாகச் சமர்ப்பிக்கலாம். சகல உருப்படிகளும் ஒன்றாக மதிப்பீடு செய்யப்பட்டு வழங்கப்படும்.

02. 6,100.00 ரூபா அல்லது அதற்குச் சமமானதும் இலகுவில் மாற்றக்கூடியதுமான வெளிநாட்டு நாணயத்தை மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாகச் செலுத்துவதன் பேரில் 2024-09-04ஆம் திகதியன்று பி.ப. 3.00 மணி வரையில் (இலங்கை நேரம்) இலங்கையில் கொழும்பு-10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத சேவைகள் களஞ்சிய அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து அல்லது வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களிலிருந்து பெறப்படக்கூடியதான படிவங்களில் மட்டுமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

03. 2024-09-05ஆம் திகதியன்று பி.ப. 2.00 மணிக்கு (இலங்கை நேரம்) விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும்.

04. தயாரிப்பு/ வழங்கலானது, ISO 9001:2008 எனும் தரச்சான்றிதழ் அளிக்கப்பட்டவையான, அல்லது அதற்குச் சமமான வகையில் கொள்வனவு செய்பவருக்கு ஏற்புடையதான சர்வதேச தர முகாமைத்துவ முறைமைக்குரிய நியமச் சான்றிதழ் பெற்றுள்ளவையான நிறுவனங்களினால் மட்டுமே மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

05. இலங்கை, இலங்கை புகையிரத சேவைகளின் (பெறுகைகள்) பிரதிப் பொது முகாமையாளரின் அலுவலகத்தில் வைத்து, விலைமனுக்களை ஏற்கும் காலம் முடிவடைந்த உடனடியாகவே அவை திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அவர்களின் பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் சமயத்தில் அங்கு சமுகமாயிருக்கும்படி கோரப்படுகிறார்கள்.

06. முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பதிவஞ்சல் மூலமாகவோ அல்லது நேரில் ஒப்படைப்பதன் மூலமாகவோ கீழ்க் குறிப்பிடப்பட்டவருக்குக் கிடைக்கச்செய்தல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு, (உயர் மட்டம்),**
**இலங்கை புகையிரத சேவைகள்,**
**பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்) அலுவலகம்,**
**ஒல்கொட் மாவத்தை,**
**கொழும்பு-10.**

07. விலைமனுதாரர்கள் 215,000.00 ரூபா (இரண்டு இலட்சத்து பதினைந்தாயிரம் ரூபா) தொகைக்கான பிணை முறியை அவர்களின் விலைக்கோரலின் ஒரு பகுதியாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

08. விலைமனு ஆவணங்களை பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்) அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

தொலைபேசி : 011-2438078 அல்லது 011-2436818 / 0114600209
தொலைநகல் : 011-2432044
மின்னஞ்சல் : tender2@railway.gov.lk/ srs.slr@gmail.com
இணையதளம் : www.railway.gov.lk

Ref. No. SRS/F.8014

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்)**
**இலங்கை புகையிரத சேவைகள்.**

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

2024 ஆம் ஆண்டு மே மாதத்திற்காகப் பின்வரும் சம்பளச் சபைகளின் முடிவுகளினால் மேவப்பட்ட வேலையாளர்களுக்கு ஏற்புடைத்தான சம்பள விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**எச். கே. கே. ஏ. ஜயசுந்தர**
**தொழில் ஆணையாளர் நாயகம்**

தொழில் திணைக்களம், கொழும்பு 05
2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 27 ஆம் திகதி

**கொக்கோ, ஏலக்காய், மிளகு என்பன வளர்த்தல் மற்றும் உற்பத்தித் தொழில்** } **வேலையாள் ஒரு நாளுக்கு ரூபா. 1870.06**

- இதற்கு மேலதிகமாக, 2005 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க வரவு செலவுத் திட்ட நிவாரணப்படிச் சட்டத்தின் நியதிகளின் படியும் மற்றும் 2016 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வரவு செலவுத்திட்ட நிவாரணப்படிச் சட்டத்தின் நியதிகளின் படியும் வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவை ஒவ்வொரு தொழில்தருநரும் குறித்த தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும்.

## எம்பிலிப்பிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலை உணவகத்தை குத்தகைக்கு விடுவதற்கான விலைமனுக்கோரல் - 2024/2025

01. எம்பிலிப்பிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளரால் 2024/2025 ஆண்டில் ஒருவருட காலத்திற்கு உணவகத்தைக் குத்தகைக்கு விடுவதற்கான போட்டி விலைமனுக்கள் கோரலின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. இதுபற்றிய மேலதிக விபரங்களை எம்பிலிப்பிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலையின் கீழ்க்காணும் தொ.பே. இலக்கத்தை அழைத்துப் பெற்றுக்கொள்ள முடிவதுடன் இதன் இறுதித் தீர்மானம் பெறுகைக் குழுவினால் மேற்கொள்ளப்படும்.

**தொ.பே. இல.: 047-2230261 / 2230994**

03. ரூபா 5000.00 தொகையை எம்பிலிப்பிட்டிய பொது வைத்தியசாலையின் கணக்குப்பிரிவின் காசாளருக்கு செலுத்தி 2024.07.15 முதல் 2024.07.30 வரை வாரத்தின் அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

04. இதுபற்றிய கேள்விகோரலுக்கு முன்னைய கூட்டம் எம்பிலிப்பிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலையின் கேட்போர் கூடத்தில் 2024.07.24 மு.ப. 10.30 இற்கு நடைபெறும். சகல கேள்விதாரர்களும் இக் கூட்டத்தில் சமுகமளிக்குமாறு அறிவிக்கப்படுகிறது.

05. விலைமனுக்கள், பணிப்பாளர், மாவட்ட பொது வைத்தியசாலை எம்பிலிப்பிட்டிய என்ற முகவரிக்கு 2024.08.01 பி.ப. 2.00 இற்கு முன்பு கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது மேற்படி முகவரியில் கணக்குப்பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் வைப்புச் செய்தல் வேண்டும். மேலும் விலைமனுக்கள் சமர்ப்பிக்கும் போது விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் கடித உறையின் இடது மேல் மூலையில் "உணவகத்தை குத்தகைக்கு விடுவதற்கான விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் 2024/2025" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் அவ் விலைமனுக்கள் கொள்வனவாளர்கள் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் பிற்பகல் 2.30 இற்கு வைத்தியசாலையின் விரிவுரை மண்டபத்தில் கேள்விகள் திறக்கப்படும்.

06. சகல விலைமனுக்களும் ரூ. 75,000.00 மீளளிக்கப்படும் காசு வைப்புடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

07. எந்தக் கேள்விகள் சம்பந்தமாகவும் ஏற்படும் செலவுகள் பற்றி இவ் வைத்தியசாலையினால் பொறுப்புக்கூறப்படமாட்டாது. மேலும் எந்தக் கேள்வியை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை வைத்தியசாலையின் பெறுகைக் குழுவின் தலைவருக்கு உரியது

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை, எம்பிலிப்பிட்டிய**
**2024.07.11**

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

## இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

### விலைமனுக்களுக்கான அழைத்தல்

1. கீழே வழங்கப்பட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | கேள்வி பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/04/ PT/6591(EL) | 04 Numbers of Regulateurs Europa Viking 35 Digital Governor Controllers | 200,000.00 | 3,500.00 | 2024.08.22 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/04/ PT/6596(MP) | 08 Nos. Trolley Wheels of 50T ZPMC STS Crane at JCT | 48,000.00 | 1,000.00 | 2024.08.22 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CMS/LP/24/ PT/08/013 | 01 No. Scanner A2 Flatbed – color | 30,000.00 | 1,000.00 | 2024.08.01 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/24/ PT/07/055 | Turbo Chargers for Mercedes Benz Engine | 45,000.00 | 1,000.00 | 2024.08.01 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/24/ PT/17/054 | GI Pipe Heavy Duty | 40,000.00 | 1,000.00 | 2024.08.01 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்துசாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும்,எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குநரொருவருக்கு மற்றும் அவர் சார்பாகவும் முகவரொருவராக, உபமுகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிட்டரொருவராக செயற்படவிரும்பினால்,பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் அவரை பதிவுசெய்து உரியமுறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச்சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும் (பிசிஏ 03 படிவம்)

3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக்குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.


4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

5. 2024 ஜூலை 12 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலைநாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணிவரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஆங்கிலமொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் மூடும் திகதிக்கு முன்னைய நாள் வரையும் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள உரித்தான விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45,லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638.**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**

Trusted Marketplace of Classified Advertisers
Sunday Observer adz it's what you want Classified


For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-
077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

### பிராந்திய சுகாதார சேவைகள் பணியகம், வவுனியா

### வேலைகள், உணவுக்கூடம் மற்றும் சலவை சேவைகளை வழங்கல்

கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான பெறுகைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணியக பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

| தொ. இல. | விலைமனு இலக்கம் | வேலையின் விளக்கம் | ஒப்பந்தக் காலம் | மீளளிக்கப் படாத கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்விப் பிணை மற்றும் செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|
| **வேலைகள்** | | | | | |
| 01. | NP/04/43/03/BCP/ LM/2024/01 | செட்டிக்குளம் தள வைத்தியசாலையின் ஔடத களஞ்சியசாலையின் வசதிகளை மேம்படுத்தல் | 02 மாதங்கள் | 2,000.00 | 15,000.00 2024.10.10 ஆம் திகதியன்று வரையும் |
| 02. | NP/04/43/03/BCP/ LM/2024/02 | வவுனியா தாதிமார் பயிற்சி பாடசாலையின் வகுப்பறையை புதுப்பித்தல். | 01 மாதம் | 2,000.00 | 7,000.00 2024.10.10 ஆம் திகதியன்று வரையும் |
| **உணவுக்கூட சேவைகள்** | | | | | |
| 01. | NP/04/43/02/CAT/ RDHS/2024/01 | வவுனியா, மன்னார் வீதி, பிசுசேப அலுவலக உணவுக்கூட சேவைகள் | 12 மாதங்கள் | 2,000.00 | 10,000.00 2024.10.10 ஆம் திகதியன்று வரையும் |
| 02. | NP/04/43/02/CAT/ MOH/2024/01 | வவுனியா, யாழ்ப்பாண வீதி, சுமஅ அலுவலக உணவுக்கூட சேவைகள் | 12 மாதங்கள் | 2,000.00 | 10,000.00 2024.10.10 ஆம் திகதியன்று வரையும் |
| 03. | NP/04/43//02/ CAT/BH/2024/01 | வவுனியா, செட்டிக்குள தள வைத்தியசாலை உணவுக்கூட சேவைகள் | 12 மாதங்கள் | 2,000.00 | 10,000.00 2024.10.10 ஆம் திகதியன்று வரையும் |
| **சலவைச் சேவைகள்** | | | | | |
| 01. | NP/04/43/02/ Laundry/2024/1 | வவுனியாவின் வைத்தியசாலைகள் மற்றும் சுமஅ அலுவலகங்களுக்கான சலவைச் சேவைகள் | 12 மாதங்கள் | 2,000.00 | அம்ச இல. 6b ஐ பார்க்கவும் |

1. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் முறையினூடாக நடத்தப்படும்.
2. 2024.07.11 ஆம் திகதியிலிருந்து 2024.07.24 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் ஒவ்வொரு வகுதிக்கும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், வவுனியா, மன்னார் வீதி, சுகாதார சேவைகள் பிராந்திய பணியகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், (தொ.இல. 024-2224865. தொலைநகல்: 024-2222892) ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
3. 2024.07.25 ஆம் திகதியன்று விலைமனுக்களை மூடும் நேரத்திற்கு (மு.ப. 10 மணி) அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் தன்மையில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு மற்றும் சுகாதார சேவைகள் பிராந்திய பணியகம், மன்னார் வீதி, வவுனியா என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை மேலேயுள்ள 2 ஆம் பந்தியில் வழங்கப்பட்டுள்ள முகவரியிலிருந்து பெற்று விலைமனுக்கோரல் ஆவணங்களை அதே இடத்தில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் பரீட்சிக்கலாம்.
5. 2024.07.18 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு வவுனியா மன்னார் வீதியிலுள்ள சுகாதார சேவைகள் திணைக்கள பிராந்திய பணிப்பாளரின் அலுவலகத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறுவதுடன், இதில் அனைவரும் பங்குபற்றுதல் கட்டாயமானதாகும்.
6. அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தகவலின் பிரகாரம் விலைமனுக்கள் கேள்விப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அதேவேளையில் சலவை சேவைகளுக்கான கேள்விப் பிணையானது விலைமனுக்கோரல் ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ளது.

**மருத்துவர் (திருமதி) எஸ். சுபாஸ்கரன்,**
**தலைவர், பிராந்திய பெறுகைக் குழு,**
**சுகாதார சேவைகளின் பிராந்திய பணியகம்,**
**வவுனியா.**

**11.07.2024**

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

### மாகாணங்களுக்கு இடையேயான வழக்கமான பயணிகள் சேவை அனுமதிகளை வழங்குவதற்காக விண்ணப்பங்களுக்கான மனுக்கோரல்

மாகாணங்களுக்கிடையிலான (நெடுஞ்சாலை வழியாக) பயணிகள் போக்குவரத்து சேவைகளுக்கான புதிய பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வீதி இலக்கம் 2 இன் கீழ் மாத்தறை - கொழும்பு வீதியில் அதிசொகுசு வாகன அனுமதி பத்திரங்களை வைத்திருப்பவர்கள் மற்றும் வீதி இலக்கம் 2-1 இன் கீழ் காலி-கொழும்பு விதியில் அதிசொகுசு வாகன அனுமதிப் பத்திரங்களை வைத்திருப்பவர்களும் இதற்காக விண்ணப்பிக்கலாம். மேலதிக தகவல்களை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் **www.ntc.gov.lk** அல்லது ஆணைக்குழுவின் அலுவலகத்திற்குச் சென்று பெற்றுக்கொள்ள முடியும்.

தலைவர்
**தேசிய போக்குவரத்து ஆணைக்குழு,**
**பார்க் வீதி,**
**கொழும்பு 05.**

SELACINE

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## கேள்விகோரல்

### ‘துரு மங் பெத்’ தேசிய நெடுஞ்சாலைகள் இரு மருங்கிலும் நிழல் தரும் மரங்களை நடும் செயற்றிட்டம் - 2024

01. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பெறுகைக் குழுவின் தலைவரால், “துரு மங் பெத்” - தேசிய நெடுஞ்சாலைகள் இரு மருங்கிலும் நிழல் தரும் மரங்களை நடும் செயற்றிட்டத்திற்காக தகுதியான, தகைமையான கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.
02. வீதி அபிவிருத்தி அதிகார சபை நிறைவேற்று முகவரகம் ஆகும்.
03. கேள்விகோரல் தேசியபோட்டி கேள்விகோரல் முறைமையின் பிரகாரம் இடம்பெறும்.
04. கேள்விகள் 2024.10.25ம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.
05. கேள்விகள், ரூ. 35,000.00 பெறுமதியுடைய கேள்விப் பிணையொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும். (2024.10.25 வரை செல்லுபடியாவதுடன் மாகாணப் பணிப்பாளர் (சபரகமுவ) வீதி அபிவிருத்தி அதிகார சபை, இரத்தினபுரி என்ற பெயருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்) எந்த செல்லுபடியாகும் கேள்விப்பிணை கொண்டிராத கேள்விகளும் நிராகரிக்கப்படும்.
06. கேள்வி ஆவணங்கள் உள்ளடக்கப்பட்ட சகல பக்கங்களும் கேள்விதாரரால் கையொப்பமிடப்படுவதுடன் அவரது உத்தியோகபூர்வ முத்திரையை இடுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்
07. கேள்விக்கு முன்னரான கூட்டம் 2024.07.18 மு.ப. 10.00 இற்கு குறித்த மாகாணப் பணிப்பாளர் பணிமனையில் நடைபெறும்.
08. வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான மாகாணப் பணிப்பாளர் பணிமனையில் எந்தக் கொடுப்பனவும் இன்றியே அலுவலக நேரங்களில் கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
09. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் 2024.07.11 முதல் 2024.07.25 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் மீளளிக்கப்படாத ரூ. 3,000.00 (வெட் பாதுகாப்பு வரியுடன்) கட்டணத்துடன் எழுத்துமூல விண்ணப்பத்தை குறித்த மாகாணப் பணிப்பாளர் பணிமனைக்கு சமர்ப்பித்து முழுமையான கேள்வி விண்ணப்பப்படிவத் தொகுதியைப் பெற்றுக்கொள்ளலாம். 2024.07.26 பி.ப. 2.00 இற்கு கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவுறும்.
10. பொறியிடப்பட்ட, கேள்விகள் இரு பிரதிகளுடன் குறித்த தினம் மற்றும் நேரத்திற்கு முன்பு குறித்த மாகாணப் பணிப்பாளர் பணிமனை (சபரகமுவ) வீதி அபிவிருத்தி அதிகார சபை, இல. 04, பண்டாரநாயக்க மாவத்த, இரத்தினபுரி என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது கையோடு கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும். கேள்விகள் உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் “துரு மங் பெத் - தேசிய நெடுஞ்சாலை இருமருங்கிலும் மரங்களை நடும் செயற்றிட்டம் - 2024” என்று குறிப்பிடுதல் வேண்டும்.
11. இரத்தினபுரி வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மாகாணப் பணிப்பாளர் பணிமனையில் கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் மேற்படி கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர்களுக்கு அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு அவ்வேளையில் சமுகமளிக்கலாம்.
12. மேலதிக விபரங்களுக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (சொத்து முகாமைத்துவ மற்றும் வருமானப் பிரிவு) தொ.பே. இல. 011-2864799 மூலம் மற்றும் மாகாணப் பணிப்பாளர் பணிமனை தொ.பே. இல.: 045-2222608ஐ அழைக்கலாம்.

**மாகாண பணிப்பாளர் (சபரகமுவ)**
**வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பெறுகைக் குழு**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை**
**1ம் மாடி, மஹநெகும, மஹமெதுர, இல. 216,**
**டென்சில் கொப்பேகடுவ மாவத்த, கொஸ்வத்த,**
**பத்தரமுல்ல**

## வாகனங்கள் விற்பனைக்கு

| வாகன இல. | வகை | மாதிரி | வருடம் |
|---|---|---|---|
| **கார்** | | | |
| KH -9XXX | MARUTI 800 | | 2008 |
| **கெப்** | | | |
| DAC -8XXX | TATA | XENON LIGHT TRUCK | 2016 |
| **லொறி** | | | |
| PR -9XXX | MAHINDRA | MAXXIMO | 2011 |
| PT -8XXX | TATA | ACE | 2011 |
| DAC -4XXX | TATA | ACE XPRESS CDI | 2015 |
| **முச்சக்கர வண்டிகள்** | | | |
| HE -5XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2003 |
| QA -5XXX | BAJAJ | AUTO RE 2 STORKE | 2005 |
| QC -6XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2005 |
| QF -0XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QU -9XXX | BAJAJ | BAJAJ 4S | 2009 |
| QV -2XXX | BAJAJ | BAJAJ 4 S | 2009 |
| YF -0XXX | BAJAJ | AR RE 200 | 2010 |
| YI -0XXX | BAJAJ | RE 205 | 2010 |
| YO -4XXX | BAJAJ | RE 205 | 2011 |
| AAP -7XXX | BAJAJ | RE | 2014 |

வாகன பரிசீலித்தல்களுக்கு:
**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ**
வாகன முற்றம் - இல.176, வாவி வீதி, மஹரகம.
தொ.பேசி : 0112 088 505

### வாகன பரிசீலித்தல்களுக்கான திகதிகள்

மேற்குறிப்பிட்ட விலாசத்தில் 2024 ஜுலை 11ஆம், 12ஆம், 15ஆம் மற்றும் 16ஆம் திகதிகளில் மு.ப.9.00 முதல் பி.ப.5.00 வரை பரிசீலிக்க முடியும். (கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படுவது 2024 ஜுலை 16ஆம் திகதி பி.ப.5.00 மணியுடன் நிறைவுபெறும்)

மீளப் பெற முடியாத கட்டணமான ரூ.200/-ஐ செலுத்தி கேள்வி படிவங்களை மேற்குறித்த விலாசத்தில் மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ வாகன முற்றத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். வெற்றிகரமான கேள்விதாரர் தொலைபேசியூடாக அறிவிக்கப்படுவதுடன் அதனுடன் தொடர்பான வாகனம் அறிவிக்கப்பட்டதிலிருந்து 7 நாட்களுக்குள் அப்புறப்படுத்தப்பட வேண்டும். கேள்வியிலிருந்து எந்தவொரு காரணத்தையும் கூறாமல் எந்தவொரு வாகனத்தையும் விலக்கிக் கொள்ள கம்பனிக்கு பூரண உரிமையுண்டு. அத்தோடு வெற்றிகரமான கேள்விதாரர் வாகனத்தை அதன் தற்போதைய நிலையிலேயே பொறுப்பேற்க வேண்டியதோடு, அதனுடன் தொடர்பான அரச வரி மற்றும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் போன்றவற்றின் நிலுவைக் கட்டணங்கள் இருப்பின் அவற்றையும் கேள்விதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

இக் கேள்விகள் தொடர்பான மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ இன் முடிவுகளே இறுதியானதாகும்.

www.skillsads.com

**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ**

Mercantile Investments and Finance PLC

தலைமை அலுவலகம்
236, காலி வீதி, கொழும்பு - 03
தொ.பேசி: 2343720 - 7 நீட்சி: 210

தொடர்பு:
**திளேஷ் - 0718 751 995**
**0711 624 559**

**Best way to fulfil your Future Dreams**

*Marriage Proposals*

**in the**

**Sunday Observer**

## கேள்விகள் சமர்ப்பிக்கும் தினத்தை நீடித்தல்

### விவசாயத் திணைக்களம் - பழைய கலஹா வீதி, பேராதனை

01. பேராதனை, விவசாயத் திணைக்களத்தின் செயற்றிட்ட மற்றும் பயிற்சி நிலையத்தின் பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரால் 2023.06.20ம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட கட்டிடங்களை பழுதுபார்த்தல் பற்றிய கேள்விகோரல் நாட்கள் கீழ்க்காணுமாறு திருத்தப்படுகிறது.
02. அப்பெறுகை விடயங்களுடன் சம்பந்தப்பட்ட கேள்வி ஆவணங்கள் மற்றும் படிவங்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய கால எல்லை 2024.07.15 பி.ப.2.00 வரை நீடிக்கப்படுகிறது. சகல புதிய கேள்விகளினதும் செல்லுபடியாகும் கால எல்லை 07 நாட்களால் நீடிக்கப்படல் வேண்டும்.
03. கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் 2024.07.16 மு.ப.10.30 இற்கு முடிவுறுத்தப்படும். அன்றே மு.ப.10.30 இற்கு விவசாயத் திணக்களத்தின் செயற்பாட்டு மற்றும் பயிற்சி நிலையத்தில் கேள்விகள் திறக்கப்படும்.
04. ஏனைய சகல விதிகளும் நிபந்தனைகளும் 2024.06.20 என்ற அறிவித்தலில் குறிப்பிடப்படுமாறு மாற்றமின்றிக் காணப்படும்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு**
**செயற்றிட்ட மற்றும் பயிற்சி நிலையம்**
**விவசாயத் திணைக்களம்**
**பழைய கலஹா வீதி, பேராதனை**

**தொ.பே. இலக்கம் : 081- 2389127**
**பெக்ஸ் : 081 - 2387403.**

## வனசீவராசிகள் மற்றும் வனபாதுகாப்பு அமைச்சு
## வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம்
## அறிவித்தல்

தேசிய சூழற்பாதுகாப்பு சட்டத்தின் 23BB , உபபிரிவு (2) இன் கீழ் மற்றும் 2009 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க விலங்கினங்கள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு (திருத்தப்பட்டது) சட்டத்தின் 9A இன் கீழான

உத்தேசிக்கப்பட்ட வீடமைப்புத்துறை செயற்றிட்டம் - விக்டோரியா ரெசிடென்சீஸ் (பிவிட) எல்டீடி

1988 ஆம் ஆண்டின் சட்டம் இல. 56 மற்றும் 2000 ஆம் ஆண்டின் 53 ஆம் சட்டம் மற்றும் விலங்கினங்கள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு (திருத்தம்) சட்டம் எண் 20092 இன் 9A இன் கீழ் திருத்தப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க உத்தேச சுற்றுச்சூழல் சட்டத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆய்வின் அறிக்கையானது பொதுமக்களின் பரீட்சித்தலுக்காக பின்வரும் அமைவிடங்களில் வைக்கப்படும்.

- வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்
  811/A, ஜயந்திபுர வீதி, பத்தரமுல்ல
- மத்திய சுற்றாடல் அதிகாரசபை
  “பரிசர பியச”, 104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல
- பிரதேச செயலாளர், (மெததும்பர)
- பிரதேச சபை (மெததும்பர)
- மத்திய பிராந்திய அலுவலகம், வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம், 9 ஆம் மைல் கட்டை, ரந்தம்பே

எந்தவொரு பொதுமக்களும் 30 நாட்களுள் மேலேயுள்ள ஆவணம் தொடர்பாக அவர்களின் கருத்துரைகளை எழுத்தில் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம், 811/A, ஜயந்திபுர வீதி, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பலாம்.

**பணிப்பாளர் நாயகம்,**
**வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம்,**
**811/A, ஜயந்திபுர வீதி,**
**பத்தரமுல்ல.**
**10.07.2024**

## பதிப்புரிமைகள் எச்சரிக்கை அறிவித்தல்

### (Copyrights Caution Notice)

### Rahmath Pathipagam (Chennai) Private Limited

இந்தியா, தமிழ்நாடு 600004 சென்னை, மயிலாப்பூர், CIT கொலனி, இரண்டாம் பிரதான வீதி, 6 ஆம் இலக்கம் என்ற முகவரியைச் சார்ந்த இந்தியச் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியொன்றான எமது வாடிக்கையாளரான Rahmath Pathipagam (Chennai) Private Limited ஆனது கீழே குறிப்பிடப்பட்டுள்ள புத்தகங்கள் 2024 ஜனவரி 1 ஆம் திகதியிலிருந்து இலங்கையில் விநியோகிக்கப்பட்டுள்ளதுடன் பொது மக்கள் அவற்றை பெற்றுக் கொள்ளலாமென பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றது.

| BOOK NAME | BOOK NAME |
|---|---|
| SAHEEHUL BUHARI - 1 | SUNAN ABUDAWOOD - 1 |
| SAHEEHUL BUHARI - 2 | SUNAN NASAYEE - 1 |
| SAHEEHUL BUHARI - 3 | SUNAN NASAYEE - 2 |
| SAHEEHUL BUHARI - 4 | SUNAN NASAYEE - 3 |
| SAHEEHUL BUHARI - 5 | THAFSEER IBNU KASEER - 8 |
| SAHEEHUL BUHARI - 6 | JAMIED - THIRMITHI - 4 |
| SAHEEHUL BUHARI - 7 | JAMIED - THIRMITHI - 5 |
| SAHEEHUL MUSLIM - 1 | SUNAN NASAYEE - 4 |
| THAFSEER IBNU KASEER - 1 | SUNAN IBNUMAAZAH - 1 |
| SAHEEHUL MUSLIM - 2 | THAFSEER IBNU KASEER - 9 |
| THAFSEER IBNU KASEER - 2 | SUNAN ABUDAWOOD - 2 |
| SAHEEHUL MUSLIM - 3 | SUNAN IBNUMAAZAH - 2 |
| THAFSEER IBNU KASEER - 3 | THAFSEER IBNU KASEER -10 |
| SAHEEHUL MUSLIM - 4 | SHAMAYIL THIRMITHI |
| JAMIED - THIRMITHI - 1 | SUNAN ABUDAWOOD - 3 |
| THAFSEER IBNU KASEER - 4 | SUNAN ABUDAWOOD - 4 |
| THAFSEER IBNU KASEER - 5 | SUNAN ABUDAWOOD - 5 |
| JAMIED - THIRMITHI - 2 | SUNAN IBNUMAAZAH - 3 |
| THAFSEER IBNU KASEER - 6 | SUNAN IBNUMAAZAH - 4 |
| JAMIED - THIRMITHI - 3 | SUNAN IBNUMAAZAH - 5 |
| THAFSEER IBNU KASEER - 7 | MISKAT AL MASABIH |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள புத்தகங்கள் Rahmath Pathipagam (Chennai) Private Limited இன் பதிவு செய்யப்பட்ட தனியுரிமை உள்ளடக்கங்கள் ஆகும்.

இலங்கையிலுள்ள சட்ட நீதிமன்றத்தில் உரிமையாளரின் மேற்கூறப்பட்டுள்ள உரிமைகளை போலியாக்கும், பின்பற்றும், மீறும் அல்லது வேறுவகையில் வரம்புமீறும் எந்தவொரு நபர், நிறுவனம் அல்லது கூட்டுத்தாபனம் மற்றும் மேலே கூறப்பட்டவாறான எமது வாடிக்கையாளரின் இலங்கையிலுள்ள பதிப்புரிமையின் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்படாத பாவனைக்கு வழிவகுக்கும் அனைத்து செயற்பாடுகளிலும் ஈடுபடுபவர்களுக்கெதிராக எமது வாடிக்கையாளரின் சட்டரீதியிலான உரிமைகளை பாதுகாப்பதற்காக பொருத்தமான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**Rahmath Pathipagam (Chennai) Private Limited** இனால் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்படாமல் பாவனை செய்யப்படும் மேலே குறிப்பிட்டுள்ள சொற்கள் அல்லது வர்த்தக இலட்சினைகள் தொடர்பாக எவ்வித அறிவு/ தகவல் தெரியவரும் பொதுமக்கள் கீழே குறிப்பிட்டுள்ள சட்டத்தரணிகளுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்படுகின்றனர்.

அவர்களின் சட்டத்தரணிகள்
**SELVAM & SELVAM**
புலமைச் சொத்து சட்ட நிறுவனம்
அலைபேசி: +91 9940067841|மின்னஞ்சல்: **info@selvams.com**
பழைய இல.: 9, வள்ளியம்மாள் தெரு, முதலாம் மாடி, கீழ்ப்பாகம், சென்னை-600010. தமிழ்நாடு, இந்தியா

## பெறுகை அறிவித்தல்

## பொது வைத்தியசாலை - கேகாலை

## தனியார் வீடுகளை வாடகைக்கு பெறல் (2024/2025)

கேகாலை பொது வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரால் வைத்திய நிபுணர்களுக்கு விடுதி வசதிகளை வழங்குவதற்குப் பொருத்தமான இரு வீடுகளை வாடகைக்கு பெறுவதற்கு பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | வீடு தேவைப்படும் விடயம் | தேவையான வீடுகளின் எண்ணிக்கை | இருக்க வேண்டிய வசதிகள் |
|---|---|---|---|
| 01. | வைத்திய நிபுணர் களுக்காக | 02 | ➢ ஒரு அறை 150 சதுர அடியைக் கொண்ட குறைந்தபட்சம் 04 அல்லது அதற்கு மேற்பட்ட மற்றும் சகல அறைகளுக்குமான மலசலகூடம் மற்றும் குளியலறை வசதிகள் இருத்தல் வேண்டும்.<br>➢ சகல வசதிகளுடனான பொது மண்டபம் மற்றும் சமையலறை இருத்தல்<br>➢ குறைந்தபட்சம் 04 வாகனங்களை நிறுத்தி வைக்கக்கூடிய இடவசதிகளுடனான தரைப்பிரதேசம் இருத்தல் |

பூர்த்தி செய்ய வேண்டிய பொதுவான தேவைப்பாடுகள் விண்ணப்பப்படித்தில் தரப்பட்டுள்ளன.

இதற்கு தேவையான விண்ணப்பங்களை இவ் வைத்தியசாலையின் காசாளர் பிரிவிற்கு ரூ.1000.00 செலுத்தி 2024.07.11 முதல் வேலை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.2.00 வரை பெற்றுக்கொள்ளலாம். அவ் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து, 2024.07.31 மு.ப.10.00 இற்கு முன்பு கிடைக்குமாறு தலைவர், பிரதேச பெறுகைக் குழு, பொது வைத்தியசாலை, கேகாலை என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம். அல்லது கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உள்ளிடல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் “கேகாலை பொது வைத்தியசாலைக்கு தனியார் வீடுகளை வாடகைக்கு பெறல்” என்று குறிப்பிட்டு அனுப்புமாறு தயவுடன் வேண்டுகிறேன்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**பொது வைத்தியசாலை,**
**கேகாலை.**
**2024.07.11**

adz.lk
it's what you want

The Trusted Market place for Buying & Selling

Contact Us:-
011 2 429 369
077 7 270 067
077 7 270 845
adzsuo@lakehouse.lk